# குழந்தை உளவியலும் கல்வியும்

## Child Psychology and Education




ஜோன் கென்றி பெஸ்டலோசி, ஜோன் பிரட்ரிக் கேர்பார்ட், பிரெட்ரிக் புரோபல்,
மரிய மொன்ரிசோரி, ஸ்ரான்லி ஹோல், அல்பிரெட் பீனே, புறூனர்,
பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, அழ வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர்

பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா

யாழ். பல்கலைக்கழகம்

# குழந்தை உளவியலும் கல்வியும்

பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா
கல்வியியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

வெளியீடு
பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு,
கொழும்பு - 13.

# Child Psychology and Education

**Subject**
Child Psychology

**Author**
© Prof. Saba Jeyarasah.
B.E.d, M.A, Ph.D.
Department of Education,
University of Jaffna, Sri Lanka.

**First Edition**
1st of November 2005

**Copy Right**
Author

**Publishing Editor**
V.N.S. Udayasanthiran
B.A, B.E.d (Hons) Dip.in .Ed, M.A (Jou)

**Publisher**
Poobalasingam Book Depot
202, Sea Street, Colombo - 11.
Tel : 011 2422321

**Laser Type Setting**
R. Vinothini

**Cover Designed By**
Sudath Wijesinghe

**On the Cover**
Aakarsana Udayasanthran

**Printers**
E-Kwality Graphics (Pvt) Ltd.
315, Jampettah Street,
Colombo - 13. Tel : 011 2389848

**Paper**
70 GSM Bank Paper.

**Font Size** : 12 Points

**Pages** : viii + 179

**Price** : 350.00

**ISBN 955-9396-09-9**

*வெள்ளி விழாவைக்*
*கொண்டாடிக் கொண்டிருக்கும்*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக்*
*கல்வியியல் துறையின்*
*வாண்மைப் பேறு பெற்றோர்*
*அனைவருக்கும்*
*இந்நூல்*
*சமர்ப்பணம்.*

# நூலாசிரியர் உரை

குழந்தை உளவியல் என்பது மிகப் பெரும் அறிகைத் துறையாகவும் ஆய்வுத்துறையாகவும் இன்று வளர்ச்சி பெற்று வருகின்றது. வளர்ச்சி யடைந்த பல்கலைக்கழகங்கள் குழந்தை உளவியலுக்கெனத் தனியாக துறைகளை அமைத்து உயர்மட்டக் கற்பித்தலிலும், ஆழ்ந்த ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

தமிழில் ஒரு சில உளவியல் நூல்கள் வெளிவந்துள்ள பொழுதும் குழந்தை உளவியலின் நவீன ஆய்வுகளை உள்ளடக்கிய நூல் எதுவும் வெளிவரவில்லை. இக்குறையை நீக்கும் வண்ணம் ஓர் அகல்விரி நூலை எழுதித்தரும்படி பாலர் கல்வி ஆசிரியர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் பெற்றாரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

குழந்தை உளவியல் தொடர்பான ஆங்கில நூல்களையும், ஆய்வுச் சஞ்சிகைகளையும் தந்துதவி இந்நூலை எழுதும்படி உற்சாகமளித்த நண்பர்களுக்கும் இங்கிலாந்திலிருந்து நூல்களை அனுப்பி வைத்த அன்புக்குரிய மாணவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

நிறைவாக, இந்நூலை வெளியிட்டு வைக்கும் பூபாலசிங்கம் நிறுவனத்தினருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

கல்வியியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

அன்புடன்
**சபா. ஜெயராசா**

# பதிப்புரை

பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் எழுதிய "குழந்தை உளவியலும் கல்வியும்" என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். ஆரம்பக்கல்வியுலகிற்குப் பெரிதும் பயன்படக்கூடிய உளவியல் சார்ந்த காத்திரமான நூல் தமிழில் வெளிவரவில்லை. இக் குறையை எனக்கு நண்பர் வி.என்.எஸ். உதயசந்திரன் சுட்டிக் காட்டியதோடு மட்டுமன்றி பேராசிரியரையும் அணுகி இந் நூலை வெளியிடுவதற்கான அனுமதியையும் பெற்றுத் தந்தார். அத்தோடு நின்றுவிடாது நவீன வடிவமைப்பில் நூல் வெளிவர வேண்டும் என்பதற்காக நூல் வடிவமைப்பிலும் கவனம் செலுத்தினார்.

இந்த நூலை நான் வாசித்த போது சிறார்கள் பற்றிய பல விடயங்கள் அறிந்திராமையை உணர்ந்து கொண்டேன். சிறார்களை எப்படி வளர்க்க வேண்டும். அவர்களை எவ்வாறு அணுக வேண்டும். அவர்களின் தேவை என்ன என்பதையெல்லாம் விரிவாக அறிந்து கொள்ள முடிந்தது. மேலைத்தேய சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் தமிழ் மரபுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் தெளிவாக அறிய முடிந்தது. இந்தநூலை ஒவ்வொரு பெற்றோரும் வாசிக்க வேண்டும் என்பது எனது அவா.

இந்த நூல் முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கல்வியியற் கல்லூரி விரிவுரை யாளர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பவர்கள், பட்டமேற்கல்வி மாணவர்கள் ஆகியோருக்குப் பெரிதும் துணை புரியும் என்று நம்புகின்றேன். இந்நூலை அழகுற அச்சமைப்புச் செய்து தந்த ஈக்குவலிற்றி கிரபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் அதன் முகாமையாளர் எஸ். ரஞ்சகுமாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

202, செட்டியார் தெரு,
கொழும்பு - 13.

அன்புடன்
**– ஆர்.பி. ஸ்ரீதரசிங் –**

# உள்ளடக்கம்

## பகுதி I

### குழந்தை உளவியல்


1. குழந்தை உளவியற் கோட்பாடுகள் 3
2. குழந்தை உளவியலின் உலகளாவிய வளர்ச்சி 10
3. குழந்தை உளவியல் ஆய்வு முறைகள் 15
4. நடத்தைக்குரிய உயிரியல் மற்றும் சமூக அடிப்படைகள் 25
5. குழந்தையும் குடும்பச் சூழலும் 31
6. மனவெழுச்சி வளர்ச்சி 34
7. அறிகை மேம்பாடு 48
8. மொழி வளர்ச்சி 55
9. சமூக மயமாக்காலும் ஆளுமை மேம்பாடும் 60
10. நினைவாற்றல் வளர்ச்சி 63
11. குழந்தை உளவியலும் விளையாட்டுக்களும் 67
12. குழந்தைகளும் இயல்காற்றல் குலைவும் 71


## பகுதி II

### குழந்தைக் கல்விச் சிந்தனைகள்


1. ஜோன் கென்றி பெஸ்டலோசி. 83
2. ஜோன் பிரட்ரிக் கேர்பார்ட் 88
3. பிரெட்ரிக் புரோபல் 92
4. மரியா மொன்ரிசோரி அம்மையார் 96
5. ஜி. ஸ்ரான்லி லேரால் 100
6. அல்பிரட் பீனே 103
7. புறூனர் 106


## பகுதி III

### தமிழ் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகள்


1. பாரதியார் 113
2. தேசிக விநாயகம் பிள்ளை 118
3. அழ வள்ளியப்பா 122
4. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் 126
5. சிறாரைக் கேருறுத்தல் தொடர்பான சமூக உளவியற் காட்டுருக்களின் மதிப்பீடு 130
6. சிறார் கல்வி தொடர்பான மாற்றுவகைச் சிந்தனை 136
7. புலன் தழுவிய கற்றல் 140
8. விளங்கும் திறன் வளர்ச்சி 143
9. அசைவுக்கல்வி 145
10. பாலர் கல்வியில் இசைவாக்கல் 149
11. சிந்தனையும் காரணங்காணலும் 153
12. பேச்சுத்திறன் 155
13. பாலர் கதைகள் 157
14. மீட்புக்குரிய சிறார் கல்விச் சிந்தனைகள். 161

# பகுதி I

## குழந்தை உளவியல்

# குழந்தை உளவியற் கோட்பாடுகள்

குழந்தைகளின் உளவியல் இயல்புகளை உற்றுநோக்கியும், விளக்கியும், வியாக்கியானம் செய்தும் பல உளவியற் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலைப்புலத்தில் உருவாக்கப்பட்ட உளவியற் கோட்பாடுகளிற் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடப் படக் கூடியனவாகவுள்ளன.

1) உளப் பகுப்புக் கோட்பாடு
2) நடத்தைக் கோட்பாடு
3) அறிகைக் கோட்பாடு
4) மார்க்சியக் கோட்பாடு

## 1) உளப் பகுப்புக் கோட்பாடு :

உளப்பகுப்புக் கோட்பாடானது குழந்தைகளின் நனவிலி உள்ளத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. குழந்தை நிலையிலிருந்தே அனுபவிக்கப்பட்டு வரும் இன்ப நிராகரிப்புக்கள் நனவிலி உள்ளத்திலே அமுக்கி வைக்கப்படுகின்றன. நிறைவேறாத இன்ப உணர்வுகளின் களஞ்சியமாக அமையும் நனவிலி உள்ளமே அனைத்து நடத்தைகளுக்குமுரிய ஊக்கல் வலுவை வழங்கும் தளமாக அமைதல் உளப்பகுப்புக் கோட்பாட்டில் வலியுறுத்தப் படுகின்றது. சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud) அவர்கள் இக்கோட்பாட்டுக்குரிய கட்டமைப்பைத் தந்தார்.

சிறப்பாகச் சிறார் நிலையில் நிகழும் பாலியல் இன்ப நிராகரிப் புக்களும் அச்சுறுத்தல்களும் ஒருவரின் ஆளுமையைத் தொடர்ந்து பாதிப்பதாக உளப் பகுப்புக் கோட்பாடு விளக்குகின்றது. சிக்மன்ட் பிராய்ட் ஆளுமையின் மூன்று பரிமாணங்களை விளக்கினார். அவையாவன:

அ) இட் (ID)
ஆ) ஈகோ (EGO)
இ) அதீத ஈகோ (SUPER RGO)

நனவிலி உந்தல்களின் மூலாதாரமாக இட் விளங்குகின்றது. இது மகிழ்ச்சி நிறைவைத் தேடி நிற்கின்றது. உடனடியாக இன்பங்களை நிறைவு செய்ய உந்துதலும் அதன் கோலமாகும். பிறரது இடர்களை நோக்காது தனது இன்பமே மேலெனச் செயற் படுதல் இட்டினுடைய இன்னொரு கோலமாகும்.

ஈகோ என்பது யதார்த்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படும். சிறாரின் இன்ப நிறைவேற்றுகையில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் ஈகோவுக்கும் இட்டுக்குமிடையே முரண்பாடுகளை உண்டாக்கும். ஈகோ பிற மனித வாழ்க்கையை நோக்க, இட் சுய இன்ப நிறைவுகளை நோக்கிய வண்ணமிருக்கும். வாய்வழியான இன்ப நிறைவேற்றல், குத வழியான இன்ப நிறைவேற்றல் முதலியவற்றில் கட்டுப்பாடில்லா மகிழ்ச்சியை இட் வேண்டி நிற்கும்.

குழந்தைகளைப் பொறுத்தவரை பொதுவாக நான்கு அல்லது ஐந்து வயதளவில் மேலான ஈகோ அல்லது அதீத ஈகோ வளர்ச்சி யடையத் தொடங்கும். உயர்ந்த விழுமியங்களை உள்ளடக்கிய பரிமாணங்கள் மேலான ஈகோவிலோ காணப்படும். இட்டின் குறுக்கு வழியான இன்ப நுகர்வுகள் மேலான ஈகோவின் குற்ற வுணர்ச்சிகளுக்கு உள்ளாகும். குற்றவுணர்வுகளுக்குத் தண்டனையாக உறுத்தற் காட்சிகளை (PHOBIA) மேலான ஈகோ உண்டாக்கும். தவறு செய்யும் பட்சத்தில் திடுக்குறு கனவுகளை (NIGHT MARES) அது ஏற்படுத்தும்.

மேலான ஈகோவின் உறுத்தல்களுக்கு எதிரான பல எதிர்நடத் தைக் கோலங்கள் பல ஏற்படுதலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற் றுள் பின்நோக்கிப் புடைதல் (Regression) அமுத்திப் புடைதல், (Repression) இடம்பெயர்ந்த புடைதல் (Displacement) முதலாம் பொருத்தப்பாட்டு நடவடிக்கைகள் சிறப்பாகக் குறிப்பிடப்படு கின்றன.



குழந்தைப் பருவத்து வளர்ச்சிக் கால கட்டங்களை சிக்மன்ட் பிராய்ட் பின்வருமாறு பாகுபடுத்தி விளக்கினார்.

1) பருமட்டாக ஒரு வயது வரை - வாய்வழி இன்ப நுகர் பருவம்
2) பருமட்டாக ஒரு வயதிலிருந்து மூன்று வயது வரை - குதவழி இன்பப் பருவம்.
3) பருமட்டாக மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரை - பிறப் பிக்கும் உறுப்புக்கள் வழியான இன்பநுகர் பருவம்.
4) பருமட்டாக ஏழு வயதிலிருந்து பதினொரு வயது வரை - பாலி யல் உணர்வுகள் மறை நிலை கொண்டு செயற்படும் பருவம்.

எறிக் எறிக்சன் என்னும் உளப் பகுப்பு உளவியலாளர் குழந்தைப் பருவத்து நெருக்கடிக் கால கட்டங்களைப் பின்வருமாறு விளக்கி யுள்ளார்.

1) நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்குமிடையே நிகழும் முரண் நெருக்கடிக் காலகட்டம்.
2) சுயாதீனமான இயக்கத்துக்கும் வெட்கம் மற்றும் சந்தேகம் என்பவற்றுக்குமிடையே நிகழும் முரண் நெருக்கடிக் கால கட்டம்.
3) தொடங்கும் செயற்பாட்டுக்கும் குற்றவுணர்ச்சிக்குமிடையே நிகழும் முரண் நெருக்கடிக் கால கட்டம்.

## 2) நடத்தைக்கோட்பாடு

உளவியலானது நடப்பு நிலை விஞ்ஞானப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமாயின் அது பரிசோதனைகளையும் அள வீடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்று ஜோன், பி. வாட் சனுடைய (1878-1958) கருத்து நடத்தைக் கோட்பாட்டுக்கு உந்து விசையாயிற்று.

தூண்டிக்கும் துலங்கலுக்குமிடையே காணப்படும் தொடர்பு கள் பற்றிய ஆய்வு நடத்தைக் கோட்பாட்டிலே சிறப்பிடம் பெறு கின்றது. கற்றல் செயல் முறையை இவர்கள் 'நிபந்தனைப்பாடு கொள்ளல்' (Conditioning) என்னும் தொடரால் விளக்குவர்.

நிபந்தனைப்பாடு இரண்டு தளங்களிலே விளக்கப்படுகின்றது. அவை யாவன.

1) தொல்சீர் நிபந்தனைப்பாடு (Classical Conditioning)
2) கருவிசார் நிபந்தனைப்பாடு (Operant Conditioning)

பொதுவான ஒரு தூண்டியைப் பொருண்மை கொண்ட வகையிலே இன்னொரு தூண்டியுடன் இணைக்கும் கற்றல் முறைமையை தொல்சீர் நிபந்தனைப்பாடு விளக்குகின்றது. நாளாந்த வாழ்க்கையில் இதற்குரிய சில எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம்.

1) எலுமிச்சம்பழத்தை வாயில் வைத்துச் சுவைக்காமலே அதை நினைத்தவுடன் வாயில் நீர் ஊறுதல்.

2) பிரம்பினால் அடிபடாமலே பிரம்பைப் பார்த்த சிறுவர்களது நெஞ்சு படபடத்தல்.

ஒரு தூண்டியுடன் இணைந்த இன்னொரு தூண்டியானது உடலியல் சார்ந்த துலங்கலை ஏற்படுத்தும் செயல் முறையைத் தொல் சீர் நிபந் தனைப்பாடு விளக்குகின்றது.

மிகவும் சிக்கலான கற்றலை விளக்குவதற்கு கருவிசார் நிபந்தனைக் கோட்பாட்டை பி.எவ். ஸ்கின்னர் முன்வைத்தார். கருவிசார் நிபந்தனைப்பாடு என்பது 'தொழில் நிபந்தனைப்பாடு' என்றும் குறிப்பிடப்படும் தொழிற்பாடுதலை அடிப்படையாகக்கொண்ட இலத்தின் மொழிச் சொல்லில் இருந்தே ஒப்பறன்ற் (Operent) என்ற ஆங்கிலச் சொல் உருவாக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட துலங்கலைப் பெறுவதற்குரிய தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தை கருவிசார் நிபந்தனைப்பாடு விளக்குகின்றது. இக்கோட்பாடானது மீள வலியுறுத்தலின் முக்கியத்துவத்தைப் பல கோணங்களிலே வலியுறுத்துகின்றது. நேர்மீள வலியுறுத்தலால் நடத்தையானது வலிமை பெறும். எதிர் மீளவலியுறுத்திலினாலும் ஒரு குழந்தையின் நடத்தையை வலிவுள்ளதாக்கலாம். ஏச்சுக்குப் பயந்து ஒரு குழந்தை படித்தலானது எதிர்மீள வலியுறுத்தலை ஒரு சிறந்த நடவடிக்கையாக உளவியலாளர் கொள்வதில்லை. உடனடியாக மீள வலியுறுத்தல்கள் குழந்தைகளின் கல்வியின் அதிக முக்கியத்துவம் பெறுவதையும் ஸ்கின்னர் தமது ஆய்வுகளிலே நிறுவியுள்ளார்.



### 3) அறிகைக் கோட்பாடு :

அறிகைக்கோட்பாடானது ஒழுங்கமைக்கப்படும் உளச் செயற்பாட்டுக்கும். சிந்தனைச் செயற்பாட்டுக்கும், முதன்மை நிலைகளைக் கொடுக் கின்றது. குழந்தைகளின் நுண்மதிச் செயற்பாடானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரண்டு செயல் முறைகளிலே தங்கியுள்ளது என ஜீன் பியாசே குறிப்பிட்டார்.

அவையாவன.

1) ஒழுங்கமைப்புச் செயற்பாடு (Organization)
2) தழுவும் செயற்பாடு (Adaptation)

சிந்தனையை ஒழுங்கமைத்தல் முக்கியமானவற்றை ஒழுங்கமைத்தல், முக்கியமற்றவற்றை இனங்கண்டு ஒழுங்கமைத்தல், ஒரு கருத்தை இன்னொன்றுடன் தொகுத்து ஒழுங்கமைத்தல் முதலியவை உள்ளத்தால் நிகழ்த்தப்படும் ஒழுங்கமைப்புச் செயல் முறைகளிலே சிலவாகும்.

தழுவும் செயற்பாடு இரண்டு நிலைகளிலே இடம்பெறுகின்றது. அவை;

1) தன்மயமாக்கல் (Assimilation)
2) தன்னமைவாக்கல் (Accommodation)

இவற்றை உயிரியற் செயற்பாட்டின் அடிப்படையாகவும் பியாசே விளக்கினார். உள அமைப்பை மாற்றாது ஒரு கருத்தை உள்வாங்குதல் தன்மயமாக்கல் எனப்படும். உள அமைப்பை மாற்றிக் கருத்தை உள்வாங்கு தல் தன்னமைவாக்கலாகும்.

குழந்தைகளின் விருத்திப்படி நிலைகள் பற்றியும் பியாசே விளக்கினார். அவை வருமாறு;

1) பிறப்பிலிருந்து அண்ணளவாக இரண்டு வயது வரை புலன் இயக்கப் பருவம்.

2) அண்ணளவாக இரண்டு வயதிலிருந்து நான்கு வயது வரை முன்தொழிற்பாட்டுப் பருவத்தில் உள்ளடங்கும் முன் எண்ணக் கருப் பருவம்.

3) அண்ணளவாக நான்கு வயதிலிருந்து ஏழு வயது வரை முன்

தொழிற்பாட்டுப்பருவத்தில் உள்ளடங்கும் உள்ளுணர்வுப் பருவம்.

அறிகைக்கோட்பாட்டைக் கட்டியெழுப்பியவர்களுள் புறூனர் என்பாரும் சிறப்புப் பெறுகின்றார். 'எந்தப் பாடத்தையும், அறிவுசார் நேர்மையான அமைப்பில் எந்தப் பிள்ளைக்கும் எத்தகைய வளர்ச்சிப் படியிலும் கற்பிக்க முடியும்' என்பது புறூனரின் கருத்தாகும்.

மூன்று படிநிலைகள் வழியாக பிள்ளைகள் அறிவைத் திரட்டிக் கொள்வதாக விளக்கினார். அவை;

1) உருவம் அல்லது காட்சி சார்ந்த செயல் அனுபவங்கள் வாயிலாக அறிவைத் திரட்டுதல். உதாரணம்-ஒரு மிதி வண்டியைக் குழந்தை இயக்கியும் ஓட்டியும் பார்த்தல்.
2) உளவடிவப்படிநிலை இரண்டாவதாக இடம்பெறுகின்றது உதாரணமாக மிதிவண்டியை ஓட்டாது அது பற்றிய மனப் படத்தை உருவாக்கும் ஆற்றலை இந்தப் படிநிலை விளக்குகின்றது.
3) குறியீட்டு வடிவப்படிநிலை மூன்றாவதாக குறிப்பிடப் படுகின்றது. உதாரணமாக மிதிவண்டியை மொழிக்குறியீடுகளினால் வெளிப் படுத்தும் திறன்கள் விருத்தியாகும் ஆற்றலை இந்தப் படிநிலை குறிப்பிடுகின்றது.

## 4) மார்க்சியக் கோட்பாடு

கார்ல் மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் முதலானோரின் சிந்தனைகளில் இருந்து மார்க்சிய உளவியல் ஊற்றெடுக்கின்றது. சமூக பொருளாதார அடிக்கட்டுமானம், உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள் முதலியவை மனித நடத்தைகள் மீதும் குழந்தைகளின் பண்பு உருவாக்கத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்துதலை மார்க்சிய மற்றும் நவமார்க்சிய உளவியற் கோட்பாடுகள் விளக்குகின்றன.

சமூக முரண்பாடுகள், பொருளாதார முரண்பாடுகள், பண்பாட்டு முரண்பாடுகள், தனிமனித முரண்பாடுகள் என்ற பல வகையான முரண்பாடுகளும், முரண்பாடுகளின் ஐக்கியமும் அவற்றின் எதிர்பார்ப்பும் சிறார்களின் ஆளுமையாக்கத்திலும், கல்வியிலும்



செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே பாலர் கல்வி ஆசிரியர்கள் முரண்பாடுகளின் இயல்புகளையும், விசைகளையும் கண்டறிந்து மாணவர்களை நல்லாற்றுப்படுத்துதல் வேண்டும்.

எவ்வகையான சுரண்டல்களில் இருந்தும், அடிமைத்தனத்திலிருந் தும், அச்சுறுத்தல்களில் இருந்தும் சிறுவர்கள் விடுவிக்கப்படும் பொழுதுதான் அவர்களிடத்து நிறைவான ஆளுமை மலரும். சிறுவர்களுக்குரிய கல்வி கட்டாயமானதாகவும், இலவசமானதாயும், சமத்துவம் மற்றும் சமகணிப்புக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

செயல் முறை சார்ந்த அனுபவங்கள், முரண்பாடுகளைக் கண்டறியும் அனுபவங்கள், உடலியக்க வளர்ச்சியை முன்னெடுக்கும் அனுபவங்கள் முதலியவை சிறாரின் வளர்ச்சிக்கு அடிப்படைகளாகின்றன. அனுபவங்கள் வழியாக எண்ணக்கருக்களைத் திரட்டிக் கொள்ளும் வாய்ப்புக்கள் சிறாருக்குத் திட்டமிட்டு வழங்கப் படுதல் வேண்டும். முன்பள்ளிகளில் போட்டிகளையும், எதிர் மாணிடப் பண்புகளையும் வளர்ப்பதற்குப் பதிலாக கூட்டுறவையும், மனிதநேயத்தையும் வளர்க்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை தரப்படல் வேண்டும்.

# குழந்தை உளவியலின் உலகளாவிய வளர்ச்சி

குழந்தை உளவியல் என்றுமில்லாத அளவுக்கு இன்று உன்னதத் தைப் பெற்று வருகின்றது. எதிர்கால சமூகத்தின் வாழ்விலும், வளத்திலும் குழந்தை உளவியலின் முக்கியத்துவம் பரவலாக உணரப் படுகின்றது. குழந்தை உளவியல் பிரயோக நிலை உளவியலாகின்றது. குழந்தையின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அது நேரடியான பங்களிப்பைச் செலுத்துகின்றது.

1) உடல் மேம்பாடு
2) உள மேம்பாடு
3) மனவெழுச்சி மேம்பாடு
4) மொழித்திறன் மேம்பாடு
5) ஆக்கத்திறன் மேம்பாடு
6) அழகியல் மேம்பாடு
7) சமூக மேம்பாடு
8) அறவொழுக்க மேம்பாடு

குழந்தை வளர்ப்பை இங்கிதமாக்கவும், வளமாக்கவும் வழி யமைக்கும் வல்லவாண்மை விசைகளும் குழந்தை உளவியல் முன்னணி வகிக்கின்றது.

குழந்தை சமூகத்தளத்தை விளங்கிக்கொள்ளல், தனியாள் இயல் புகளை விளங்கிக் கொள்ளல், பலங்களையும், பலவீனங்களையும் தெரிந்து கொள்ளல், இசைவாக்கப் பிரச்சினைகளைத் தெரிவு செய்தல் முதலிய வற்றுக்குத் குழந்தை உளவியல் வழியமைக்கின்றது.

சமூக இயல்பும் சமூகக் கோலங்களும் குழந்தைகள் தொடர் பான அணுகு முறையிலே நேரடியாக பங்களிப்பைச் செலுத்து கின்றன. உடற்பலம் விதந்து பாராட்டப்பட்ட சமூகங்கள் குழந்தை களை உடற்பல முள்ளவர்களாக வளர்க்க எண்ணின. உள ஆற்றல்கள்



சமூகத்திலே முக்கியத்துவம் பெற, உடல் வலுவும், உள வலுவும் கொண்டவர்களாகக் குழந்தைகளை வளர்க்க எண்ணிய வேளை குழந்தைகளின் கல்வி மீது கூடுதலான அக்கறை செலுத்தப்பட்டது.

குழந்தைகள் வளர்ந்தோரிலும் வேறுபட்டவர்கள் என்றும் அவர்களுக்குரிய கல்வியானது சிறப்பார்ந்த முறையிலே முன்வைக் கப்பட வேண்டும் என்றும் மேலைத்தேய மரபில் ஜோன்லொக் (1632-1704) முன்வைத்த கருத்துக்கள் உரத்த சிந்தனையாக அமைந் தன. அதனைத் தொடர்ந்து ரூசோ (1712-1778) முன்மொழிந்த கருத்துக்கள். சுயமாக குழந்தைகளை வளரவும் கற்கவும் செய்ய வேண்டுமென்ற இயற்பண்பு இலட்சியத்துக்கு வலுவூட்டின. குழந்தைகள் சூழலின் வினைப்படும் முகவர் (Active Agent) என்ற கருத்து ரூசோவினால் முன்னெடுக்கப்பட்டது.

உலக கைத்தொழில் வளர்ச்சியும், சமூக மாற்றங்களும், சோலிச சிந்தனைகளின் வளர்ச்சியும் குழந்தைகளின் கல்வி மீதான அணுகு முறைகளில் மேலும் மேம்பாடுகளைக் கொண்டு வந்தன.

சார்ல்ஸ் டார்வின் (1809- 1882) குழந்தைளை உற்றுநோக்கி அவர்கள் தொடர்பான ஒழுங்கமைந்த தகவல்களைத் தொகுக்க லானார். 1877 ஆம் ஆண்டில் தமது குழந்தை மகன் பற்றிய ஒரு நாட்குறிப்பை அவர் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து பிறியர் (1841-1897) என்பவர் வெளியிட்ட குழந்தையின் உள்ளம் (The mind of the child) என்ற நூல் குழந்தை உளவியலைப் பொறுத்தவரை ஒரு செம்மைப் பனுவலாக (Classics) கருதப்படுகின்றது.

குழந்தை உளவியல் பற்றிய உணர்வு அமெரிக்காவிலும் விரவிப் பரவ ஸ்ரான்லி ஹோல் 1844-1924) என்பார் 'குழந்தைகள் தொடர் பான கற்கை இயக்கம்' ஆரம்பித்து வைத்தார்.

1904 ஆம் ஆண்டில் பரிஸ் நகரத்து உளவளர்ச்சி குன்றிய முன்பள்ளிக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி பற்றி ஆராய்ந்து முன் மொழிவுகள் தருவதற்கான ஆணையம் அமைக்கப்பட்டது அதன் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் அமைந்த பீனே-சைமன் தேர்வு குழந்தைகளின் நுண்மதி வளர்ச்சி பற்றிய கற்கைகளுக்கு தூண்டுதலளித்தன.

குழந்தை உளவியல், குழந்தைகள் கல்வி முதலியவற்றில் மாரியா மொன்ரிசோரி (1870-1952) அம்மையார் அவர்களின் பங்களிப்பு உலகளாவிச் செல்கின்றது. இத்தாலிய பல்கலைக்கழகம் ஒன்றின் முதலாவது மருத்துவப் பட்டதாரியாக அம்மையார் விளங்குகின்றார்.

உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வியில் அம்மையார் முதலிலே கவனம் செலுத்தினார் புலன் சார்ந்ததும், புலன் இயக்கங்கள் சார்ந்ததுமான பயிற்சிகளை அக்குழந்தைகளுக்கு வழங்கிய அம்மையார் சாதாரண குழந்தைகளுடன் ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களின் கல்வித்திறன்களை வளர்த்தெடுத்தார்.

அவருடைய முறையியல்கள் சாதாரண குழந்தைகளின் கற்றலிலும் பெரும் விசைகளை ஏற்படுத்தின. உரோமாபுரியின் சேரிப்பகுதிகளில் நான்கு வயதுக்கும் ஆறும் வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கான பள்ளிக்கூடங்களைத் திறந்து அவர் பெருந் தொண்டாற்றினார்.

மரத்துண்டுகள், கட்டைகள், விதைகள் முதலிய எளிமையான சாதனங்களைப் பயன்படுத்தி வினைத்திறன்மிக்க கற்பித்தலை அவர் ஒழுங்கமைத்தார். இச்சாதனங்களின் வழியாக குழந்தைகளின் இயற்கையான வளர்ச்சியோடு இணைந்த பயிற்சிகளை அவர் வழங்கினார். சுதந்திரமாகக் குழந்தைகள் அந்தச் சாதனங்களைப் பயன்படுத்தும் வேளை பொருத்தமான முறையில் அவர்கள் அவற்றைப் பயன்படுத்துகிறார்களா என்பதை ஆசிரியர் உற்று நோக்குதல் வேண்டும் என்றும் அம்மையார் குறிப்பிட்டுள்ளார். பிரச்சினைக்குரிய குழந்தைகள்கூட இந்த முறைமையால் நன்கு கவர்ச்சி கொள்ளப்பட்டு கற்றலில் ஈடுபாடு கொண்டமையை அவர் நேரிலே கண்டறிந்தார்.

அம்மையார் வாழ்ந்த காலத்தில் அவர் அறிமுகம் செய்த முறையியல் முற்போக்கானதாகக் காணப்பட்டாலும் அந்த முறையியல் பின்னர் அதிக கட்டுப்பாடுகளையும் மாறில்லா இறுக்கத்தையும் (Routine) கொண்டிருந்தமையை ஈபேர்க் (1971) என்பார் சுட்டிக் காட்டினார். இன்று அம்மையார் முறையியலில் பல்வேறு மாற்றங்களும், நெகிழ்ச்சிகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.



பல்லோவ் (1849-1936) வாற்சன் (1878-1958) முதலாம் உளவியலாளர்களது நடத்தையியல் அணுகுமுறைகளும், பரிசோதனைகளும் குழந்தை உளவியல் வளர்ச்சிக்கும், குழந்தைகளுக்கான கற்பித்தல் முறையியலிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தின.

குழந்தைகளிடத்து குடிகொள்ளும் பயம் என்ற மனவெழுச்சியானது நிபந்தனைகளால் திரட்டிக் கொள்ளப்படுகின்றதென்றும் பிறப்புடன் தொடர்ந்து வருவது அல்ல என்றும் பரிசோதனை ஆதாரங்களுடன் விளக்கினார்.

குழந்தை உளவியலில் மேலும் செல்வாக்குச் செலுத்திய உளவியலாளர்களுள் சிக்மன்ட் பிரய்ட் (1859 - 1939) சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர். வளர்ந்தோரிடத்துக் காணப்படும் ஆளுமைப் பிறழ்வுகள் குழந்தை நிலை அனுபவங்கள் வழியாக எழுகின்றன என்பதை அவர் ஆய்வுகளிலே வெளிப்படுத்தினார்.

இரண்டாம் உலகயுத்தத்துக்குப் பின்னர் குழந்தை உளவியல் மேலும் வளர்ச்சியுறத் தொடங்கியது. அர்னல்ட் கெசல், ஜீன்பியாசே முதலானோர் குழந்தை உளவியல் வளர்ச்சிக்கு மேலும் பங்களிப்புகள் தந்தனர். குழந்தைகளின் குறிப்பிடத்தக்க நடத்தைகள் எந்த எந்த வயது மட்டங்களிலே நிகழ்கின்றன என்பது தொடர்பான விரிவான ஆய்வுகளை கெசல் மேற்கொண்டார். குழந்தைகளிடத்து நிகழும் எண்ணக்கருவாக்கம் பற்றியும், அவர்களின் விருத்தி நிலை மட்டங்கள் பற்றியும் பியாசே ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டார்.

பண்பாட்டு மானிடவியல் தொடர்பாக நிகழ்ந்த ஆய்வுகளும் குழந்தை உளவியலுக்குப் புதிய பரிமாணங்களை வழங்கின. இவ் வகையில் மார்க்கரெட் மீட் (1901 1978) என்ற பெண்மணியின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை.

கார்ல் மார்க்ஸ், லெனின், மாஓ முதலானோரின் தீவிர அரசியற் கோட்பாடுகள் குழந்தை உளவியலிற் கோட்பாடுகளைச் செப்பனிடுவதற்கு ஆதாரங்களாக அமைந்தன. குழந்தைகள் எவ்வகையான சுரண்டல்களிலிருந்தும் விடுவிக்கப்படல் வேண்டும் என்றும் அவர்களின் ஆளுமைப் பரிமரணங்கள் ஊறுபடாது வளர்க்கப்படல் வேண்டும் என்றும் மார்க்சிய சிந்தனைகளால் வலியுறுத்தப்பட்டன.

மனித விழுமிய மேம்பாடுகளைக் குழந்தை நிலையிலிருந்தே இங்கிதமாகக் கற்பிக்க வேண்டுமென்ற சமகாலக் கருத்துக்களும் நவீன குழந்தை உளவியலும் குழந்தைகளுக்குமான கற்பித்தலியலி லும் ஊடுருவி நிற்கின்றன.

குழந்தை உளவியல் தொடர்பாக எம்மால் புதிதாக முன்மொழி யப்படும் ஒரு கோட்பாடு 'இடைவெளி தோன்றற்' கோட்பாடாகும். இது 'Gap Formation Theory' என அழைக்கப்படும். அதாவது எத்தகைய கவனமெடுத்துக் குழந்தைகளை கற்பித்தாலும், தனிமனித முரண்பாடு களினாலும், சூழல் முரண்பாடுகளினாலும் அவர்களின் மேம்பாடுகளிலே இடைவெளிகள் தவிர்க்க முடியாது தோன்றி விடுகின்றன என்பது இந்தக் கோட்பாட்டினால் விளக்கப்படு கின்றது.



# குழந்தை உளவியல் ஆய்வுமுறைகள்

**அகநோக்கல்:**

உளவியல் பல்வேறு ஆய்வுகளை உள்ளடக்கியது. அவற்றுள் மிகவும் புராதன ஒரு முறையாக "அகநோக்கு" விளங்குகின்றது. உளவியல் ஆய்வு செய்பவர் தானே குறித்த உளவியற் பிரச்சினைக் குரியவராகக் கற்பனை செய்து தனது உள்ளத்தாலும் உடலிலும் மனவெழுச்சிகளிலும் நிகழும் மாற்றங்களை நோக்குதல் அகநோக் குகை எனப்படும். தன்னைத் தானே நோக்குதல் அகநோக்குகை எனப்படும். இது அவசியமான ஓர் ஆய்வு முறையென்றும் கொள்ளப்படும். தன்னைத் தானே சோதித்தல் அல்லது தேர்வுக்கு உட்படுத்துதல் என்றும் அகநோக்குகையைக் குறிப்பிடலாம்.

அகநிலையான செயற்பாடுகளை அறிதல் புறநிலைத் தொடர்பு கள் போன்று அத்துணை எளிதானதன்று. பட்டறிவும் கற்பனையும் அகநிலை உணர்வுகளைத் தீர்மானிப்பதால், ஒவ்வொருவரதும் பட்டறிவு வேறு பாடுகளுக்கேற்றவாறு அகநிலை உணர்வுகளும் வேறுபாட்டையும், உள நிலை என்பது புறநிலைத் தாக்கங்களாலே தளம்பும் இயல்புடையதாக இருத்தலினால் அகநோக்குகையிலும் தளம்பு நிலைகள் காணப்படும். நனவடி உணர்வுகளை அகநோக்க லாற் காணமுடியாதென்பதும் வற்புறுத்தப்படுகின்றது.

உணர்வுகளைத் தருக்க முறையினாற் பகுத்தாராய முற்படும் பொழுது அவர் தனது பாவனையை இழந்து விட நேரிடுகின்றது. இதனால் இருளைப் பார்ப்பதற்கு ஒளியைப் பயன்படுத்தும் நடவடி க்கை என்றும் இந்த முறையின் வரையறையை விளக்குவர். மேலும் எல்லாவிதமான உணர்வுகளையும் அகநோக்குகை வாயிலாக மேற் கொள்ளல் முடியாதென்ற குறைபாட்டினையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஒரு பெண்ணின் உணர்வுகளை ஓர் ஆண் திட்ட

வட்டமாகவும் முழுமையாகவும் அறிந்து கொள்ள முடியுமா என்ற விமர்சனமும் உண்டு. ஆயினும் பிற ஆய்வுமுறைகளின் முடிவு களைப் பலப்படுத்துவதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ, இந்த முறையினை அனுசரணையாக்கலாம் என்ற பயனுடைமையைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுள்ளது.

## உற்றுநோக்கல் :

உற்று நோக்கல் முறையும் உளவியல் ஆய்வுகளுக்குரிய சிறப் பார்ந்த முறையியலாகக் கொள்ளப்படுகின்றது. உளவியல் நடத்தை களின் உள்ளார்ந்த பண்பு அகநோக்கல் முறையால் அணுகப்படும் வேளை புறப்பண்புகள் உற்று நோக்கல் முறையால் மதிப்பிடப் படுகின்றது. உற்று நோக்கல் முறை தொடர்ச்சியாகக் கையாளப் படும் பொழுது, வழுக்களையும் தவறுகளையும் நீக்கி பொதுவான விதிகளைக் கண்டறிய முடியும். உற்று நோக்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் ஒழுங்கமைந்த பதிவுகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும். உளவியலில் உற்று நோக்கல் என்பது பல்வேறுபட்ட தளங்களை உள்ளடக்கியது. ஒருவரின் எழுத்தாக் கங்கள், ஓவியங்கள், சிந்தனை வெளிப்பாடுகள் என்ற அனைத்தும் உற்று நோக்கப்பட வேண்டியுள்ளது.

குழுவில் ஒருவருடைய நடத்தைகள் உற்றுநோக்கப்படும் பொழுது தாம் உற்று நோக்கப்படுகின்றார் என்ற அச்சம் இல்லாதி ருக்கும் பொழுதே இயல்பான நடத்தைகளை அறியலாம்.

உற்றுநோக்கல் மிகுந்த எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டியுள்ளது. தமது அகவயமான அனுபவங்களை உற்று நோக்கப்படும் நடத்தை மீது ஆய்வாளர் செலுத்திவிடக்கூடாது. மனித மனவெழுச்சி வெளிப்பாடுகள் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. மேலும் துன்ப அனுபவத்துக்கும் இன்ப அனுபவத் துக்கும் ஒரேவித வெளிப்பாடு ஒரு மனிதரிடத்துக் காணப்படலாம். கண்ணீர் சிந்துதல், கைகால் பதற்றம், வியர்த்தல் முதலியவை இன்ப அனுபவத்தின் போதும் ஒருவருக்கு ஏற்படலாம். துன்ப அனுபவத் தின் போதும் ஏற்பட முடியும்.

சிறார் பொதுவாகத் தமது மனவெழுச்சிகளை அடக்கி வைப்ப தில்லை. ஆனால் வளர்ந்தோர் தமது அனுபவங்களை வெளிநடத்தை



களாற் காட்ட முயலாது இருக்கையில் உற்றுநோக்கல் முறை மட்டும் தனித்துப் பயன்தர முடியாத வரையறையை எதிர்நோக்க லாம். உற்று நோக்கல் இருமையாக வகையியல் செய்து கட்டப் படுகின்றது. ஒன்று இயல்பான சூழலில் உற்றுநோக்கலை மேற் கொள்ளல். எடுத்துக்காட்டாக ஓர் ஆசிரியன் மாணவரைப் புறத்தே நின்று உற்று நோக்கல் இயல்பான சூழலில் உற்று நோக்கல். மற்றை யது பங்குபற்றுவோராய் நின்று உற்றுநோக்கல் எடுத்துக்காட்டாக ஒரு விளையாட்டு குழுவில் ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து ஆடும் பொழுதும் ஆசிரியரால் உற்றுநோக்க முடியும்.

## பரிசோதனை முறை :

அறிவியலின் வளர்ச்சி, உளவியல் ஆய்வுகளுக்குப் பரிசோதனை முறையைப் பயன்படுத்துவதற்குத் துணை செய்துள்ளது. பரிசோத னைகள் என்பவை ஆய்வாளரின் நேரடிக்கட்டுப்பாட்டில் ஆய்வு கட்டடங்களிலோ வகுப்பறைகளிலோ மேற்கொள்ளப்படுகின்றது. உளச்செயல் முறைகளை விஞ்ஞான பூர்வமாகக் கற்றறிந்து கொள் வதற்குப் பரிசோதனை முறை வழிகாட்டுகின்றது. உளச் செயற்பாடு எவ்வாறு அமையும் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்னேற் பாடான நிலைமைகள் பரிசோதனை முறையிலே ஒழுங்கமைக்கப் படுகின்றன. தரவுகள் ஒழுங்கமைந்த முறையிலே சேர்க்கப்பட்டு நிரற்படுத்தப்படும். அவற்றிலிருந்து முதலிலே தற்காலிகமான கோட் பாடு வடிவங்கள் உருவாக்கப்படும்.

கட்டுப்படுத்திய குழு, பரிசோதனைக் குழு என்பவை பரிசோதனைகளின் போது ஒப்பு நோக்கப்படுகின்றன. இரண்டு குழுக்களுக்குமிடை யேயுள்ள காரணிகளைப் பரிசோதனையாளர் வேறுபடுத்தி அறிய முயலுவார். பரிசோதனையாளர் ஒழுங்குபடுத் திய தூண்டிகளுக்குரிய துலங்கல் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பது நுட்பமாக ஆராயப்படும்.

பரிசோதனை முறையைக் கையாளும் பொழுது பல்வேறு அறை கூவல்களை எதிர்கொள்ள நேரிடும். பரிசோதனைக் கூடத்தின் செயற்கையான சூழல் இயல்பான உளவெளிப்பாடுகளைத் திரிபு படுத்தி விடலாம். மனோ நிலை தளம்பும் தன்மையுடையதாக இருந்தலினால் ஆய்வுகள் பொறுமையுடன் மீண்டும் மீண்டும்

மேற்கொள்ளப்பட வேண்டிய பக்குவத்தை ஆய்வாளர் கொண்டிருத்தல் வேண்டும். அளவீடுகளுக்குள்ளே கொண்டு வரப்படாத நுண்ணிய மனவெழுச்சிகளை மனிதர் கொண்டிருந்தல் உளவியல் ஆய்வாளருக்கு மிகுந்த அறைகூவலாகி விடுகின்றது. பரிசோதனைகளின் பொழுது ஆய்வாளரைத் திருப்திப்படுத்தும் வெளிப்பாடுகளை பரிசோதனைகளுக்கு உட்படுத்துவோர் மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு மிகக் கூடிய எண்ணிக்கையினரைப் பரிசோதனைக்குட்படுத்துதலும் மேற்கொள்ளப்படலாம்.

பரிசோதனைகளில் எண் பெறுமானங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டும் தற்காலிகமான கோட்பாடுகளை மேலும் மேலும் ஆய்வுகளினால் வலிதாக்கவும் புதுப்பிக்கவும் வேண்டும். பரிசோதனை முறையினை மேலும் மேலும் புறவயமாக அமைப்பதற்கு "இரட்டைச் குருட்டு" முறையினையும் பயன்படுத்த முடியும். இரட்டைக் குருட்டு முறையில் பரிசோதனைக் குழுவில் இடம் பெறுபவர் யாவர், கட்டுப்படுத்திய குழுவில் இடம் பெறுபவர் யாவர் என்பது பரிசோதனையாளருக்கே தெரியாது அமைக்கப்படும். மூன்றாம் ஆள் ஒருவர் இதனை மேற்கொள்வார். பெரும்பாலும் போதைப் பொருள் பற்றிய ஆய்வுகளுக்கு இந்த உபாயம் பயன்படுத்தப்படுகின்றது.

### விருத்தி முறை :

உடல் உள மனவெழுச்சி வளர்ச்சி நிலைகளை ஆராய்ந்து அறிவதற்கு விருத்தி முறையையும் பயன்படுத்தலாம். விருத்தி முறை சிறார்களின் விருத்தியைப் படிமுறையாகத் தொடர்புபடுத்தி நோக்குவதால் அதனை உயிர்ப்பாரம்பரிய முறை என்றும் கூறுவர். உயிர்களின் படிமலர்ச்சியுடன் உயிர்ப்பாரம்பரியம் இணைந்துள்ளது. குறித்த கால வயதுகளிற் குறித்த வளர்ச்சி நிலைகளைக் குழந்தைகள் அடைந்துள்ளனரா என்பதை இந்த முறை வாயிலாகத் தொடர்புபடுத்தி அறிந்து கொள்ளலாம்.

விருத்தி என்பது தொடர்ந்த ஒரு செயல்முறை. சிறார்களின் விருத்திச் செயல் முறைகளைத் தொகுத்துச் சில பொதுவான நியமங்களை வரையறை செய்யலாம். எடுத்துக் காட்டாக எத்தனை



வயதிலே சிறார்கள் தவழுகின்றார்கள், நடக்கின்றார்கள், சொற்களைக் கூட்டிணைக்கின்றார்கள் என்ற பொது நியமங்கள் ஆய்வுகளிலிருந்து தரப்படுகின்றன. பொதுவான நியமங்களிலிருந்து குறித்த சிறுவர் இணைந்து செய்கின்றனரா வேறுபடுகின்றனரா என்பதை அறிந்து கொள்வதற்கும் இந்த ஏற்பாடு வாய்ப்புத் தருகின்றது. ஆனால் சிறார்களின் உள, மனவெழுச்சி முதிர்ச்சிகளை வளர்ந்தோருக்குரிய அளவுகோல்களால் மதிப்பீடு செய்தல் எத்துணை பொருத்தமானது என்ற வினாவையும் இச் சந்தர்ப்பத்திலே எழுப்ப முடியும்.

இதனுடன் தொடர்புடைய நெடுங்கோட்டு முறையும் குறுக்கு வெட்டு முறையும் சிறார் உளவியலிற் பயன்தரத்தக்க ஆய்வு முறைகளாக விளங்குகின்றன. பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக முதிர்ச்சி நிலைகளை ஆராய்தல் நெடுங்கோட்டு முறை எனப்படும். குறித்த சில பருவங்களில் உடல் வளர்ச்சி விரைந்தும் சில பருவங்களில் மந்தமடைந்தும் விருத்தி கொள்ளல் நெடுங்கோட்டு அணுகு முறையிலே சீர்தூக்கிப் பார்க்கப்படும். மிகவும் நீண்ட காலத்தை உள்ளடக்கிய ஆய்வு முறையாக இருப்பதனால் நடைமுறை இடர்பாடுகளும் உண்டென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

குறுக்கு வெட்டு முறையிற் குறித்த வயது எல்லையினைக் கொண்ட பல்வேறு குழந்தைகளின் உடல், உள்ள, மனவெழுச்சி விருத்திகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மிகவும் பரந்த மாதிரிகளை உள்ளடக்கிய விரிவான ஆய்வை ஒப்பீட்டளவிற் குறைந்த கால அடைவிற் செய்து முடிப்பதற்குரிய இயல்பினையும் இந்த ஆய்வு முறை கொண்டுள்ளது.

இந்த ஆய்வு முறை பெருமளவில் மாதிரி நுட்பங்கள் மீதும் புள்ளி விபரவியல் உபாயங்கள் மீதும் தங்கியிருக்கும் நியமங்களுடன் தனியாளை ஒப்பீடு செய்யும் விசாரணைகளுக்கு இடமளிக்கின்றது. இந்நிலையில் புள்ளிவிபரவியல் எந்தளவு நுட்பமாகப் பயன்படுத்தப் படுகின்றதோ அந்த அளவுக்கு நியமங்களும் செழுமையடையும் என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவப் பதிவேடு :

உளவியல் ஆய்வுகளுக்குரிய பிறிதோர் உபாயமாக அமைவது வாழ்க்கைச் சம்பவப் பதிவேட்டு முறையாகும். இது மிகவும் பழமை வாய்ந்த ஆய்வு முறையாக இருப்பினும் அவ்வப்போது வாழ்க்கைச் சம்பவங்களைக் குறித்து வைத்தல் சில சந்தர்ப்பங்களில் மிக்க பயனுள்ளதாகவும் அமைந்து விடுகின்றது. பதிவுகளிலிருந்து தகவல் களைப் பெற்றுக் கொள்ளவும், கருத்துருவங்களைக் கட்டியெழுப்ப வும் முடியும். இந்த முறை அகவயத் தன்மைகளுக்கும், கருத்தேற்றங் களுக்கும், ஊக்கங்களுக்கும் இடமளிக்கும் பொழுது அதன் பயனு டைமை குன்றி விடுகின்றது. அவ்வப்போது குறித்து வைக்கப்படும் தகவல்களிலும் பார்க்க ஒழுங்கமைந்த முறையிற் பெறப்படும் தொடர்ச்சியான தகவல்களே கூடிய நம்பகமானதாக விளங்கும்.

வாழ்க்கைச் சம்பவப் பதிவேட்டு முறைமையிற் பிறிதொரு வரையறையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. பதிவேடுக ளைத் தயாரித்து வைத்திருப்போரிற் சிலர் அவற்றைப் பிற ஆய் வாளர்களின் பார்வைக்கு வழங்காது பரம இரகசிய ஏடுகளாகப் பயன்படுத்தியமையால், அவற்றின் உபயோக முறைமை சுருக்க மடைந்து விடுகின்றது.

### வரலாற்று முறை :

வரலாற்று எழுதல் முறைமையும் உளவியலில் மிக்க பயனுள்ள தொன்றாகும். வரலாற்று முறை இருவகைப்படும். ஒன்று ஒருவர் தமது வரலாற்றைத் தாமே எழுதும் முறைமை, மற்றையது ஒரு வருடைய வரலாற்றைப் பிறர் எழுதுதல், சிறார் உளவியலைப் பொறுத்தவரை பின்னையதே பெருமளவிற் பெறப்படுகின்றது. சிறார்க்கென இன்று "குழவியர் நாட்குறிப்பு" பயன்படுத்தப்படு கின்றது. பெற்றார், அல்லது செவிலியத் தாயார் அல்லது ஆய்வாளர் குழவியர் நாட்குறிப்பைப் பராமரிப்பர். குழந்தைகளுக்குக் குறித்த நாட்களிற் கிடைக்கப் பெற்ற அனுபவங்களை அவர்கள் குறித்து வைப்பர். குழந்தை மீது கொண்ட பாசம் பிறப்பிக்கும் அகவயத் தன்மையும், தமக்கு விருப்பமானவற்றையே குறித்து வைக்கும் இயல்புகளும் இந்த ஆய்வு முறையின் வரையறைகளாகின்றன. ஆய்வாளர் ஒவ்வொரு குழந்தைக்கும் அதிக நேர விரயம் செய்ய



முடியாத நிலையில் இருக்கும் பொழுது முற்றிலும் பெற்றோர் தரும் குறிப்புகள் மீதே தங்கியிருக்க வேண்டியுள்ளது.

நலவியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கல்வி தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் போன்றவற்றைக் கால வரன்முறையாகத் தொகுத்து நோக்குதற்கு இந்த ஆய்வு முறை பயனுள்ளதாக அமைவதைச் சுட்டிக் காட்டலாம்.

தனியாள் வரலாற்று ஆய்வு முறை ஆரம்பத்திற் பிறழ் நிலை கொண்ட சிறாரை ஆய்வதற்குப் பயன்பட்டதாயினும், அண்மைக் காலமாக அனைத்துச் சிறார்களுக்கும் பயனுள்ள ஓர் ஆய்வுமுறை யாக இது கருதப்படுகின்றது. குறித்த சிறுவர் பற்றியும் அவர் வாழும் சூழல் பற்றியும் பொருத்தமான தகவல்களும் தரவுகளும் தனியாள் வரலாற்று ஆய்வு முறையிற் பெறப்படுகின்றன. தகவல்களையும் தரவுகளையும் இயன்றவு பரவலாகப் பல்வேறு மூலங்கள் வாயி லாகப் பெறமுடியும். பெற்றார், அயலவர், நண்பர்கள், ஆசிரியர், வைத்திய அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து வேண்டிய தகவல் களைப் பெற்றுக் கோவைப்படுத்த முடியும்.

தனியாள் வரலாற்று ஆய்வு வழியாக ஒரு சில சிறாரிடத்துப் பெறப்பட்ட தகவல்களை அனைத்துக் குழந்தைகளுக்கும் பொது மையாக்குதல் பொருத்தமானது என்று கொள்ளமுடியாது. மேலும் கடந்த கால நிகழ்ச்சிகளை வைத்து எதிர்கால வளர்ச்சிகளை எதிர்வுகூற முயலும் பொழுது பல இடர்களை எதிர்கொள்ள முடி யும். பாதிப்புக்குள்ளானவரின் குழப்ப நிலைக்குரிய பிரதான காரணி களை மீளாய்வு செய்து செறிவான கற்றலை மேற்கொள்வதற்குரிய தலையாய நம்பிக்கையை இந்த ஆய்வு வழங்குகின்றது.

### வினாக்கொத்து முறை :

வினாக்கொத்து முறை இன்றைய உளவியல் ஆய்வுகளிற் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. வினாக்கொத்து முறையின் வெற்றியும் வரையறையும் வினாக்களைத் தெரிந்தெடுத்தலிலும் தெரிவிலும் ஒழுங்கமைத்தலிலும் தங்கியுள்ளது. வினா முறைகள் பலவகைப்படும். திட்டவட்டமான விடைகளைப் பெறும் வகை யில் "ஆம்" "இல்லை" என்ற தூண்டற் பேறுகளைக் கொண்ட வினாக்களை அமைக்க முடியும். அல்லது ஒரு தொகுதி விடை

களைக் கொடுத்து அவற்றிலிருந்து பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்யும் வண்ணம் வேண்டலாம். அல்லது விடைகளை நிரப்படுத்துமாறு கேட்கலாம். அல்லது விடைகளை அளிப்பதற்று எதுவித கட்டுப்பாடுகளும் விதிக்காது சுதந்திரம் வழங்கலாம். இவ்வாறாக வரையறுத்தல் நிலையிலிருந்து பூரண நெகிழ்ச்சி வரையிலான நிலைகளுக்கு வினா உபாயங்களைப் பயன்படுத்தலாம்.

வினாக்களை வழங்கும் தேர்வுகளிலிருந்து ஒருவரின் ஆற்றல்கள், மனோபாவங்கள், விருப்பு வெறுப்புக்கள், ஊக்கல்கள், ஆளுமை இயல்புகள் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இவ்வாறான தேர்வுகளிற் சிலருக்கு ஐயநிலை அல்லது அறியாநிலை ஏற்படும் பொழுது பெரும்பான்மையினர் தரும் முடிவுகளுடன் அவர்கள் இணைந்து தீர்ப்புக் கூறுதல் ஆய்வுகளைப் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டி யுள்ளது.

## உளவியல் தேர்வு :

உளவியல் சார்ந்த தேர்வு என்று குறிப்பிடும் பொழுது நுண்மதித் தேர்வுகளை மட்டும் கருத்திற் கொள்ளுதல் தவறானதாகும். மனவெழுச்சிகளை அறிவதற்குரிய கலையாக்கங்களை வெளிப்படுத்தும் தேர்வுகளும் இப்பிரிவில் அடக்கப்பட வேண்டியுள்ளன. ஆளுமையைப் பலவழிகளில் அளவிடும் தேர்வுகளும் உளவியல் சார்ந்த தேர்வுகளாக அமையும். சிறார் உளவியலில் அவர்களின் உடல் இயக்கத் திறன்களை அறிதல், மொழி விருத்தி, சமூக விருத்தி முதலியவற்றை அறிதல் சிறுவர்களின் பின்னடைந்த துறைகளை அறிதல் என்பவற்றுக்கும் தேர்வுகளை அமைக்க முடியும்.

ஒப்பீட்டளவில் மிக இலகுவான முறையில் தகவல்களின் திரட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு வினாக் கொத்துக்கள் விசாரணை செய்வோர்க்கு அனுகூலமாக அமைதல் ஆய்வாளர்களினாற் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புள்ளியியல் முறை :

பரந்த அளவிலே தகவல்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்துவதற்கும், வியாக்கியானம், செய்வதற்கும், பொதுமை காணுவதற்



கும், முடிவுகளை அறிவிப்பதற்கும், மத்திய செல்நிலைகளை அளத்தல், வீச்சுக்களை விபரித்தல், நியம விலகல்களைத் தெரிவித்தல், தொடர்புகளை அறிதல், பொருண்மை காணல் போன்ற துறைகளிற் புள்ளியியல் முறையினைப் பயன்படுத்த முடியும். தரவுகளைப் பெறவும், வழுக்களை நீக்கவும் இங்கு பல்வேறு நுட்பங்கள் பயன்படுத்தப் படுகின்றன. சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்குப் புள்ளியியல் முறையே இன்று பெருமளவிற் பயன்படுத்தப்படுகின்றது. சமூகக் கட்டமைப்பில் மாற்றங்கள் நிகழும் பொழுது மக்கள் நடத்தைகளிலும் மனோபாவங்களிலும் மாற்றங்கள் நிகழ முடியும். இந் நிலையில் புள்ளியல் ஆய்வுகளிலிருந்து நிரந்தர விழுமியங்களை உறுதி செய்வதும் கடினமாகின்றது.

புள்ளி இயல் முறையை மிகையாகப் பயன்படுத்தும் பொழுது, கருத்தியல் சார்ந்த ஆய்வுகளைப் புறக்கணித்து விட முடியாதென்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. உளவியல் ஆய்வுமுறைகளுள் ஒன்றாக உளப்பகுப்பு ஆய்வு விளங்குகின்றது. இந்த ஆய்வு முறையைப் பயன்படுத்தி உளப்பிணியாளர்களை ஆராய்ந்த பொழுது சிறார் நிலையில் அவர்கள் பெற்ற மனவெழுச்சி சார்ந்த துன்பியல் அனுபவம் உளப்பிணிக்குக் காரணமாக அமைந்தமை கண்டறியப்பட்டது. சிறார் நிலையில் உருவான உளத்தாக்கங்களும் முரண்பாடுகளும் மனித வளர்ச்சியின் போது தொடர்ந்தும் எடுத்து வரப்பட்டு வளர்ந்தோர் நிலையிலும் தாக்கங்களை ஏற்படுத்துவதை இந்த ஆய்வு வலியுறுத்துகின்றது.

## உளப்பகுப்பு முறை :

உளப்பகுப்பு ஆய்வில் உள்ளம், நனவு உள்ளம், நனவிலி உள்ளம் எனப் பாகுப்படுத்தப்படுகின்றது. துன்பியல் சார்ந்த உணர்வுகளும், பாலியல் சார்ந்த நிறைவேறாத எதிர்பார்ப்புக்களும் நனவிலி உள்ளத்திலே தேக்கி வைக்கப்பட்டு நனவிலி ஊக்கல்களாகத் தொழிற்படுகின்றன. கனவுகளிலும், கருத்தேற்ற நித்திரைகளிலும் நனவிலி உள்ளத்தின் இயல்புகளை அறிந்து கொள்ள முடியும் என இந்த முறையிலே கருதப்படுகின்றது.

புலன் உறுப்புக்கள் வழியாக இன்பம் பெறுதலைச் சிறார்கள் விரும்புகின்றனர். அவ்வாறு இன்பம் பெறுதலுக்குத் தடைகள்

நிகழ்ந்து மனமுறிவு தூண்டப்படும் பொழுது "ஈகோ" எனப்படும் ''அகம்'' பாதிக்கப்படுகின்றது. அது (இட்) அகம், மீ ஆகம் ஆகியவை மனித ஆளுமையின் இணைப்புக்களாக விளங்குகின்றன.

பாலியல் விருப்புக்களையும், பயங்களையும் அடக்குவதால் உணர்வு பூர்வமாக அறியப்படாது அவர்களிடத்து உளச்சிக்கல் உண்டாக்கி விடுகின்றது. அவ்வாறு நிகழும் உளச்சிக்கலை அவர் களது உணர்வுக்கு கொண்டு வந்து நெறிப்படுத்துவதன் வாயிலாக உளப்பிணியை நீக்க முடியும் என்பது இந்த ஆய்வின் உள்ளடக்கம்.

கனவுகளிலிருந்தும், கருத்தேற்ற நித்திரைகளில் இருந்தும் பெறப்பட்ட கருத்துக்களை அனைவருக்கும் பொதுமையாக்குவதில் இடர்பாடுகள் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. மேலும் உளப் பகுப்புக் கொள்கையாளர் புலன் உணர்ச்சி கவனம், ஆழ் புலன்காட்சி, கற்றல், போன்ற துறைகளில் மிகக்குறைந்த ஆய்வு விருப்பையே காட்டியுள்ளனர் என்றும் உளப்பகுப்பு இயக்கம் புலமை வட்டத்துக்கு வெளியிலேயே பெருமளவில் விருத்தி கொண்டதென்றும் விமர்சனங்கள் முன் மொழியப்படுகின்றன.

பல்வேறு ஆய்வு முறைகளையும் உள்ளடக்கிய அகல்விரி அணுகுமுறையே குழந்தை உளவியலை விளக்குவதற்குப் பொருத்த மானது.



# நடத்தைகளுக்குரிய உயிரியல் மற்றும் சமூக அடிப்படைகள்

குழந்தைகளின் உருவாக்கம், உயிரியல் மற்றும் சூழற்காரணி களினாற் பல மலர்ச்சி கொள்கின்றது. ஸ்பேர்ம் (Sperm) எனப்படும் தந்தையர் விந்தும், ஓவம் (Ovum) எனப்படும் தாயின் சூழலும் ஒன்றிணைந்து கருவளமுள்ள உயிரணுவாக மலர்ச்சி கொள்ளும் பொழுது அவற்றிலே பொதுவாக இருபத்து மூன்று நிறமூர்த்த (Chromosomes) இணைப்புச் சோடிகள் காணப்படும். அவற்றில் அரைப்பங்கு தாயாலும் அரைப்பங்கு தந்தையாலும் பங்களிப்பு செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு நிறமூர்த்தத்திலும் அமைந்துள்ள உயிர் மரபு அணு (Genes) வின் வழியாக உயிர்ப்பாரம்பரிய இயல்புகள் அல்லது சந்ததி இயல்புகள் கையளிக்கப்படும்.

சிறார்களின் கண்ணிறம், தோலின் நிறம், உரோமங்கள், குருதிவகை, நிறக்குருடு, உயரம், உடற்கட்டு, முகவெட்டு, மூக்கின் இயல்பு, முதலியவை சந்ததி இயல்புகளாற் பெறப்படும் தேட்டங் களாகவுள்ளன.

உடலியக்கத்தோடும், தொழிற்பாடுகளோடும் இணைந்த தேவைகள் உடல் சார் தேவைகள் என்று குறிப்பிடப்படும். பின்வரு வன உடல் சார்ந்த தேவைகளிற் சிறப்பாகக் குறிப்படப்படுகின்றன.

***1. உணவு, வளி, நீர் முதலியவற்றுக்கான தேவைகள்***

இவை அடிப்படைத் தேவைகளாகும். இவற்றை நிறைவேற் றாது கற்றலையும் கற்பித்தலையும் முன்னெடுக்க முடியாது.

2. **பொருத்தமானதும் இசைவானதுமான வெப்பநிலையின் தேவை:**

வெப்பநிலை 98.6 பரன்னைற்றுக்கு மேலாக உயரும் பொழுதோ அல்லது தாழ்வாகச் செல்லும் பொழுதோ உடற்சமநிலை பாதிப்பு க்கு உள்ளாகும். இந்நிலையில் மாணவரின் உடல் வெப்பத்துக்கு ஊறு விளைவிக்காத வகுப்பறைச் சூழல் அமைக்கப்படுதல் வேண்டும்.

3. **தொழிற்பாட்டுக்கும் ஓய்வுக்குமான தேவை :**

சிறார் வளர்ச்சிக்குத் தொழிற்பாடும் ஓய்வும் தவிர்க்க முடியாத தேவைகளாகவுள்ளன. தொழிற்பாடுகளையும் ஓய்வையும் சமநிலைப்படுத்தும் வகையில் முன்பள்ளிக் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

4. **கழிவகற்றும் தேவை:**

மலம், சிறுநீர் மற்றும் உடல்சார் கழிவுகளை அகற்றும் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வசதிகளும், நேர ஒழுங்கு வாய்ப்புக்களுமே மாணவர்களுக்குச் செய்து தரப்படல் வேண்டும்.

நடத்தைகளுக்கான உயிரியல் அடிப்படைகளை வலியுறுத்துவோர் புலன் உறுப்புக்கள் (Sense Organs) வெளிப்பாட்டு அங்கிகள் (Effector Organs) நரம்பியற் தொகுதி முதலானவற்றின் வளர்ச்சிக்கும், மேம்பாடுகளுக்கும் கற்றலுக்குமிடையே காணப்படும் இணைப்புக்களைத் தொடர்புபடுத்திக் கூறுவர். மேலும் உடலிலே காணப்படும் சுரப்பிக்கும் நடத்தைகளுக்குமிடையே காணப்படும் தொடர்புகளையும் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டு உளவியலாளர் விளக்குகின்றனர். சுரப்பிகள் இரண்டு வகையாகப் பாகுபடுத்தப்படும். ஒருவகையானவை புறநிலையான வெளியீடுகளைக் (External Secretion) கொண்டவை. மற்றவை உடலின் உள்ளூறுப்புக்களிலே சுரந்து தொழிற்பாடுகளைப் புரிகின்றன.

மனிதரின் நுண்மதி வளர்ச்சிக்கும் தைரொயிட் சுரப்பியின் (The Thyroid Gland) இயக்கத்துக்கும் தொடர்புகள் உண்டென்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தச் சுரப்பியின் தொழிற்பாடுகள் பிறப்பிலே பிறழ்நிலை கொண்டதாக இருப்பின் மனிதவளர்ச்சி, உளத்தொழிற்பாடு, உணர்வுகள் முதலியன பாதிப்புக்கு உள்ளாகும்.

மனித நடத்தைகளிலே தாக்கங்களை ஏற்படுத்தும் சுரப்பிகளும் பிற்றி யூற்றறி சுரப்பியும் (The Pituitary) சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. மனித ஆளுமைக் கோலங்கள், உடற்கட்டுக் கோலங்கள். பாலியல் சார்ந்த நடத்தைகள் முதலியவற்றில் இச்சுரப்பியானது தாக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றது.

அட்றீனல் சுருப்பிகளும் (The Adrenal Glands) மனித நடத்தை உருவாக்கத்திலே சிறப்பார்ந்த தாக்க விளைவுகளை ஏற்படுத்து கின்றன. ஒருவரிடத்தே களைப்பு, சோர்வு, மந்தம், உந்தல்கள் முதலியவற்றின் இதன் இயக்கக் குறைவு செல்வாக்குச் செலுத்து கின்றது. மிகையாக இது சுரக்கத் தொடங்கினாலும் பல எதிர் விளைவுகள் தோன்றும். உதாரணமாக பாலியல் முதிர்வில் பல ஒழுங்கீனங்கள் ஏற்படும்.

இவற்றைத் தவிர வேறு பல சுரப்பிகளும் மனித உடலிலே தொழிற்பட்டுப் பல்வேறு விளைவுகளைப் புரிகின்றன. சுரப்பிகளின் பிறழ்வான செயல் முறைகளினால் கண் பார்வைக் குறைவு, செவிப் புலன் உணர்வுக் குறைவு, பற்பழுது, உடல் ஒழுங்கினம், தோல் நோய்கள், பேச்சுத்திறன் பாதிப்பு முதலியன ஏற்படும். இந்நிலையில் சிறார்களது கல்வியில் கவனம் செலுத்துவோர் அவர்களது நலவியல் பற்றிய அடிப்படை அறிவும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

புள்ளிவிபரவியல் ஆய்வுகளின்படி சிறார்களில் முப்பது விழுக்காட்டினர் ஏதோ ஒரு விதத்தில் பார்வைக் குறைபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனால் இக்குறைபாடுகள் திருத்தியமைக்கப்படக் கூடியுதாகவுள்ளது என்பதை ஆசிரியர்கள் அறிந்திருந்தல் வேண்டும்.

செவிப்புலன் பாதிக்கப்படும் சிறார்களிடத்துப் படிப்படியாக பிறழ்வு நடத்தைகள் தோன்றும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். மிகையுணர்ச்சி கொள்ளல், பிறர்மீது அவநம்பிக்கை, தனிமையுறல் முதலாம் நடத்தைகள் அதனால் வளர்ச்சியடையத் தொடங்கும். பேச்சுக் கோலங்களைத் திரட்டிக் கொள்வார்கள். ஆய்வுகளின்படி

பொதுவாக பதின்நான்கு சதவீதமான சிறார்களிடத்துச் செவிப்புலன் பாதிப்பு ஏதோ ஓர் அளவிற் காணப்படுவதாகக் குறிப்பிடப்படு கின்றது.

போதிய உயர வளர்ச்சியை எட்டாமை. அதிக மெலிவு, மிகை யான பருமன், தாமதித்த வளர்ச்சி, ஒரு கை அல்லது ஒரு காலின் வளர்ச்சி குறைந்திருத்தல், மிகையான சுருக்கங்கள் ஏற்படுதல் முத லாம் இயல்புகள் பிறழ்வாக நடத்தைகளைத் தூண்டலாம் என்பதை ஆசிரியர் தெரிந்திருத்தல் அவசியமாகின்றது.

ஆய்வாளர்கள் உயிரியற் காரணிகளிலும் பார்க்க சூழற்காரணி களுக்கும், சமூகக் காரணிகளுக்கும் கூடுதலான அழுத்தங்களைக் கொடுக்கின்றனர். சூழற்காரணிகளே உயிரியல் சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால் அவை இரண்டும் இடையுறவுகள் கொண்டவை என்பதை மனங் கொள்ளல் வேண்டும். சிறப்பாகக் கூறுவதானால், உளவளர்ச்சி, அறிகை வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறவொழுக்க வளர்ச்சி முதலிய வற்றில் சூழலினதும், பண்பாட்டுக் கோலங்களினதும் செல்வாக்கே மிகையாகக் காணப்படுதலை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அன்பு, ஆதரவு, அரவணைப்பு, அற்ற சூழலிலும், சிதைந்த குடும்பங் களிலும் வாழ்ந்த சிறுவர்களின் அடைவுகளும், நுண்மதித் திறனும் பாதிப்படைந்திருந்தன. அவ்வாறே கடும் வறுமை, அதீத குடிப் பழக்கமுள்ள பெற்றோர் வாழும் சூழல் முதலியன வற்றைப் பின்புல மாகக் கொண்ட சிறுவர்களது அடைவுகளும் பாதிப்புக்கு உள்ளாகி யிருந்தன. பிறரது ஊடாட்டங்களின்றித் தனிமையில் வாழ் ந்த சிறுவர்களது அடைவுகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

மேல் நோக்கிய சமூக அசைவியக்கத்தை அவாவி நிற்கும் குடும் பச் சூழலில் வாழும் சிறார்களின் அடைவுகளில் ஒப்பீட்டளவிலான முன்னேற்றம் காணப்படுகின்றது. மேலும் குடும்பச் சூழலும் பொருளாதார நிலமையும் சிறுவர்களது ஆளுமைக் கோலங்களில் நேரடியான செல்வாக்குச் செலுத்துதலும் கண்டறியப்பட்டுள்ளது. சிறுவர்களது தலைமைத்துவப் பண்புகள் முற்று முழுதாக சூழலால் உருவாக்கப்படுகின்றன என்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

சூழலை அடிப்படையாகக் கொண்ட பின்வரும் இலக்குகள் மாணவர்களால் எதிர்பார்க்கப்படுகின்றன.



**1. அந்தஸ்துக்கான தேவை**

பிறரது கணிப்பு, கவனம், அங்கீகாரம் முதலியவற்றைச் சிறார் அவாவி நிற்கின்றனர்.

**2. பாதுகாப்புத் தேவை**

உள அடிப்படையிலான பாதுகாப்பு, உடல் சார்ந்த பாதுகாப்பு, உறுதியான சூழல் முதலியவை சிறாரின் தேவைகளாகவுள்ளன.

**3. அன்பு மற்றும் அரவணைப்பை எதிர்நோக்கும் தேவை :**

அன்பு மற்றும் அரவணைப்பு கிடைக்கப் பெறாத சிறுவர்கள் அமைதி குலைந்தவர்களாகவும், இறுகிய உளப்பாங்கு கொண்டவர்களாகவும் இருப்பர்.

**4. சுயாதீனத்தை அவாவும் தேவை:**

தமது ஆற்றல்களைச் சுதந்திரமாக வெளியிடவும், சுயாதீன மாகத் தொழிற்படவும் சிறுவர்கள் விரும்புவர்.

**5. திறன்கதவுகளை (Competencies) வெளியிடும் தேவை :**

தமது ஆற்றலால் நண்பர்களையும், சூழலையும் வசப்படுத்தும் பொழுது சிறார் மிகுந்த மகிழ்ச்சியடைவர்.

சிறாரின் உடனடி நினைவு (Immediate Memory), பிரச்சினை விடுவித்தற் செயற்பாடு, கண்டுபிடிக்கும் ஆற்றல், ஆக்கமலர்ச்சி (Creativity) முதலியவை பெரும்பாலும் சூழலின் செல்வாக்கினால் வள மூட்டப்படுகின்றன.

பிறந்து பதினைந்து மாதங்களுக்குப் பின்னரே குழந்தைகள் பொதுவாகப் பேசத் தொடங்குகின்றார்கள். சில குழந்தைகள் எட்டு மாதமளவிலே முதலாவது சொல்லை உச்சரிக்கின்றார்கள். இரண்டு வயதுக்குப் பின்னர் பேசத் தொடங்கும் பிள்ளைகளும் இருக்கின் றார்கள். பேசத் தொடங்கும் காலத்திலிருந்து குழந்தையிடம் நிகழும் மொழிவளர்ச்சிக்குச் சமூகச் சூழலே பொறுப்பாக அமைகின்றது.

முன்பள்ளிகளிலே மாணவர்கள் தொழிற்படுவதற்கான தயார் நிலை (Rediness) கற்பதற்கான தயார்நிலை, தொழிற்பாடுகளிலே நிகழும் வினைப்படும் பங்குபற்றல் (Active Participation) முதலி யவை அவர்கள் வாழும் குடும்பச் சூழல், வாழும் அயற்சூழல், பொரு

ளாதார நிலை முதலியவற்றுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளன.

முன்பள்ளி மாணவரிடத்துக் காணப்படும் தன்னம்பிக்கை, கற்றுணிவு, தொடங்கும் ஆற்றல், வெட்கமற்ற சுய வெளிப்பாடு முதலியனவும் குடும்பச் சூழலால் வளமூட்டப்படுகின்றன. முன் பள்ளி அனுபவங்கள் வாயிலாக இவற்றைப் பின்தங்கிய மாணவர் களிடத்தும் வளர்க்க முடியும் என்பதைச் செயல்வழி ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.



# குழந்தையும் குடும்பச் சூழலும்

தாயும், குடும்பமும் குழந்தையின் முதலாவது சூழலாக அமை கின்றன. குழந்தையின் வாழ்வு, பாதுகாப்பு அன்பு முதலிய தேவை கள் அடிப்படைத் திருப்தி நிலையிலாவது குழந்தைகளுக்கு வழங்கப் படல் வேண்டும். ஒருவர் மீது மற்றவர் தங்கியிருக்கின்றனர் என்ற உணர்வு குடும்பத்தால் வளர்க்கப்படுதல் முக்கியமானதாகும். இந்த நம்பிக்கை அல்லது அறக்காப்பு நம்பிக்கை அல்லது அறக்காப்பு (Trust) குழந்தைகளின் உளச் சமூக வளர்ச்சியில் அவசியமான தொன்றாகக் குறிப்பிடப் படுகிறது.

குடும்பக் கட்டுமானம் குடும்ப உறுப்பினர்களின் பரஸ்பர தொடர்புகள், தங்களது நடிபங்குகளை ஒவ்வொருவரும் பொறுப் புணர்ச்சியுடன் நிறைவேற்றுதல் முதலியவை குழந்தை வளரும் சூழலிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்பச் சூழல் சமூகச் சூழலின் செல்வாக்கு நேரடியாக உண்டு.

குடும்பத்துச் சூழலியற் காரணிகளும் (Ecological Factors) குழந்தை வளர்ச்சியிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்ப வசதிகள், சுத்தம், பாத்திரங்கள், நெருக்கம், குடும்ப உறுப்பினர்களின் மொழிப் பிரயோகம், உரையாடல், நடத்தைகள், தாவரங்கள், விலங்குகள், தளபாடங்கள், பாத்திரங்கள், பொழுதுபோக்குகள் போன்ற பல்வேறு அமைப்புக்கள் குடும்பச் சூழலியலில் அடங்கு கின்றன.

குழந்தை வளர்ப்புமுறை, தாய் தந்தையரின் முதிர்ச்சிப் பண்பு கள், குழந்தையின் சகோதரர்களுக்கிடையே காணப்படும் வயது வீச்சு, குடும்பத்திலே காணப்படும் கட்டுப்பாட்டு முறைமைகள், குழந்தையின் வளர்ச்சியிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பெற்றார் நடத்தைப் பண்புகள் உளவியலிலே பின்வருமாறு பகுத்து ஆராயப்படுகின்றன.

1) குழந்தையின் சுயாதீனத்துக்கு உற்சாகமளித்தல்
2) சனநாயகப் பண்புகள்
3) அன்பை வெளிப்படையாகக் காட்டுதல்
4) அடைவுகளுக்கு ஊக்கப்படுத்துதல்
5) உடல் நலத்திலே கவனம் செலுத்துதல்
6) உணர்வுகளை அடக்கப் பழக்குதல்
7) எரிச்சலூட்டுதல்
8) புறக்கணித்தல்
9) பயமூட்டுதல்
10) பதகளிப்பூட்டுதல்
11) கடும்பிடியாக இருத்தல்
12) அறநெறிப்படுத்துதல்
13) தெய்வீக உணர்வூட்டுதல்

குடும்பத்திலுள்ள ஆண் உறுப்பினர்களைப் பின்பற்றியே குழந்தை தான் காணும் ஆண் மாதிரிகையை (Mele Model) உருவாக்கிக் கொள்ளுகின்றது. அவ்வாறே பெண் உறுப்பினர்களைப் பின்பற்றிப் பெண் மாதிரிகையைத் தனக்குள் ஏற்படுத்திக் கொள்ளுகின்றது.

குழந்தை உளவியலாளர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி குழந்தையின் அறிகையாற்றல் வளர்ச்சியிலே பின்வருவன நேரடியான செல்வாக்குச் செலுத்துதல் கண்டறியப்பட்டுள்ளது.

1) தந்தையாரின் கல்வி
2) தாயாரின் கல்வி
3) குடும்ப உறுப்பினர்களின் கல்வி
4) கல்விசார் ஊக்குவிப்புக்கள்
5) குடும்பத்தின் சமூக பொருளாதாரக் கட்டுமானம்

குழந்தை வளரும் சூழலில் அவர்களுடன் விளையாடும் உடன் குழுவினர் அல்லது சகபாடியினர் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றனர். உடன் குழுவினரிடம் குழந்தைகள் விளையாடும் நடத்தைகள் பின்வருமாறு பாகுபடுத்தப்படுகின்றன.



1) உடன் குழுவினருடன் ஈடுபடாது விளையாடுதல்.
2) தாம் விளையாடாது மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்து நிற்றல்.
3) மற்றவர்களுடன் சமாந்தரமாக விளையாடுதல்
4) கூட்டுறவுப் பாங்குடன் விளையாடுதல்
5) பூரண திருப்தியின்றி விளையாடுதல்
6) அதிக திருப்தியின்றி விளையாடுதல்
7) மற்றவர்களிலும் மேலோங்கிய நிலையில் விளையாட வேண்டுமென எண்ணுதல்.

குறித்த விளையாட்டு நிகழ்ச்சியின் போது மேற்கூறியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பண்புகள் காணப்படலாம்.

விளையாட்டுக்களுடன் இணைந்து பின்வரும் சமூக மயமாக்கல் நடவடிக்கைகள் வளர்ச்சியுறும்.

1) வளர்ந்தோர் மீது தங்கியிருக்கும் நிலை குறைந்து சக பாடிகள் மீது தங்கிருக்கும் நிலை வளர்ச்சியடைதல்.
2) அதீத உணர்வு வளர்தல்
3) தலைமைத்துவப் பண்புகள் வளர்தல்
4) போட்டியுணர்வு வளர்தல்
5) மதிப்பீட்டுத் திறன்கள் வளர்தல்
6) சண்டையிடும் நேரம் நீழுதல்
7) வன் நடத்தைகள் வளருதல்
8) பிறரை மாதிரிகையாகப் பின்பற்றல் (Modeling) வளர்ச்சியடைதல்.

சிறுவர்கள் மீது அதிக செல்வாக்குச் செலுத்தும் விசையினராக உடன் குழுவினர் விளங்குகின்றனர். குடும்ப உறுப்பினர்களிடம் கிடைக்காத திருப்தி உடன் குழுவினரிடம் கிடைக்கின்றது. வளர்ந்தோரைக் காட்டிலும் உடன் குழுவினது மாதிரிகையினையே சிறுவர்கள் கூடுதலாகப் பின்பற்றுகின்றனர். கீழ்ப்படிவு, கீழ்ப்படிவின்மை, சுயகட்டுப்பாடு, சுய வெளிப்பாடு முதலியவற்றின் உருவாக்கத்தில் உடன் குழுவினரது செல்வாக்கு மிகையாக உண்டு.

மனவெழுச்சிகளின் வெளிப்பாட்டிலும் அவர்கள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

## மனவெழுச்சி வளர்ச்சி

மனவெழுச்சிகளை அடக்கும் திறன், திசை திருப்பும் திறன் போன்றவை வளர்ந்தோரிடத்துக் காணப்படலாம். ஆனால் சிறு வரைப் பொறுத்தவரை மனவெழுச்சி வெளிப்பாடுகள் கட்டுப் பாடுகளற்ற வெளிப் ப்ாய்ச்சலாகக் காணப்படுதல் முன்பள்ளிச் சிறாரை உற்றுநோக்கிய வேளை பதிவு செய்யப்பட்டன.

மனவெழுச்சி தொடர்பாகக் கிளர்ந்தெழும் சிறார் முரண் சமூக நடத்தைகளைக் கொள்ளும் பொழுது பிரச்சினைக்குரியோரா கின்றனர். அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் வெவ்வேறு விதமான மனவெழுச்சி வெளிப்பாட்டு வடிவங்கள் எப்போது எதிர்பார்க்கப்படும் என்ற முற்குறிப்புகளையும் தருகின்றன.

பொதுவாக மனவெழுச்சிகளை இரண்டு பிரிவாக வகையியல் செய்யலாம். பயம், கோபம், பொறாமை, பதகளிப்பு என்ற மகிழ்ச்சி தரா மனவெழுச்சி அருவியும், மகிழ்ச்சி, அன்பு, காதல், உற்சாகம் என்ற மகிழ்ச்சி தரும் மனவெழுச்சி அருவியும் என்றவாறு வகையி யல் அமையும்.

மனவெழுச்சிகளை, 'எளிமையானவை' 'சிக்கலானவை' என்று வகையியல் செய்யும் முறைமை உளவியலாளரிடம் காணப்படு கின்றது. பயம், கோபம், காதல் போன்றவை எளிமையானவை என்பதில் பெயின், றிபொற்(றிபோ) மக்டூகல், உவாற்சன் போன் றோரிடத்து இணக்கம் காணப்படுகின்றது. முதல் நிலையான மன வெழுச்சிகளே எளிமையான மனவெழுச்சிகள் என்று கொள்ளப் படும்.

பயம், கோபம், காதல் ஆகிய முதல் நிலையான மனவெழுச் சிகளைத் தவிர்ந்த பிறமனவெழுச்சிகள் அனைத்தும் சிக்கலானவை என்று கொள்ளப்படும். சிக்கலான மனவெழுச்சிகளைப் பல்வேறு



மூலக்கூறுகளாகப் பிரித்தறியலாம். அவற்றுள் கோபமும் பயமும் பிரதான மூலக்கூறுகளாக உள்ளமைந்திருக்கும்.

சிக்கலான மனவெழுச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அழகியல் மனவெழுச்சி குறிப்பிடப்படுகின்றது. இதனை அழகுனர் மகிழ்ச்சி மனவெழுச்சி என்றும் விளக்கலாம். இந்த மனவெழுச்சியில் உள்ளமைந்த முதல் நிலையான மனவெழுச்சி மூலக்கூறுகள் ஒப்பீட்டளவில் செறிவு குன்றியதாகவும், மகிழ்ச்சி தரத்தக்க வகை யில் இசைவு கொண்டதாகவும் காணப்படும். அழகு தரும் பொருள் களில் இருந்து கிடைக்கப்பெறும் பலவகைத் தூண்டிகள் அழகியல் மனவெழுச்சிகளை உண்டாக்குகின்றன.

அபாயம் என்ற தூண்டி சாட்சி கொள்ளப்படும் பொழுது பயம் தோன்றுகின்றது. கற்றல் என்பது ஒரு புறம் பயத்தைத் தூண்டு வதற்கும் துணை செய்கின்றது. மறுபுறம் பயத்திலிருந்து விடுபடு வதற்கும் வழியமைக்கின்றது. காட்சியும் கற்றலும் வளராதவிடத்து பயமும் வளராதி ருக்கும். பொதுவாக இரண்டு வயதுக்கு உட்பட்ட சிறார்கள் துன்பந்தரும் விலங்குகளைக் கண்டு பயம் கொள்வ தில்லை. விலங்குகளின் எதிர்மறைச் செயற்பாடுகள் பற்றிய கற்றல் வளர பயமும் விருத்தியடையத் தொடங்குகின்றது. கற்றலின் உட்கூறாக அமைவது அனுபவம். உடற் கூறுகளின் வழியாக அனுபவிக்கப்பட்ட நோவும் துன்பமும் பயத்தைத் தூண்டி விடும்.

பொதுமையாக்கல் என்ற கற்றற் பண்பும் பயத்தை விருத்தி செய் கின்றது. ஒரு நாயினால் துன்ப அனுபவங்களைப் பெற்ற பயம். ஏனைய நாய்களும், துன்பத்தைத் தரலாம் என்ற பயத்தை ஏற்படுத்துகின்றது. நிபந்தனைப்படுத்தல் வாயிலாகக் கற்றலும் பயத்தை விருத்தி செய்கின்றது. ஓர் ஒடுங்கிய அறையில் நிகழ்ந்த பயம் தரும் சம்பவம் ஏனைய ஒடுங்கிய அறைகளைக் காணும் பொழுதும் நிபந்தனைப்படுத்தப்படுகின்றது.

சிறார் நிலையில் உண்டாகும் பயம் நிலை கொள் பயமாக மாறி வளர்ந்தோர் நிலையிலும் விருத்தியடைந்து சென்றுள்ளமை ஆய்வு களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. விலங்குகள் பற்றிய பயம், தீ, நோய், நீரில் மூழ்கியமை போன்றவற்றால் சிறு வயதில் நிகழ்ந்த உடல்சார் தீங்குகள் வளர்ந்தோரிடத்து நிலைகொள் பயமாக இருந்தமை தெரிய வருகின்றது.

உளவியலாளர் பயம் என்ற மனவெழுச்சியை இருவகையாகப் பாகுபாடு செய்கின்றனர். அவை புறநிலையான பயம், அகநிலை யான பயம் எனப்படும். இருள் சார் பயம், விலங்குகள், பொலிஸ், இராணுவத்தினர் சார் பயம் முதலியவை புறநிலைப் பயத்துக்கு எடுத்துக் காட்டுகளாகும். அகநிலைப்பயம் என்பவை செயற்படும் கற்பனை, தழுவியதாய் எழுச்சி கொள்ளும் ஆபத்துக்கள் பற்றிய கற்பனை, எதிர்காலம் பற்றிய கற்பனை முதலியவை அகநிலைப் பாடு கொண்டவை. பேயும் ஆவிகளும் பற்றி கற்பனை அகநிலை யான பயத்தைத் தூண்டும்.

ஆழம், உயரம், ஒடுக்கம், ஒலி, ஒளி போன்ற பௌதிக நிலைப் பாடு கொண்ட பயம் புறநிலையான பயம் என்ற பாகுபாட்டுடன் தொடர் புடையது. தனிமை, அறியாச்சூழல் முதலியனவும் சிறாரிடத்துப் பயம் தூண்டும்.

பாதுகாப்பு இன்மை தொடர்பாக எழும் பயம் உளவியலில் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியுள்ளது. தம்மை ஒத்த வயதினருடன் உடல் அடிப்படையிலும், உள அடிப்படையிலும் போட்டியிட முடியாநிலை யில் சிறுவர்க்கு எழும் பயம் பாதுகாப்பு இன்மையால் எழும் பயத்துடன் இணைந்தது. சிறுவர் மீது தொடர்ந்து தவறு காணப்படுமிடத்தும், தொடர்ந்து அவர்கள் விமர்சிக்கப்படுமிடத் தும் பயம் எழுகின்றது.

நிச்சயமற்ற நிலைக்குச் சிறுவர் தள்ளப்படுமிடத்தும், அன் பைத் தருவதிலும், பொருள்களைத் தருவதிலும் பெற்றார், உற்றார் பாகுபாடு காட்டுமிடத்திலும் பயம் வளருகின்றது. சிறாருக்கு வழங்கப்படும் தண்டனைகளாலும் பயம் உருவாக்கப்படுகின்றது. அளவுக்கு மீறியதாகத் தண்டனை வழங்கல், காரணமின்றித் தண்டனை வழங்கல், தண்டனை வழங்க வேண்டும் என்பதற்காகத் தண்டனை வழங்கல், தண்டனை வழங்கலில் நிச்சயமற்ற போக் கினைக் கடைப்பிடித்தல், நோக்கமறியாது தண்டனை வழங்கல் போன்றவை பயத்தை உருவாக்குகின்றது.

பெற்றோரின் அறியாமையும் சிறாரிடத்துப் பயத்தை வளர்த்து விடுகின்றது. பயம் தரும் கதைகள் கூறி உணவருந்தச் செய்தல். நித் திரை கொள்ளச் செய்தல் போன்றவை பயத்தை விளைவிக்கின்றன. இவை எதிர்மறைக் கற்பித்தலினால் உருவாக்கப்படும் பயம் ஆகும்.



குறியீடுகள் சார்ந்த பயமும் கற்பித்தலினால் உண்டாக்கப்படு கின்றது. காகம் கரைதல், பல்லி சொல்லல், கனவு போன்ற குறியீடுக ளாலும் கற்பிக்கப்படுகின்றது.

பயம் போன்று கோபமும் முதல் நிலையான ஒரு மனவெழுச்சி யாகும். குழந்தை நிலையிலிருந்தே பொதுவாகக் கோபம் காணப்படு வதனால், அதனைப் பிறப்புடன் கூடிய ஒரு காரணியாகக் கொள்ள லாமா என்ற கேள்வி எழுகின்றது. பிறப்புடன் கூடியவை, சூழலால் உருவாக்கப் பட்டவை என்றவாறு தனித்தனித் துண்டங்களாக வகையியல் செய்து நோக்கல் உளவியலின் முழுமைக் காட்சியைப் பாதிக்கும்.

தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்தும், இலக்குகளிலே குறுக்கீடுகள் தோன்றுமிடத்தும், வேண்டுமென்றே கட்டுப்பாடுகள் விதிக்குமிடத்தும் கோபம் ஏற்படலாம். ஆத்திரமூட்டும் நடவடிக் கைகள் கோபத்தைத் தூண்டுகின்றன.

சிறாரிடத்துப் பெருமளவில் உடல் சார்ந்ததாகவும், வளர்ந் தோரிடத்துப் பெருமளவில் உளம் சார்ந்ததாகவும் கோபம் ஏற்படு கின்றது. உடல் அசைவுகளிலே தடைகள் ஏற்படல். பொருள்களை எட்டாதவிடத்தில் வைத்தல், கவனத்தைக் கலைத்தல், உடலுக்குத் தாக்கங்களை ஏற்படுத்துதல் முதலியவை கோபத்தை ஏற்படுத்து கின்றன.

வளர்ந்தோரிடத்து உளநெருக்கிடைகள், உளத் தாக்கங்கள் முதலியவை கோபத்தை உண்டாக்குவதில் ஒப்பீட்டளவில் வலு மிக்கவையாயுள்ளன.

ஒரு வயதுச் சிறாரின் கோப வெளிப்பாடுகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அவை கோபம் உருவாக்கிய காரண கர்த்தாவை அல்லது தடையை நோக்கிய ஒழுங்குபடுத்தப்பட்ட தாக்குதல் குன்றியதாகவும் ஆனால் நான்கு வயதுச் சிறாரின் கோப வெளிப் பாடு கோபம் உருவாக்கிய பொருளை நோக்கிய திட்டவட்டமான குறிக்கோளுடன் செயற்படுவதாக அமையும் என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

சிறாரின் கோப வெளிப்பாடு பெருமளவில் அழுகையுடன் இணைந்ததாக இருக்கும். உளவிருத்தி, அறிகை விருத்தி ஆகியவை

ஏற்பட, அழுகை படிப்படியான கட்டுப்பாடு கொண்டதாக அமையும். கோப வெளிப்பாடு பல்வேறு கோலங்களாக விருத்தியடையும்.

கோபம் விளைவித்த பொருளை நேரடியாகத் தாக்குதல், எதுவித இலக்குக்களுமின்றி மனம் போனவாக்கிலே தாக்கங்களை உண்டாக்குதல் தம்மைத் தாமே தாக்குதல், இடம்பெயர்ந்த தாக்கங்களை உருவாக்குதல் என்ற வகைகளிலே கோப வெளிப்பாடுகள் இடம்பெறுகின்றன.

முன்பள்ளிச் சிறாரைப் பொறுத்தவரை கோபத்தை உருவாக்கும் சந்தர்ப்பங்கள் எவையென்ற ஒரு பட்டியலைத் தயாரித்த வேளை பின்வரும் சந்தர்ப்பங்கள் சிறப்பிடம் பெற்றன.

அ) அதிகாலையில் நித்திரையைக் கலைத்து எழும்புதல்.

ஆ) காலைக் கடன்களிலே பெற்றார் தலையிடுதல்.

இ) உணவு, உடை முதலியவற்றிலே சிறாருடன் இயைந்து செல்லாதிருத்தல்.

ஈ) சிறார் விரும்பிய செயற்பாடுகளுக்கு ஆசிரியர் இடம் தராதிருத்தல்.

உ) குழுச் செயற்பாடுகளிலே தோன்றும் முரண்பாடுகள்.

ஊ) போதிய கவனம், பாராட்டு முதலியவை மறுக்கப்படுதல்.

எ) பொறுப்புக்கள் தரப்படாதிருத்தல், அல்லது தந்த பொறுப்புக் களை நிறைவேற்றுதற்கு முன்னதாகப் பறித்தெடுத்தல்.

ஏ) தண்டனைகள் அல்லது தாக்கம் விளைவிக்கும் சொற்கள். பொதுவாகத் தாம் செய்தமை தவறு என்று கருதிய பொழுதும், தண்டனை தரப்படலாகாது என்றே நினைக்கின்றனர்.

ஐ) சிறார்க்கென உரிய பொருள்களைப் பிறர் பறித்தெடுத்தல்.

ஒ) ஏமாற்றப்படுதல்.

ஓ) அவதூறான வார்த்தைகளைச் சுமத்துதல்.

ஔ) அவமானப்படுத்தப்படுதல்.

கோபத்தை வெளிப்படுத்துவதிற் பால் வேறுபாடு காணப் படுதல் ஆய்வுகளிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆண் சிறார்கள் பெண்களி லும் கூடுதலான வன்செயல் நடத்தைகளுடன் கோப



வெளிப்பாட்டைக் காட்டுகின்றனர். சிறுமியல் தமது கோப வெளிப் பாட்டைச் சொல் சார்ந்த முறையிலே பெருமளவிற் காட்டு கின்றனர்.

பால் வேறுபாட்டினைத் தனித்துச் செயற்படும் ஒரு காரணி யாகக் கொள்ளாது பண்பாட்டுக் கோலங்களுடன் இணைந்த தாகவே கொள்ள வேண்டியுள்ளது. ஆண் பெண் வேறுபாடுகளை மீள வலியுறுத்தும் பண்பாட்டுக் கோலங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதால் அவற்றின் அடிப்படையாக நடத்தைகளும் நெறிப்படுத்தப்படுதல் சுட்டிக் காட்டப்பட்ட வேண்டியுள்ளது.

மேலும் சமூக பொருளாதாரக் கட்டமைப்பும், பெண்களின் கோப நடத்தைகளின் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைத் துலங்குவ தாகவும் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கோபத்துடன் பெருமளவில் இணைந்ததான ஒரு மனவெழுச்சி பொறாமையாகும். சிறார் நிலையிற் பொறாமை எழுவதற்கான நிகழ்ச்சி சகோதரர் மீது பெற்றார் அன்பு காட்ட முயல்வதாகும். புதிதாகப் பிறந்த குழந்தை மீது பெற்றார் அதிக கவனம் செலுத்தும் பொழுது அதற்கு மூத்த நிலையிலுள்ள சிறார் அவ்வாறான ஒரு கவனம் தமக்குத் தரப்படவில்லை என்பதனாற் குழந்தை மீது பொறாமை கொள்ள முற்படுகின்றது.

பொதுவாக அன்பையும், பொருளையும் பங்கிடுவதிலிருந்தே பொறாமை வளர்ந்தெழுகின்றது. நியாயமான பங்கீடு நடைபெற வில்லை என்று உணரும் பொழுது, மிகையான பங்கைப் பெற்றவர் மீது பொறாமை தோன்றுகின்றது.

முன்பள்ளிகளில் மதிப்பீடு வழங்கல் தொடர்பாகவும் பொறாமை வளர்ந்த சம்பவங்கள் உற்று நோக்கப்பட்டுள்ளன. ஒரு சிறுவனுக்கு அதிக பாராட்டுக்கள் கிடைக்கப் பெறும் பொழுது, பாராட்டுக்களை எதிர் பார்த்து நின்ற பிறிதொரு சிறுவனுக்கு அவன் எண்ணிய பாராட்டுக்கள் கிடைக்காத வேளை, பாராட்டுப் பெற்ற சிறுவன் மீது பொறாமை தோன்றுகின்றது.

இரண்டு வயதுச் சிறுவர்களையும், நான்கு வயதுக்கு மேற்பட்ட முன்பள்ளிச் சிறுவர்களையும் உற்று நோக்கியவிடத்து முன்பள்ளிச் சிறாரிடத்துப் பொறாமை மிகுதியாகத் தொழிற்படுதல் குறித்துரைக்

கப்பட வேண்டியுள்ளது. அறிவு, விருத்தி பொறாமையிலும் தாக்க விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. பொறாமை பல்வேறு வித உடல் உள்ளக் கோளாறுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. விரல் சுவைத்தல், நகம் கடித்தல், படுக்கையிற் சிறுநீர் கழித்தல், பிணியாளர் போன்று நடித்தல், உணவு உண்ண மறுத்தல், தனித்திருத்தல், நித்திரை பாதிக்கப்படுதல், கனவு காணல் போன்ற நடத்தைகள் பொறாமை கொள்ளும் சிறுவர்களிடம் காணப்படுகின்றது.

பயம், கோபம், பொறாமை என்பவற்றுடன் இணைந்த பிறிதொரு மனவெழுச்சியாக பதகளிப்பு அமைகின்றது. கவலை தொடர்ச்சியாகவும் செறிவுடனும் செயற்படும் பொழுது பதகளிப்புக்கு இட்டுச் செல்லப்படுகின்றது. நிம்மதியின்மை, கவலையிலிருந்து மீள முடியுமா என்ற ஏக்கம், பிரச்சினைகள் சிக்கலாகிச் செல்லும் நிலை, நெருக்கடிகளுக்குப் பிறர் உதவி செய்யாத இக்கட்டான சந்தர்ப்பம் முதலியவை பதகளிப்பை ஏற்படுத்துகின்றன.

பயத்துடன் பதகளிப்பு இணைந்ததாயினும், பதகளிப்புக்கான காரணத்தை எளிதில் உய்த்தறிய முடியாது. பதகளிப்புக்கு உள்ளாவோர் அதற்குரிய காரணத்தை அறிய முடியாதும் இருப்பர்.

யதார்த்தமான காரணங்களை விடுத்து, சிறாரிடத்துத் தொழிற்படும் கற்பனைகளே பதகளிப்பைத் தூண்டி விடுகின்றது. இல்லாத ஒன்றை எண்ணுவதால் எழும் பதகளிப்பை தவிர உளநெருக்கீடுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

சமூக நிலைப்பட்ட கற்றல் பதகளிப்பினால் ஊக்கப்படுத்தப்படுகின்றது. பெற்றோர்கள். நண்பர்கள் என்ன நினைப்பார்கள், எவ்வாறு அங்கீகரிப்பார்கள் என்ற ஆவலுடன் கூடிய பதகளிப்பு சிறார் நடத்தைகளிலே செல்வாக்குச் செலுத்துகின்றது. பெற்றார் அங்கீகரிக்கும் கருத்துக்களுடன் சிறாரும் இணைந்து செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு இணைந்து செல்வதால் அன்பும் பாசமும் என்ற தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படும் என்ற பாதுகாப்புத் தோன்றுகின்றது.

பயடத்தை ஒத்த நரம்பியல் நெருக்கீடே பதகளிப்பிலும் ஏற்படுகின்றது. நெருக்கிடைகளுக்குரிய நேரான காரணம் தெரியப்படாமையால் அறியாமையால் சீராக்கம் செய்யும் நடத்தைகள்



சிறுவர்களிடத்து அவதானிக்கப்பட்டுள்ளன. பொதுவாகப் பதகளிப்பு ஏற்படுத்துமிடத்து விரல் சுவைக்கும் நடத்தை ஒரு சீராக்க நிகழ்ச்சியாக இடம் பெறுகின்றது. அழுதல், வேண்டுமென்று பலத்துச் சிரித்தல் போன்ற நடத்தைகளும் அத்தகைய சந்தர்ப்பங்களிலே அவதானிக்கப் பெற்று ள்ளன.

பதகளிப்பு உளவியல் சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்துவதற்குக் காரணம் சிறாரினால் அதற்குரிய காரணங்கள் அறியப்படாதிருத்தலாகும். மகிழ்ச்சி நேர்ப் பண்பு வாய்ந்த ஒரு மனவெழுச்சி என்று கொள்ளப்படும். ஓர் அடைவை அல்லது இலக்கை ஓர் ஊக்கலின் விளைவு அடையப் பெறும் பொழுது ஏற்படும் திருப்தியே மகிழ்ச்சியாகக் கொள்ளப்படும். ஊக்கல் என்பது உயிரியல் சார்ந்ததாக இருக்கலாம். செயற்பாடுகள் சார்ந்ததாக விளங்கலாம், சமூக ஊக்கல்களாகத் தொழிற்படலாம்.

உடலியல் அடிப்படையிலே திருப்தியும், வசதியும் கிடைக்கும் பொழுது சிறார் நிலையில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இங்கிதமூட்டும் ஓசை, பழகிய மனிதர், ஒரு புதிய திறனைச் செய்தல், பிறரால் அங்கீகரிக் கப்படுதல், பாராட்டப்படுதல், பரிசு தரப்படல் போன்ற சந்தர்ப்பங்களிற் சிறாருக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. பயம் தராத புதிய அனுபவமும் மகிழ்ச்சியூட்டுகின்றது.

மகிழ்ச்சியின் முக வெளிப்பாடாக சிரிப்பு ஏற்படுகின்றது. சிறார் நிலையிற் பல்வேறு சந்தர்ப்பங்களிற் சிரிப்பு ஏற்படுகின்றது. உடலியல் மற்றும் சமூகம் சார்ந்த இலக்குகள் அடையப்பெறும் சந்தர்ப்பங்கள் மாத்திரமன்றி தாம் மேலாதிக்க நிலையில் இருக்கும் சந்தர்ப்பங்களிலும் சிறாருக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. தாம் பிறரைத் தாக்கி முன்னேறும் பொழுதும், அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் பொழுதும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இவை சமூக நிபந்தனைகளாலே தூண்டப்படுகின்றன என்று கொள்ளுதல் தவறாகாது.

அருவருப்பான கதைகளும், கோமாளிகளின் கதைகளும் சிறாருக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. குறித்த சூழலுக்குப் பொருந்தாத காட்சியும் சிறுவருக்குரிய மகிழ்ச்சித்தூண்டியாய் அமைகின்றது.

அன்பு என்பது சிறாருக்குரிய தேவைகளை அடியொற்றி எழுகின்றது. தேவைகளோடு அடியொற்றியதாகவும், அவற்றுடன்

நிபந்தனைப்பட்டதாகவும், அன்பு வளருகின்றது. பாலும், சுவையூட்டும் உணவும் சிறாருக்கு வேண்டப்படுவதால் அவற்றை வழங்கும் தாய் தந்தையரிடத்து அன்பு ஏற்படுகின்றது. இந்நிலையில் உபகாரம் ஒன்றுடன் இணையாத அன்பு இருக்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது, பொருளை அரவணைப்பை, விருப்பை வழங்குபவரிடத்தே அன்பு எழுகின்றது.

பொருள்கள் விலங்குகள் என்பவற்றின் மீது அன்பு ஏற்படலாம். கற்றல் என்பது அன்பு செலுத்துதலிற் செல்வாக்கு விளைவிப்பதையும் நோக்க முடிகின்றது.

மனவெழுச்சிகளையும், உணர்ச்சிகளையும் விளக்குதல் வேண்டும். மனவெழுச்சிகளைப் போன்று உணர்ச்சிகள் தீவிரமானவை என்று கொள்ள முடியாது. மனவெழுச்சிகள் திடீர்த் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தோன்றுகின்றன. ஆனால் மனவெழுச்சிகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. முழுமையாக அவற்றைப் பிரித்து நோக்குதல் கடினம்.

மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் மனவெழுச்சிகளும் உணர்ச்சிகளும் பங்கு கொள்ளுகின்றன. மனிதனுடைய தொழிற்பாடுகள், உந்தல் ஆகிய அனைத்தோடும் மனவெழுச்சி இணைந்து ஆர்வம் கொண்டு செயற்படும் சூழலிலே மனவெழுச்சி தோன்றுகின்றன. மனவெழுச்சியின் தோற்றம் அவசரநிலைக்கு உட்பட்டது. மனவெழுச்சியைத் தோற்றுவித்த சூழலை வரவேற்று எதிர்கொள்ளவோ அல்லது எதிர்த்துப் போராடவோ அல்லது விரைந்து விடுபட்டுச் செல்லவோ மனவெழுச்சி மனிதனைத் தூண்டுகின்றது.

யதார்த்தமான மனவெழுச்சிக்கும் போதைப் பொருள்களால் தூண்டப்பட்டுத் தோற்றுவிக்கப்படும் மனவெழுச்சிக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. யதார்த்தமான மனவெழுச்சி உலக நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட காரணகாரியத் தொடர்புகளுடன் இணைந்து நிற்கும். மனவெழுச்சி கற்பனையுடன் இணைந்த உணர்ச்சியை மட்டும் கொண்டிருக்கும்.

மனவெழுச்சியானது மனப்பதிவாகி சிறிது காலம் தொடர்ந்து செல்லுமாயின் அதனை "மூட்டம்" என்பர். மனவெழுச்சியை உருவாக்கிய காரணம் மறைந்த பின்னரும் மூட்டம் நீடிக்கும்.



சிலர் குறித்த மனவெழுச்சிகளை ஒப்பீட்டளவிலே விரைவாகவும், தீவிரமாகவும் பெறுவோராயிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக கோபம் என்ற மனவெழுச்சி வெகு விரைவிலே சிலருக்குத் தோன்றும். தீவிரமான தாக்கங்களை அது ஏற்படுத்தும், இவ்வாறாக மனவெழுச்சிகளை விரைவாகப்பெற்று தீவிரமாகத் துலங்கும் பண்பு "மனவியல்பு" என்று கூறப்படும். இப்பண்புக்கும் வேறோர் மோன்களின் அளவிலுள்ள வேற்றுடைமைக்குமிடையே இணைப்பு என்று கூறினாலும் வேறோர் மோன்களின் ஆக்கம் பல்வேறு காரணிகளுடன் தொடர்பு கொண்டுள்ளமை நினைவு கூரத்தக்கதாகும்.

ஆழ்ந்து சிந்திக்கும் திறனை மனவெழுச்சிகள் தாக்கும். மனிதனது தொழிற்பாடுகளின் வினைத்திறனை மனவெழுச்சிகள் நேரடியாகவோ எதிர்ப்பண்புடனோ தாக்கும். மனவெழுச்சிகளால் உந்தப் பெற்றுத் தீவிரமாகத் தொழிற்படுவோரும் உளர், இந்நிலையில் மனவெழுச்சிகளாக விருத்தியடைகின்றன.

பிறரது மனவெழுச்சிகளைக் கண்டு தமது மனவெழுச்சிகளை ஒழுங்கமைப்பவர்களும் உளர். மனவெழுச்சி நிலை பற்றி "செயல் ஈவு" என்பதைக் கணிக்கும் உபாயங்களும் உளவியலிலே விருத்தி செய்யப் பெற்றுள்ளன. ஒருவனது பேச்சை ஒலிப்பதிவு செய்து அப்பேச்சிற் செயல்களைக் குறிக்கும் சொற்கள் எத்தனை பண்புகளைக் குறிக்கும் சொற்கள் எத்தனை என்று கணக்கிடலாம் அவற்றுக்கிடையே காணப்படும் விகித அளவு "செயல் ஈவு" என்று கொள்ளப்படும்.

மனவெழுச்சி தொடர்பான அதிர்ச்சிகளும், மனவெழுச்சிப் போராட்டங்களும் சீராக்கப் பிரச்சினைகளையும் நெறிபிறழ்வையும் ஏற்படுத்துகின்றன. மனவெழுச்சிகளைக் கையாளவும், அடக்கியாளவும், சமநிலைப்படுத்தவும் கல்வி பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. மனவெழுச்சி முதிர்ச்சி ஏற்படுத்தப்படும் பொழுது பிறருக்கு உதவும் திறன் ஒருவனுக்கு கைவரப் பெறுகின்றது. மனவெழுச்சிகளை அடக்காது சமூக நன்மை தரும் செயல்களிலே அவற்றைக் கிளர்ந்தெழச் செய்யும் பொழுது மனவெழுச்சி வெளிப்பாடும் ஆளுமையும் சிறப்புப் பெறுகின்றன. இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம், இலக்கியம், பேச்சுக்கலை, விமர்சனக்கலை, ஆக்க விளையாட்டு போன்றவற்றை வளர்த்தல் மனவெழுச்சிகளைப் புடமிடும் கல்விச் செயலாக அமைகின்றது.

ஆளுமை விருத்தியில் மனவெழுச்சிகள் நேர்த்தாக்கங்களையும், நேரில் தாக்கங்களையும் விளைவிக்கின்றன. நேர்த்தாக்கங்களில் உடல், உளத் தொழிற்பாடுகள், மனோபாவங்கள், விருப்புகள் முதலி யவை குறிப்படுகின்றன. வயது உயர்ந்து செல்ல மனவெழுச்சிகள் உடலியல் சார்ந்த பண்புகளை அதிகரிக்கச் செய்கின்றன. இளம் வயதினர் மனவெழுச்சித் துலங்கலால் தரப்படும் வலுவை வேலை, விளையாட்டு, கடும்பயிற்சிகள் முதலியவற்றிலே செலவிட முடியும். ஆனால் வயது முதிர்ந்தவர்களுக்கு இவ்வாறான வெளியீட்டு வாயில்கள் இன்மையால் தீவிர மனவெழுச்சி களினால் உருவாக்கப் பட்ட குழப்பங்கள் தொடர்ந்து நீடிக்க இடமுண்டு.

உளத் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரை மனவெழுச்சியின் நேர்த் தாக்கங்களை அறிய முடியும். பதகளிப்பும், மனமுறிவும், சிக்கல் வாய்ந்த திறன்களைக் கற்பிப்பதிலே தாக்கங்களை ஏற்படுத்தி யுள்ளமை ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. பதகளிப்பு வெவ் வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. குறைந்த செறிவு கொண்ட பதகளிப்பை உடையவர்கள் பதகளிப்பைத் தூண்டும் சூழலாற் தூண்டப்பட்டு மேலும் வினைத்திறனுடன் தொழிற்பட முனைவார்கள்.

விருப்புகளுடன் இணைந்த மனவெழுச்சிகள் நேர் மனோபா வங்களை வளர்க்க துணை செய்யும். அவற்றால் நல்ல சீராக்க முறைகள் வளரும். மனவெழுச்சிகள் பிறருடனான தொடர்புகளை நேரடியாகத் தாக்குகின்றன.

பெற்றார், நண்பர்கள், ஆசிரியர்கள், உறவினர் ஆகியோருட னான தொடர்புகள் ஆகியவை மனவெழுச்சிப் பிணைப்புடன் இணைந்தி ருக்கும்.

மனிதரிடத்துச் சில மனவெழுச்சிகள் வலிதானதாகச் செயற் படும். அவர்களின் பொருளாதார பண்பாட்டுச் சூழல், உடலியற் காரணிகள், உளவியற் கவிநிலை முதலியவை சில வகையான மன வெழுச்சிகளை அவர்களின் வாழ்க்கையில் வலிதான மனவெழுச்சி களாக்கி விடுகின்றன. வலிதாகியமைந்த மனவெழுச்சிகள் நித்திய மான தோற்றப்பாடுகள் அல்ல. அவை மாற்றியமைக்கப்படலாம். மேற்கூறிய நிச்சயிப்பு வலுக்களை மாற்றியமைப்பதன் வாயிலாக மனவெழுச்சிப் பாங்குகளை மாற்றியமைக்க முடியும். அவற்றின்



வாயிலாக ஒருவரது ஆளுமையிற் சிறப்பிடம் பெறும் சகிப்புத் தன்மையைக் கட்டியெழுப்ப முடியும். சகிப்புத் தன்மை "உளநலக் காப்புறுதி" என்று கூறப்படும். வாழ்க்கையின் தீங்குகளுக்கு எதிரான உளவியற் பாதுகாப்பாகவும் அது அமையும்.

பயம், கோபம், பொறாமை, மனமுறிவு என்பவற்றின் வாயிலாக எழும் மனவெழுச்சிகள் சகிப்புத் தன்மைக்கு உள்ளடக்கப்பட வேண்டி யுள்ளன. சிறப்பாக பொறாமை தொடர்பான சகிப்புத் தன்மை வாழ்வின் முன்னேற்றத்திற்குரிய திறனாகவும் அமைகின்றது.

இவற்றின் தொடர்ச்சியில் "மனவெழுச்சிச் சமநிலை" என்ற எண்ணக் கரு விளக்கப்படுகின்றது. மனவெழுச்சிச் சமநிலை நான்கு வழிகளில் முன்னேற்றம் செய்யப்பெறலாம்.

அ) பெருமளவு மகிழ்ச்சியான மனவெழுச்சிகளை அனுப விக்கும் வேளை மகிழ்ச்சி தராத மனவெழுச்சிகளையும் குறிப்பிட்ட அளவில் வழங்க வேண்டும்.

ஆ) மகிழ்ச்சி தராத மனவெழுச்சிகளுக்குரிய மொழிவெளிப் பாடுகள் நினைத்தவாறு மேற்கொள்ள முடியாதென்ற விளக்கத்தை ஏற்படுத்தும்.

இ) இயலுமான வரை முன்கூட்டியே மகிழ்ச்சி தராத ஒரு மனவெழுச்சியை அனுபவிக்குமாறு சிறுவருக்கு வழங்கு தல் வேண்டும்.

ஈ) மகிழ்ச்சி தராத மனவெழுச்சிகள் தந்த மனப் பதிவுளை அழித்து விடல் வேண்டும்.

மேற்கூறிய உபாயங்களைக் கையாளுவதன் வாயிலாக இன் றைய போட்டிப் பண்பாட்டுக் கோலங்களின் மத்தியில் ஒருவரது மனவெழுச்சிச் சமநிலையை துணை செய்ய முடியும்.

மனவெழுச்சி தொடர்பான அனுபவப் பற்றாக்குறையும் ஒரு வரது ஆளுமை வளர்ச்சியையும் சீராக்க முறைகளையும் பாதிக்கும். அதீத கவனத்தின் மத்தியில் வளர்த்தெடுக்கப்படுவோர், மகிழ்ச்சி தராத மன வெழுச்சிகளை அனுபவிக்கும் வாய்ப்புக்களைப் பெறாத நிலை அவர்களின் முழுமையான வளர்ச்சியைப் பாதிக்கும். மன வெழுச்சி தொடர்பான அனுபவப் பற்றாக்குறை வேறொரு முகமாக

வும் நிகழுகின்றது. மகிழ்ச்சி தராத மனவெழுச்சிகளின் மத்தியிலே வாழ்வோர், மகிழ்ச்சி தரும் மனவெழுச்சிகளை அனுபவிக்க முடியாத - ஒரு தலைப்பட்சமான ஆளுமையுள்ளவர்களாக உருவாக்கப் படுகின்றார்கள்.

அன்பை வழங்காது நிராகரிக்கும் நிலை சிறார்களை மட்டும் பாதிக் கும் என்று கூற முடியாது. வளர்ந்தோரும், வயோதிபரும் இதனாற் பாதிப்படைய முடியும். தாம் விரும்புவோரிடமிருந்து மனவெழுச்சி அடிப்படையிலே பிரிந்து வாழும் நிலையை முதியோர் அனுபவிக்கின்றனர்.

மனவெழுச்சிகள் ஒருவரது ஆளுமையில் நீண்ட காலத்துக்குரிய தாக்கங்களை ஏற்படுத்துதல் உண்டு. சிறுவயதிற் கிடைக்கப்பெற்ற மனவெழுச்சி தொடர்பான பாதுகாப்பின்மை நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பொறுண்மை கொண்ட ஒருவர் அன்பை வழங்காத நிலையும், அவர் மீது அன்பைச் செலுத்த முடியாத நிலையும் மனவெழுச்சிப் பாதுகாப்பின்மையை உருவாக்கும். சிறார் நிலையில் ஏற்படும் இந்த அனுபவம் கட்டிளமை நிலையில் மேலோர்களுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தலைத் தூண்டும்.

மறுபுறம் அதீத அன்பு காட்டும் நிலையும் உளவியற் பாதிப்புக்களை ஏற்படுத்தும். தாயார் அதீத அன்பு காட்டு நிலை ஆளுமை வளர்ச்சியைத் தொடர்ந்து பாதிப்பதாக அமையும். அதீத அன்பு காட்டப் பெறுவோர் என்றும் பிறர் மீது தங்கியிருக்கும் நிலையில் முதிர்ச்சி குன்றியோரா யிருப்பர். தன்னம்பிக்கை குன்றும். தலைமைத்துவத் திறன் தாக்கப்படும். ஒருவித பழைமை மனோபாவம் வளரும். தான் தொடங்கும் ஆற்றல் பின்னடையும்.

மேலும் மனவெழுச்சியை வெளியிடும் பாங்கும் ஒருவரது ஆளுமையை நேரடியாகவும் நேரில் முறையிலும் பாதிக்கும். மனவெழுச்சியை உருவாக்கும் சூழலை எதிர் கொள்ளக் கூடியவாறு உடற் செயலமைப்பிலிருந்து சக்தி வெளியேற்றப்படுதலால் அதனைக் கையாளும் முறைமை சீராக்கத்தைப் பாதிக்கும்.

மனவெழுச்சியை வெளியிடும் பாங்கை அடிப்படையாகக் கொண்டு குறித்த நபரைப் பற்றிய உளப்படிமம் பிறரிடத்து உருவாக்



கப்படுதலால் அந்நிகழ்ச்சி நேரிலி தாக்கங்களை ஏற்படுத்தும். மனித தனது சமூக வரலாறும் நிறுவன வடிவமைப்புக்களின் விருத்தியும் மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுத் திறன்களை மனிதரிடத்து வளர்த்து வந்துள்ளன. ‘உள்ளும் புறமும்’ என்ற கோட்பாடும் இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. தமது வீட்டினுள் அல்லது நெருங்கிய சகாக்களின் மத்தியில் ஒருவர் மன வெழுச்சிகளை வெளியிடுதற் கும், அவற்றுக்குப் புறம்பான இடங்களில் மனவெழுச்சிகளை வெளியிடுதலுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படும்.

ஒவ்வொரு மனவெழுச்சிக்கும் அனைவரும் அங்கீகரிக்கப் பட்ட ஒரு வெளியீட்டு முறைமை இருக்குமாயின் அவற்றைக் கட்டுப்படுத்துவதிலுள்ள சிக்கல்கள் குறைக்கப்படலாம். ஆனால் மனவெழுச்சிகளை வெளியில் பண்பாட்டுக் கோலங்களுக்கேற்றபடி வேறுபடும். பொருளாதாரக் கோலங்களுக்கேற்றவாறும் வேறுபடும். ஆண், பெண் இயல்புகள் வயதுத் தொகுதிகள் என்பவற்றுக்கேற்ற வாறும் வெளியீடு வேறுபடும். ஒருவர் மனவெழுச்சியை வெளியிடுதலும் உளவியற் புலங்களுக்கேற்ப வேறுபடும். ஒருவர் பசியாயிருத்தல், தனித்திருத்தல், மனமுறிவடைந் திருத்தல் ஆகிய நிலையில் மன வெழுச்சிகளை வெளியிடல் வேறுபடும்.

# அறிகை மேம்பாடு

சிறார்களது அறிகை மேம்பாடு (Cognitive development) தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் ஜீன் பியாசே மற்றும் ஜெரோம் புறூனர் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக வர்கள்.

சூழலோடு இடைவினை கொள்வதால் அறிவுத்தேட்டம் மேம்பாடு கொள்கின்றது. புதிய நிகழ்ச்சிகளைச் சிறார் எதிர்கொள்ளும் பொழுது உளச்சமநிலை குலைந்து புதிய உளச்சமநிலையாக்கம் உந்தப்பெறுகின்றது.

உளச்சமநிலையை உருவாக்குவதற்குரிய தழுவல் (Adapation) இரண்டு வழிகளிலே நிகழ்வதாக பியாசே குறிப்பிடுகின்றார். அவையா வன;

1) தன்மயமாக்கல் (Assimilation)

2) தன் அமைவாக்கல் (Accommodation)

உள அமைப்பை மாற்றாது அனுபவங்களை உறுஞ்சி உள்வாங்கும் செயல் முறையானது தன்மயமாக்கல் எனப்படும். புதிய அனுபவங்களை உட்கொள்ள முடியாத நிலையில் ஏற்கனவே உருவாகிய உள அமைப்பை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. உள அமைப்பை மாற்றியமைத்துப் புதிய அனுபவங்களை உள்வாங்குதல் தன் அமைவாக்கல் எனப்படும். இவற்றின் வழியாக, விளக்கமுற்று, வியாக்கியானம் செய்யப் பெற்று அறிகை அமைப்பாக்கம் நிகழ்த்தப்படுகின்றது. ஓர் உயிரி சூழலுடன் தழுவி இசைவாக்கம் செய்தல் போன்று, அறிவு மற்றும் அனுவபச் சூழலுடன் சிறார் இடைவினைகொண்டு உளவமைப்பை அல்லது உளத்திரள் வடிவத்தை (Schema) ஏற்படுத்திக் கொள்கின்றனர்.



உளவளர்ச்சியின் நான்கு பிரதான படிநிலைகளை பியாசே சுட்டிக் காட்டுகின்றார். அவையாவன;

1) புலன் இயக்கப் பருவம்.

2) முன் தொழிற்பாட்டுப் பருவம் அல்லது தூய சிந்தனைக்கு முற்பட்ட பருவம்.

3) உருநிலைத் தொழிற்பாட்டுப் பருவம் அல்லது தூல சிந்தனைப் பருவம்.

4) முறைசார் தொழிற்பாட்டுப் பருவம் அல்லது நியம சிந்தனைப் பருவம்.

பிறப்பிலிருந்து பதினைந்து வயது வரை இப்பருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வடிவமைப்புக் கொள்ளும் என்று பியாசே குறிப்பிட்டுள்ளார்.

புலன் இயக்கப் பருவம் பிறப்பிலிருந்து பொதுவாக இரண்டு வயது வரை நிகழும் எளிமையான புலன்சார் செயற்பாடுகளோடும், உடலியக்கச் செயற்பாடுகளோடும் இணைந்த வகையில் சிறாரின் உளச் செயற்பாடுகள் வளர்ச்சியுறுகின்றன. பின்வரும் உளச் செயற்பாடுகள் இப்பருவத்தில் முனைப்படைந்து காணப் படும்.

1) சூழலில் உள்ள பொருள்களிலும் தாம் வேறுபட்டவர்கள் என்று குழந்தைகள் உணரத் தொடங்குவார்கள்.

2) ஒலி, வெளிச்சம் முதலிய தூண்டிகளை அவர்கள் தேடிக் கண்டு கொள்வர்.

3) மகிழ்ச்சியான அனுபவங்களைத் தொடர்ந்து பராமரித் துக் கொள்ள விரும்புவர்.

4) பொருள்கள் இடம் மாற்றி வைக்கத்தக்க நிலைத்துவம் கொண்டவை என்று எண்ணுவர்.

உயிரிகள் சூழலுக்கேற்ப தழுவி இசைவாக்கம் கொள்வதை ஒத்த செயல் முறைகளை சிறார்களின் இயக்கப்பாடுகளிலே பியாசே கண்டறிந்தார்.

தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவம் அல்லது முன்தொழிற் பாட்டுப் பருவம் இரண்டு வயது தொடக்கம் ஏழு வயது வரை

நிகழும். தமக்குரிய எண்ணக்கருக்களை உருவாக்குதற்கு சிறார்கள் மொழியை கருவியாகப் பயன்படுத்துவார்கள். அவர்கள் உருவாக்கும் எண்ணக் கருக்கள் அவர் களுக்கே பிரத்தியேகமானதாயிருக்கும். எண்ணக் கருக்கள் பின்னர் திருத்தப்படவேண்டிய தவறுகளைக் கொண்டிருக்கும்.

தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தை இரண்டு வயது தொடக்கம் நான்கு வயது வரையிலான முன்தொழிற்பாட்டுப் பருவம் என்றும் நான்கு வயது தொடக்கம் ஏழு வயது வரையிலான உள்ளுணர்வுப் பருவம் என்றும் பியாசே பிரித்து விளக்கினார்.

இரண்டு வயது தொடக்கம் நான்கு வயது வரையிலான பருவத்திலே பின்வரும் சிறப்புப் பண்புகள் காணப்படும்.

1) அகத்தை மத்தியாகக் கொண்ட சிந்தனை மேலோங்கியிருக்கும். பிறரது சட்டைகளை அணிதல், பிறரது பேனாவை எடுத்து எழுதுதல் முதலியவை காணப்படும். பிறரது பொருட் களூடாக பௌதிக உலகை தாம் உள்வாங்கிக் கொள்ள முயல்வர்.

2) யாதாயினும் ஒரு பண்பினை வைத்தே பொருள்களை வகைப் படுத்த எண்ணுவர்.

3) பல பண்புகளைக் கொண்ட பல பொருள்களிடையே ஓர் ஒற்றுமைப் பண்பிருந்தாலும் அதனைக் கண்டறிய முடியாத வர்களாக இருப்பர்.

4) பலவடிவங்களைக் கொண்ட பொருட்களிடையே ஒரே வடிவமான பொருள்களைக் கண்டறியும் ஆற்றலைக் கொண்டிருப்பர்.

உள்ளுணர்வுப் பருவம் (4-7 வயது வரை) பற்றிய அறிவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். இப்பருவத்தில் தெளிவற்ற உளப்பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு சிறார்கள் தமக் குரிய முடிவுகளை எடுப்பர். சொற்களால் எடுத்துக்கூற முடியாத புலன் காட்சி அனுபவங்களை வைத்தும் முடிவுகளை எடுப்பார்கள். பிற்காலத்து தருக்க நிலை வளர்ச்சிக்கு இவை அடிநிலை ஆதாரங்களாக அமையும்.



மொழியாற்றல் படிப்படியாக வளர்ச்சியடைய புலக் காட்சிக்கும் மொழி சார்ந்த குறியீடுகளுக்குமிடையே பொருந்துகை (Mediation) வளர்ச்சியடையும்.

உள்ளுணர்வுப் பருவத்திலே பின்வரும் சிறப்பியல்புகள் காணப்படும்

1) பொருள்களை அவற்றின் வகுப்புக்களின் அடிப்படையில் பாகுபடுத்தும் ஆற்றல்

2) எண்களுடன் தொழிற்படும் ஆற்றல்.

3) காப்புக்கோடல் (Conservation) பண்பினை அறிந்து கொள்ளும் திறன் வளர்ச்சியடைதல். திணிவின் காப்புக் கோடலை 7 வயதிலும் நிறையின் காப்புக்கோடலை ஒன்பது வயதிலும் பொதுவாக அறிந்து கொள்கின்றார்கள். காப்புக்கோடல் என்பது மாறாத்தன்மை என்றும் கூறப்படும்.

தூலக சிந்தனைப் பருவம் ஏழு தொடக்கம் பதினொரு வயது வரையும் நியம சிந்தனைப் பருவம் பதினொரு வயது முதல் பதின்நான்கு வயது வரையும் காணப்படும்.

சிறாரின் விருத்திச் செயல்முறையில் ஆறு முக்கியமான அவதானிப்புக் குறிப்புக்களை புறுனர் குறிப்பிட்டார்.

அவையாவன :

1) ஒரு தூண்டியிலிருந்து கிடைக்கப்பெறும் துலங்கலில் இருந்து வேறுபட்டு நிற்றல், அதாவது சூழலுக்கேற்றவாறு துலங்கலை மாறுபடுத்திச் செம்மைப்படுத்தும் ஆற்றல் வளர்ச்சியடைதல்.

2) தகவல்களை மனத்திலே நிரற்படுத்தித் துலங்கலில் களஞ்சியப்படுத்தும் ஆற்றல் மேம்பாடு கொள்ளல்.

3) தன்னுணர்வு மேம்பாடு கொள்ளல். அதாவது தன்னையும் பிறரையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஆற்றல் மேலோங்குதல்.

4) கற்பவருக்கும் கற்பிப்பவருக்குமிடையே உள்ள இடைவினைகள் அறிகை மேம்பாட்டுக்கு அமைதல்.

5) அறிகை மேம்பாட்டிற்கு மொழி அடிப்படையாக அமைதல்.

6) மாற்றுவகையான துலங்கல் பலவற்றைப் பிறப்பிக்கும் ஆற்றல் வளர்ச்சியடைதல்.

சிறுவர்கள் உலக நிலவரங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆற்ற லின் மூன்று படிநிலைகளை புறுனர் கண்டறிந்தார்.

அவையாவன:

1) உடலியக்க முறையால் சூழலை அறிதலுள்ள பிரதிநித்துவப் படுத்தலும், அதாவது சொற்கள் இன்றியும் உளப்படிமங்கள் இன்றியும் ஒரு பொருளை தனது உடலால் இயக்கி அறிந்து கொள்ளும் படிநிலை உதாரணமாக ஒரு பந்தை உருட்டி இயக்குதல். இது செய்தறி நிலை (Enactive stage) என்று குறிப்பிடப்படும்.

2) இரண்டவாது படிநிலையாக அமைவது செய்தறிப்படும், இயக்கி அறியப்பட்ட பொருளுக்கும் வரைபு வடிவம் கொடுத்தல். உதாரணமாக பந்தை உருட்டி விளையாடிய சிறுவர் பந்தைப் படமாக வரைதல். இது உருநிலை (Iconic Stage) எனப்படும். காட்சி சார்ந்த நினைவு இங்கு முக்கியம் பெறும்.

3) மூன்றாவது படிநிலையாக குறியீட்டு நிலை (Symbolic Stage) அமையும்.

புலன்சார் விளக்கங்களுக்கு குறியீட்டு வடிவம் கொடுக்கும் நிலையாக இது அமையும் குறியீடுகள், மொழி, தருக்கம், கணிதம் முதலியவை இந்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன. சிறார் படிப்படியாக வளர்ந்து பல நிலைகளிலும் முதிர்ச்சி பெறத் தொடங்க குறியீட்டு நிலையே அதிக ஆட்சி கொள்ளலாகும்.

ஆயினும் விளையாட்டு வீரர்கள், இசைக்கருவிகள் இயக்குபவர் கள், யந்திரங்கள் இயக்குபவர்கள், ஆகியோரிடத்து முதலாவது படி நிலையாகிய செய்தறி நிலைப்பண்புகளே மேலோங்கியிருக்கும்.

ஓவியர்கள், சிற்பிகள் முதலானவர்களிடத்து இரண்டாவது படி நிலையாகிய உருநிலை அல்லது உருவடிவாக்கல் நிலைப்பண்புகள் மேலோங்கிக் காணப்படும்.



ஆனால் குழந்தைகளின் உள வளர்ச்சியில் மேற்கூறிய மூன்று படி நிலைகளும் ஒன்றன்பின் மற்றையதாக தொடர்ந்த வண்ண மிருக்கும்.

## தொடர்பாடல் அசைவுகள்

தமது தேவைகளையும், தமது மனவெழுச்சிகளையும் வெளிப் படுத்து வதுற்குச் சிறுவர்கள் உடல் மொழியைப் (Body Language) பயன்படுத்துகின்றனர். பேச்சு மொழியையும் எழுத்து மொழியை யும் கண்டுபிடிப்பதற்கு முந்திய மனித மொழி உடல் மொழியாக அமைந்தது. உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் வெளிப்படுத் தும் உடல் மொழியில் பல பொதுத்தன்மைகளும் காணப்படு கின்றன.

கால்களும், கைகளும் குழந்தைகள் பயன்படுத்தும் உடல் மொழியில் முதற்கண் சிறப்புப்பெறுகின்றன. கைகளையும், கால் களையும் வீசுவதன் வாயிலாகக் குழந்தைகள் தமக்குரிய உடல் சார்ந்த தேவைகளைப் புலப்படுத்துகின்றனர். பசி, தாகம், குளிர் தாக்குதல், வெப்பம் தாக்குதல், ஒலி தாக்குதல், ஒளி தாக்குதல், உடல்நோ, முதலியவை அழுகையுடன் கலந்த கால், கை வேக அசைவுகளால் புலப்படுத்தப்படும். அழுகை கலக்காத கை, கால் கை வேக அசைவுகளால் புலப்படுத்தப்படும். அழுகை கலக்காத கை, கால் வேக அசைவுகளை ஏற்படுத்துதல் குழந்தைகளின் மகிழ்ச்சி யைப் புலப்படுத்தும்.

குழந்தைகளின் தொடர்பாடலில் அவர்களது முகமொழி சிறப் பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. இதமான வெளிச்சத்துக்குத் துலங்குதல், தமக்கு இனிமை தரும் தூண்டிகளை உற்று நோக்குதல், சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்புதல், முதலியவை படிப்படி யாக வளர்ச்சியடையும்.

கண் தொடர்பாடல் மேலும் படிமலர்ச்சி கொள்ளக் கவனத்து டன் பார்த்தல், தேவை வேண்டிப் பார்த்தல், மகிழ்ச்சி கொண்ட பார்வை, நோ உறுத்தற் பார்வை, இனங்காணும் பார்வை, பய வெளிப்பாட்டுப் பார்வை, முதலியவை விரிவடையும். குழந்தை களின் முகமொழியில் வாயசைவுகள் தனித்துவமானவை குழந்தை யின் கோபம், மகிழ்ச்சி, ஆகிய இரண்டு வெளிப்பாடுகளும் வாயசை

வுகளால் நன்கு புலப்படுத்தப்படும். குழந்தைகள் உணவுத்தேவையை யும் வாயசைவுகளால் நன்கு வெளிப்படுத்துவர். குழந்தையின் சிரிப் பானது மகிழ்ச்சி, உளநிறைவு, திருப்தி ஆளை அல்லது பொருளை இனங்கண்டமை, இதமான தூண்டிக்குத் துலங்குதல், பழக்கப்பட்ட நேர்த்தூண்டிக்குத் துலங்குதல், முதலாம் பல்வேறு வெளிப் பாடுளைக் கொண்டிருக்கும். குழந்தைகளின் உடல் விருத்தியும் தொடர்பாற் கோலங்களும் தொடர்பான அட்டவணையை உளவியலாளர் தயாரித்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1) | இரண்டுமாத வயது | - | கவிழ்ந்து படுத்துக் கைகளை அழுத்தி உயர்த்துதல். |
| 2) | மூன்று மாத வயது | - | பொருள்களைப் பற்றிப் பிடித்து நழுவ விடுதல். |
| 3) | நான்கு மாத வயது | - | பிறர் உதவியுடன் இருத்தல். |
| 4) | ஆறு மாத வயது | - | அசையும்பொருள்களைப் பற்றிப் பிடித்தல். |
| 5) | ஏழு மாத வயது | - | பிறர் உதவியின்றி நிமிர்ந் திருத் தல். |
| 6) | எட்டு மாத வயது | - | பிறர் உதவியோடு எழுந்து நிற்றல். |
| 7) | ஒன்பது மாத வயது | - | தளபாடங்களைப் பிடித்து எழுந்து நிற்றல். |
| 8) | பத்து மாத வயது | - | சுயமாகத் தவழுதல். |
| 9) | பதின்மூன்று மாத வயது | - | பிறர் உதவியோடு தொடர்ந்து நடத்தல். |
| 10) | பதின்மூன்று மாத வயது | - | படி ஏறுதல். |
| 11) | பதினைந்து மாத வயது | - | தனித்து நடத்தல். |
| 12) | பதினாறு மாத வயது | - | தடியைப் பயன்படுத்திப் பொருள்களை எடுத்தல், |



# மொழி வளர்ச்சி

சிந்தித்தல், கற்றல், தொடர்பு கொள்ளல் என்ற செயற்பாடு களில் மொழியானது அடிப்படைக் கருவியாகின்றது. மொழியே மனிதராற் கண்டறியப்பட்ட உன்னதமான கருவி. மொழி எவ்வாறு சிறார்களினாலே திரட்டிக் கொள்ளப்படுகின்றது என்பது பற்றி உளமொழியியலாளர் பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருகின்றனர்.

மொழியை ஒருவர் திரட்டிக் கொள்ளல் தொடர்பான சோம்ஸ் கியின் (Chomsky - 1968) கருத்துக்கள் முதற்கண் குறிப்பிடத் தக்கவை. எல்லா மனிதரிடத்தும் மொழியைத் திரட்டிக் கொள்ளும் திறன் இயல் பாகவே உள்ளார்ந்த வகையில் நிலைபேறு கொண் டுள்ளது. பேச்சு மொழியை நோக்கி அந்தத்திறன்கள் குவியப் படுத்தப்படும் பொழுது மொழித்திரட்டல் நடைபெறுகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித மூளையானது முறைசார்ந்த மொழியாற்றலுக்குரிய பொதுவான செயலமைப்பைக் கொண்டுள்ளது என்றும் முறைசாரா வகையில் தரப்படும் மொழித்தரவுகளை அது வடிகட்டிப் புடமிட்டு உள்வாங்கிக் கொள்கின்றது என்ற கருத்தும் முன்மொழியப்பட் டுள்ளது.

நீண்ட நெடுங்காலமாக நிகழ்ந்த மனித உடல் உழைப்பாலும், உள உழைப்பாலும் மனித மொழியாற்றலும் திரண்டெழுந்த வந்ததென்பது மார்க்சிய உளவியலாளரின் கருத்து.

மனித உடலியக்கம், உள இயக்கம், மொழி இயக்கம் ஆகியவற்றுக் கிடையே பன்முகத் தொடர்புகள் காணப்படுகின்றன. சிறார்கள் மொழி அடிப்படைகளை அறிந்து கொள்ளல், இலக்கண அமைப்புக்களை உள்வாங்கிக் கொள்ளல் முதலியவற்றுக்கிடையே

அமைந்துள்ளள' தொடர்புகளை உலகளாவிய முறையிலே ஆய்வு கள் தெளிவுபடுத்துகின்றன (Brown, 1973)

சிறார்கள் வளரும் சூழல் சிறார்களிடத்து மேற்கொள்ளப்படும், இடை யுறவுகள் முதலியவை சிறாரின் மொழி வளர்ச்சியிலே நேரடி யான செல்வாக்குச் செலுத்துகின்றன. மொழியைக் கேட்பதாலும் பேசுவதாலும், தொடர்பு கொள்வதாலும் மிகவும் சிக்கலான மொழிவிதிகளை அவர்கள் அறிந்து கொள்கின்றார்கள். அதாவது எழுத்து வாயிலாக மொழிவிதிகளையும், இலக்கணங்களையும் கற்பதற்கு முன்னரே சிக்கலான விதிகளைத் திரட்டிக் கொள்கின்றார் கள். அவ்வாறே மொழி விதிகளுக்குரிய புறநடைகள் பலவற்றையும் நன்கு தெரிந்து கொள்கின்றார்கள்.

ஒரு வயதாக இருக்கும் பொழுதே குழந்தைகள் ஒரு சொல் மொழி யினைப் பேசத் தொடங்கிவிடுகின்றார்கள். இது மழலை உச்சரிப்பதற்கு முன்னதாக மழலைச் சொல்லாக்கத்துக்குரிய முன் மழலை ஒலிகளைச் சிறார்கள் எழுப்புவர். முன்மழலை ஒலிகளைப் பொறுத்தவரை உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளிடத்தும் சில பொதுத் தன்மைகள் காணப்படுதலை ஆய்வுகள் புலப்படுத்து கின்றன.

குழந்தை பிறந்து பதினைந்து மாதமாக இருக்கும் பொழுது அவர்கள் ஐம்பது சொற்கள் வரை அறிந்திருப்பார்கள் என்று கூறப் படுகின்றது. அவை பெரும்பாலும் அவர்கள் இடைவினை கொண்ட பொருள்களாக இருக்கும். அத்துடன் அவர்கள் செயல்வினைச் சொற்களையும் அறிந்திருப்பர். குழந்தைகளின் பேச்சு மனவெழுச்சி கலந்ததாக இருக்கும். உதாரணமாக "அம்மா" என்று மெதுவாக அழைக்கும் பொழுது அங்கே மகிழ்ச்சி கலந்திருக்கும். "அம்மா" என்று அழுத்தி உரத்து அழைக்கும் போது அங்கு கோபமோ, ஆத்திர மோ, தீவிர எதிர்பார்ப்போ கலந்திருக்கும்.

குழந்தைகளின் பேச்சின் பிறிதொரு பரிமாணம் தொலை பன்னிப் பண்பு ஆகும். அதாவது ஒரு வசனத்தின் விரிவை ஒரு சொல் லால் எடுத்துக் கூறுதலாகும். அவர்களின் பேச்சிலே காணப்படும் வேறொரு பரிமாணம் அவற்றில் வேகம் அல்லது உடனடிப் பண்பு கலந்திருத்தலாகும். அதாவது "வா" என்ற அவர்கள் அழைத்தால் உடனடியாக வரவேண்டும் என்ற வேகம் அதிலே கலந்திருக்கும்.



குழந்தையின் பேச்சிற் காணப்படும் வேறொரு பண்பு மிகை யான பொதுமைப்படுத்தலாகும் (Over Generalization) உதாரண மாக பந்து போலக் காணப்படும் எல்லாப் பொருட்களையும் பந்து என்றே அழைப்பார்கள்.

சூழலைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் தொடர்ச்சியாகப் பல் வேறு வினாக்களை எழுப்புவார்கள். சிக்கலான தொடர்புகளை ஒரு சொல்லால் எடுத்துக் கூறும் பேச்சும் காணப்படும். இது ஒருவியப் பேச்சு (Holophrastic Speech) எனப்படும்.

குழந்தை பிறந்து பதினெட்டு மாதத்திலிருந்து இருபத்து நான்கு மாதங்களுக் கிடையில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களை இணைத் துப் பேசும் ஆற்றல் வளர்ச்சியடையும். இதிலும் "தொலைபன்னிப் பண்பு" மிகுதியாகக் காணப்படும். பல சொற்களை ஒன்றிணைக்கக் கூடிய ஒரு தொகுப்புச் சொல்லைப் பயன்படுத்தும் ஆற்றலும் இப் பருவத்திற் காணப்படும். உதாரணமாக நல்ல சட்டை, நல்ல புத்த கம், நல்ல மாமா, நல்ல நாய் முதலின.

படிப்படியாக இரண்டுக்கு மேற்பட்ட சொற்களைப் பயன் படுத்தும் திறன் குழந்தைகளிடத்தே வளர்ச்சியடையத் தொடங்கும். இந்நிலையில் பன்மை ஒட்டு, காலங் காட்டும் ஒட்டு முதலிய வற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர். மொழி ஒழுங்கமைப்பை மிகையாகப் பயன்படுத்துதலும் (Over Regulation) இப் பருவத் திலே காணப்படும்.

இரண்டு வயதுக்கும் ஆறு வயதுக்குமிடையே சிறார்களின் மொழி வெளிப்பாட்டில் அதிக படைப்பாற்றல் பண்புகள் காணப் படும். இவ் வயது வீச்சில் சிறார்கள் பயன்படுத்தும் மொழியில் அதிக கற்பனைப் பாங்கு, எதிர்பாராதவகையிற் சொற்களை இணைக்கும் வளம், முதலியவை காணப்படும். ஆறு வயதுக்குப் பின்னர் இந்த ஆக்க மலர்ச்சி படிப்படியாகக் குறைவடைந்து வளர்ந்தோரின் பேச்சு மாதிரிகைகளை அப்படியே பின்பற்றும் பண்பு காணப்படும்.

முன்பள்ளி ஆசிரியர்களும், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும் சிறாருக்குரிய மொழி கற்பித்தலில் ஆழ்ந்த கவனம் எடுக்க வேண்டி யுள்ளது. உலகெங்கிலும் இன்று மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர் என்பதையும்

மனங்கொள்ளல் வேண்டும். மொழிகளில் இருந்தே அனைத்துக் கல்வி நடவடிக்கைகளும் ஊற்றெடுக்கின்றன. மொழித்திறன் களுக்கும் அறிகைத் திறன்களுக்மிடையே தொடர்புகள் உள்ளன.

ஆசிரியர்கள் மொழி கற்பித்தலில் ஈடுபடும் பொழுது பின்வரும் பரிமாணங்களிலே கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. மாணவர்கள் தொடர்பாடலில் ஈடுபடும் பொழுது அவர்களிட த்தே காணப்படும் மனவெழுச்சித் தடைகளையும் குறுக்கீடு களையும் நீக்குதற்கு உதவுதல் வேண்டும்.

2. மொழி விதிகளை மாணவர்களுக்கு எளிதாகவும், செப்பமாக வும் பதிய வைத்தல் வேண்டும்.

3. தனியாள் வேறுபாடுகளை அனுசரித்து மொழி கற்பித்தல் வேண்டும்.

4. மாணவர்களை உரையாடச் செய்யும் நடவடிக்கைகளை வகுப்பறையில் ஆசிரியரின் வளமாக்கலின் கீழ் மேற்கொள்ளல் நன்று.

5. சரியான திருத்தமான மொழித் துலங்கலுக்கு வெகுமதி தருத லும் மீள வலியுறுத்தல் தருதலும் சிறந்தமையாகின்றன.

மொழி கற்பித்தல் மினி மொனிக் (Minemonic) உபாயங்களை ஆசிரியர்கள் அறிந்தித்தல் வேண்டும். நினைவாற்றலை மேம்படுத்து வதற்கும் இந்த உபாயம் துணை செய்யும். படிமவாக்கல் (Formation of Imagery) இந்த உபாயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. பேச்சுத்திறன் மூளையின் இடது அரைப்பகுதியின் செயற்பாடு களோடு இணைந் துள்ளது. பேச்சு மொழி சாராத படிவாக்கம் மூளையின் வலது அரைப் பகுதியின் செயற்பாடுகளோடு தொடர் புடையது. இவ்வாறு இருமைத் தன்மையான செயற்பாடுகள் மூளையில் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அருவ எண்ணக்கருக்கள் இட மூளையின் செயற்பாடுகளால் உருவாக்கப்படுகின்றன. இந்த இரண்டு செயற்றொகுதிகளும் மிக நுட்பமாக மூளையிலே ஒன்றிணைக்கப்படுகின்றன. ஆகவே மொழியைப் படங் களுடனும் உருவங்களுடனும் ஒன்றிணைத்தல் வேண்டும். அவ்வாறே படங் களுக்கும் உருவங்களுக்கும் மொழி வடிவங்கள் கொடுத்தல் வேண் டும். சமாந்தரமான இந்த நடவடிக்கைகள் மினிமோனிக் உபாயங்



களுள் ஒன்றாகக் கருதப்படும்.

எதனையும் மறக்காத உள ஆற்றல் கொண்டோர் "மறதியிலாா்" (Minemonist) என அழைக்கப்படுவர். ஒரு புலனுக்குரிய தூண்டி யான இன்னொரு புலனுக்குரிய படிமத்தை உருவாக்கும் செயல் முறை "வண்ண ஒலிப்புலன் நுகர்வு" (Colour Hearing) என்றும் குறிப்பிடப்படும். இவைபற்றிய அறிவு மொழி ஆசிரியருக்கு வேண்டப்படுகின்றது.

# சமூகமயமாக்கலும் ஆளுமைமேம்பாடும்

சமூகத்திலே சிறார் தமக்குரிய இயக்கமுள்ள இடத்தைப் பெற்றுக் கொள்ளல் சமூகமயமாக்கல் எனப்படும். சமூகம் பொருத்த மானவை என்று கருதும் நடத்தைகளையும் துலங்கலையும் ஏற்படுத் துதல் சமூக மயமாக்கலின் பாற்படும். முன்பள்ளிச் சிறார்களைப் பொறுத்தவரை இது மிகுந்த சிக்கலான செயல்முறையாகக் கருதப் படுகின்றது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகளிலிருந்து சிறிது விலகல் ஏற்படும் பட்சத்தில் சமூகம் அதனை ஓரளவு அங்கீகரிக்கும், ஆனால் விலகல் பெரிதாக இருக்கும் பொழுது சிறார்கள் பல்வேறு உள-நெருக்கு வாரங்களையும், பாதிப்புக்களையும் அனுபவிக்க நேரிடு கின்றது. சிறாரின் உணர்ச்சிகள், சிந்தனைகள், நம்பிக்கைகள், விழு மியங்கள், உந்தல்கள், எதிர்பார்ப்புகள் என்ற அனைத்தும் பாதிப்பு க்கு உள்ளாகின்றன.

சிறுவர்களை அரவணைத்து வளர்க்கும் முறை குடும்ப நிலை களுக்கு ஏற்பவும், பண்பாட்டு வேறுபாடுகளுக்கு ஏற்பவும் வேறுபடு கின்றது. சில குடும்பங்களில் சிறார்கள் உடல்சார்ந்த அரவணைப் புக்கு கூடுதலாக உட்படுத்தப்படுகின்றனர். சில குடும்பங்களில் சிறார்கள் கூடுதலான மொழி உரையாடல்களால் தூண்டப்படுகின்ற னர்.

நிபந்தனைப்படுத்தல், உற்று நோக்கல, ஒன்றித்தல், பின்பற்று தல், மூத்தவர்களை மாதிரிகைகளாகக் கொண்டு ஒழுகுதல் முதலாம் நடவடிக்கைகளால் சிறார்கள் சமூகத்திலுள்ளவர்களைப் பின்பற்றி வாழப் பழகிக் கொள்கின்றார்கள்.



பெற்றோரும், ஆசிரியரும், சிறார்களின் நல்ல நடத்தை களுக்குப் பாராட்டு வழங்கும் போது, மீள வலியுறுத்தல் தரும் பொழுது சிறார்களிடத்து சமூக நடத்தைகள் நெறிப்படுகின்றன. சிறார்களின் ஆரம்ப நிலைச் சமூகமயமாக்கல் அவர்களது தேவை களுடனும் உந்தல்களுடனும் (Drives) இணைந்தவையாக இருக் கும். தமக்கு உணவு தரும் தாயின் முகம், தந்தையின் முகம் முதலியவை அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாகவும், நிறைவுகளைத் தாமும் பின்பற்ற முயலும் பொழுது, அவர்களுடன் இடைவினை கொள்ளும் பொழுது சமூகமயமாக்கல் வளர்ச்சியடையத் தொடங் கும்.

உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் தூண்டும் நிலமைகள் சிறார்களுக்குத் தேவைகளாகவுள்ளன. இது எழுச்சி சார்ந்த தேவை (Need For Arousal) என்று குறிப்பிடப்படும். தமக்கு மகிழ்ச்சியூட்டு பவர்கள், உற்சாகமூட்டுபவர்கள், வியப்பூட்டுபவர்கள் முதலியோ ரின் நடத்தைகளைப் பின்பற்றும் பொழுது சமூக மயமாக்கல் வளர்ச்சியடையத் தொடங்கும்.

சமூகமயமாக்கல் என்பது அதனுள்ளேயே ஒரு வெகுமதிப் பெறுமானத்தையும் (Reward Value) கொண்டிருக்கும். சமூகத் தோடு இசைந்து பழகும் பொழுது கிடைக்கும் ஏற்புடைமை சமூகமய மாக்கலின் உள்ளமைந்த வெகுமதியாகின்றது. சமூக மயமாக்கல் என்ற செயல் உள்ளார்ந்த மனக்கிளர்ச்சிகளைத் தூண்டுதலுடன் இணைந்ததாகும். ஒரு செயலானது பிறரால் அங்கீகரிக்கப்படும் பொழுது உள்ளார்ந்த மனக்கிளர்ச்சிகளுடன் இணைந்த மனத் திருப்தி கிடைக்கப் பெறுகின்றது.

வால்ரர் மிச்சேல் என்பவர் சமூக மயமாக்கலின் உளவியற்பண்பு களை வலியுறுத்தியபொழுது ஒரு பிரதான கருத்தை முன்மொழிந் தார். சமூகமய மாக்கச் செயல்முறை எப்பொழுதும் ஒருவரது "தற்கட்டுப்பாட்டுடன்" இணைந்ததாக இருக்கும். தற்கட்டு பாடு என்பது தாமதித்துப் பெரிய வெகுமதிகளைப் பெறும் பொருட்டு ஒவ்வொருவரிடத்தும் உடனடியான தற்கட்டுப்பாடுகளை ஏற்படு த்தி விடுகின்றது. தற்கட்டுப்பாடு அற்றவர்கள் போதுமான சமூகமய மாக்கல் திறன் அற்றவர்கள் என்பதே மிச்சேலின் கருத்தாகும்.

சமூகமயமாக்கல் அறிகை அடிப்படையிலும், குறியீட்டு அடிப் படையிலும் உள்ளத்திலே பதிவுகளை ஏற்படுத்துகின்றது. தவறான நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கற்றுக்கொள்ளல் சமூக மயமாக்கல் தொடர்பான அறிக்கையாகின்றது. ஆனால் "தவறான நடத்தை" என்பது பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடுவதையும் மனங் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, ஒரு பண்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு நடத்தை இன்னொரு பண்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படாததாகவும் இருக்கலாம். இது தொடர்பாக மூன்று எண்ணக் கருக்களை உளவியலாளர் முன்வைக்கின்றனர். அவையாவன;

1. எதிர்ச்சமூக (Antisocial) நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ளல்.
2. ஒத்துப் போகாத (Non Conforming) நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ளல்
3. அவ் சமூக (Asocial) நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ளல்.

இவை சமூக அறிவு, ஒழுக்க அறிவு, பண்பாட்டு அறிவு, முதலியன வற்றுடன் இணைந்த நடத்தை உருவாக்கத்துடன் தொடர்புடையது. இந் நிலையில் சமூக மயமாக்கல் என்பது சமூக ஒருங்கிணைவை ஏற்படுத்தி விடுகின்றது. உளவியல் ஒருங்கிணைவை (Psychological integrity) ஏற்படுத்துதலே சமூக மயமாக்கலின் உன்னதமான உளவியல் இலக்காகக் கொள்ளப்படுகின்றது.

எதிர்ச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறுவர்கள் தண்டிக் கப்படும் பொழுது அது அவர்களிடத்துப் பல்வேறு உளவியற் சிக்கல் களையும் மனவெழுச்சித் தாக்கங்களையும் ஏற்படுத்திவிடும். எதிர்ச் சமூக நடத்தைகளுக்குத் தண்டிப்பதிலும் பார்க்க நேர்ச் சமூக நடத்தைகளை மீளவலியுறுத்தி உற்சாகப்படுத்துதலே சிறந்த உளவியல் உபாயமாகக் கருதப்படுகின்றது.



# நினைவாற்றல் வளர்ச்சி

நினைவாற்றலானது முதற்கண் உயிரியல் அடிப்படையைக் கொண்டது என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது. உயிரினங்களின் படிமலர்ச்சியில் மனித மூளை நினைவாற்றலுக்குரிய உயிரியல் அடிப்படை சிறாரிடத்துக் காணப்பட்டாலும், கல்விச் செயல் முறையால் அதனை வளம்படுத்தாவிடில் அதனை விருத்தியாக்க முடியாது.

முதற்கண் நினைவாற்றல் பற்றிய சில உளவியல் அடிப்படைகளை அறிந்து கொள்ளுதல் முக்கியமானது.

அ. நினைவாற்றல் ஒருவரது கட்டுமானத்துடனும் மன வெழுச்சிகளுடனும் இணைந்தது.

ஆ. கவனத்துக்கும் நினைவாற்றலுக்கும் நேரடியான தொடர்பு உண்டு.

இ. மூளையில் நிகழும் உயிர் இரசாயன செயல்முறையுடன் நினைவாற்றல் இணைந்துள்ளது.

ஈ குறித்த நினைவானது காலவோட்டத்தில் படிப்படியாக வலுவிழந்து செல்லும்.

உ. பழைய நினைவுகளை மீட்டலும் புதிய நினைவை உட்பதித்தலும் வேறுபட்ட செயல்முறைகள்.

ஊ. கலக்கமற்ற தெளிவான உள்ளத்தில் நினைவாற்றற் செயற்பாடு வினைத்திறனுடன் நிகழும்.

சிறாரை ஊக்கப்படுத்துதல், அவர்களுக்குப் பின்னூட்டல்களை வழங்குதல், கற்கும் பொருளில் அக்கறையை உண்டாக்குதல், கற்கும் விடயங்களை அவர்களின் உள ஆற்றல்களுக்கு ஏற்ப ஒழுங்கு

படுத்திக் கொடுத்தல், பொருத்தமான வெகுமதிகளை வழங்குதல் முதலியவை நினைவாற்றல் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

நினைவாற்றல் வளர்ச்சியிலே கற்கும் சூழல் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சிறாரின் கவனத்தைச் சிதறடித்து விடும் புறத்தூண்டி கள், அவர்களின் புலன் உறுப்புக்களைப் பாதிக்கும் ஒளி, ஒலித்தாக்கங்கள், பாதுகாப்பற்ற நிலை முதலியவை நினைவாற்றல் வளர்ச்சிக்குக் குந்தகமாக அமையும்.

படிப்பதற்கு முன்னரும், படித்து முடித்த பின்னரும் ஒரு குறித்த அளவு ஓய்வு வழங்குதல் நினைவாற்றலை மேம்படுத்தத் துணை செய்யும். கற்பதற்கு முந்திய ஓய்வு அல்லது கற்பதற்கு முந்திய தியானம் முதலியவை நினைவாற்றலை அதிகரிகச் செய்தமை பரிசோதனைகளின் வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.

செயற்பாடுகளோடு இணைந்த கற்றலானது அதிக அளவில் நினை வாற்றலை வளர்த்தல் கண்டறியப்பட்டுள்ளது. சிறாரைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் ஆசிரியரும் பெற்றாரும் கூடிய கவனம் செலுத்த வேண்டி யுள்ளது.

சிறாரின் நினைவாற்றலை வளர்ப்பதற்குரிய பல நுண் உபாயங்கள் கண்டறியப்பட்டுள்ளன சொற்களைப் பொருட்களுடனும் செயல்களுடனும் இணைத்துக் கற்பிப்பதனால் நினைவாற்றல் சிறப்படையும். ஒன்றுடன் ஒன்று இணைந்த பொருள்களைத் தொடர்புபடுத்திக் கற்பிப்பதனாலும் நினைவாற்றலை வளர்க்கலாம். எடுத்துக்காட்டாக பால் - தயிர்- மோர் - வெண்ணை என்பவற்றைக் குறிப்பிடலாம். சோடிகளைத் தொடர்புபடுத்திக் கற்பிப்பதனாலும் நினைவாற்றலைத் தூண்டலாம் எடுத்துக்காட்டாக தம்பி, தங்கை, பூட்டு, திறப்பு, வலம், இடம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சொல் சார்ந்த முறையினூடாகவே பெருமளவு தகவல்களை நினைவிலே தேக்கிவைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே சிறார் திரட்டி வைத் துள்ள நினைவுப்படங்களுடன் இணையக் கூடியவாறு புதிய தகவல்களை ஒன்றிணைப்பதால் நினைவாற்றலை வளம்படுத்தலாம். இத்தகைய செயல் "மீளாக்கல் பதிவுகள்" என்று அழைக்கப்பட்டது. தமிழர்களது உளவியற் சிந்தனைகளில் மீளாக்கற் பதிவுகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றிருந்தன.



"இடை ஒட்டக்கள்" வாயிலாக சொல் சார்ந்த நினைவாற்றலை வளர்க்கும் முறைமையும் தமிழர்களுடைய பாரம்பரியத்திலே காணப்பட்டது. பழைய நினைவுப் பதிவுகளுடன் புதிய நினைவுகளை ஒட்டவைக்கும் இடைநடுச் செயற்பாடுகளை இடையொட்டுக்கள் செய்யும். உதாரணம் அம்பு, வில், முதலியவற்றைப் பார்த்து அனுபவித்த சிறார் கள் வானவில்லைப் பார்த்து நினைவில் நிறுத்தும் பொழுது "வானம்" என்பது முன்நினைவையும், பின் நினைவையும் இணைக்கும் இடை யொட்டாக அமையும். மேலும் ஓர் எடுத்துக்காட்டு வருமாறு "குளிர்மை" என்ற தமிழ்ச் சொல் மாணவர்களது நினைவிலிருக்கும் பொழுது "Cool" என்ற ஆங்கிலச் சொல்லைப் புதிதாக நினைவில் வைக்குச் பொழுது "கு" என்பதன் நெடில் வடிவமாகிய "கூ" என்பது இடையொட்டாக அமைக்கப் படலாம்.

சிறார்களது சொல் சார்ந்த நினைவாற்றலை வளர்ப்பதற்கு "ஒலி முறைமை" (Voicing) என்ற நுண் உபாயமும் பயன்படுத்தப் படுகின்றது. குறிப்பிட்ட சொல்லை ஒலி அழுத்தங்களுடனும் இசை சார்ந்த அழுத்தங்களுடனும் கற்பிக்கும் பொழுது அது நினைவிலே நிறுத்தி வைக்கப்படும். இதிலிருந்து வளர்ச்சி பெற்ற ஒரு முறைமையே "ஒலி மொழி" முறைமையாகும்.

முழுமையான உடற் கூற்று அசைவுகளுடனும் துலங்கலுடனும் (Total Physical Response) கற்பிப்பதன் வாயிலாக மொழிசார் நினை வாற்றலை வளர்க்கலாம். ஆடி, அசைந்து, உடல் இயக்கங்களுடன் இணைந்த வகையில் ஒரு சொல்லை சிறார்கள் கற்கும் பொழுது அது நினைவில் ஆழப்பதியும்.

சிறாரின் மொழிசார்ந்த நினைவாற்றலை வளர்ப்பதற்குரிய பிறிதோர் உபாயமாக அமைவது "கருத்தேற்ற முறைமை (Suggestopedia) யாகும். அதாவது அவர்களின் ஆழ்மன ஊக்கலுடன் அல்லது நனவிலிப் பதிவுகளுடன் மொழியை இணைத்து விடுதலாகும். சிறாரின் அமிழ்ந்து அமுங்கிய உணர்வுகளுடன், மொழியை இணைக்கும் உளப்பகுப்பு உபாயத்தை இங்கு பயன் படுத்துதல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவருடனும் பொருத்தமான உரையாடல்களையும், இடைவினைகளையும், ஊடாட்டங்களையும் ஏற்படுத்திச்

சொல் சார்ந்த நிறைவாற்றல்களை வளர்த்தல் "உள இயக்க முறைமை" (Psychodyna mics) என்று கூறப்படும் இந்த முறையியலில் மொழி என்பது மனிதர்களுக்கிடையே நிகழும் நோக்கமுடைய நடத்தைகளுடன் தொடர்புடையதாக இருக்கும்.

மொழிசார் நினைவாற்றலை வளர்க்கும் சிறப்பார்ந்த நுண் முறைகளுள் "சமுதாய மொழி கற்றல்" (Community Language Learning) என்பது விதந்து குறிப்பிடப்படுகின்றது. சமுதாய மொழி கற்றல் என்ற செயற்பாடு இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. அவையாவன.

1. முதலீடு (Investment)
2. தெறிப்பீடு (Reflection)

கற்பவரது உளக்கல்விநிலையும், முயற்சியும் முதலீடுகளாகின்றன. சமூகத்தில் உள்ளவர்களிடம் ஊடாட்டங்களை வளர்க்கும் பொழுது, தான் யார் என்ற இயல்பை அறியும் பொழுது தெறிப்பீடு ஏற்படுகின்றது. முதலீ டும், தெறிப்பும் நினைவாற்றல் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன. சமுதாய மொழி கற்றலில் சீர்மியமும் ஆற்றுப்படுத்தலும் சிறப்புப் பெறுகின்றன. சீர்மியம் அல்லது உளவளத் துணை உபாயங்களைப் பயன்படுத்திச் சிறாரிடத்து நினைவாற்றலை மேம்படுத்தலாம்.

"மௌன வழி" (The Silent way) என்ற செயற்பாட்டின் வழியாகவும், மொழி சார்ந்த நினைவாற்றலை வளர்த்தெடுக்க முடியும். கற்கும் பொருளை நன்கு குவியப்படுத்தலும், கவனக்கலைப்பான்களைத் தவிர்த்துவிடுதலும், கற்கும் செயற்பாடுகளோடு குறுக்கிடும், தூண்டிகளை நீக்கிவிடுதலும், கற்கும் பொருள் தொடர்பான நினைவாற்றலை மிகுந் தெழச் செய்யும் "நான் கற்பிக்கப்பட்டேன் என்ற உணர்வை ஏற்படுத்தாது நான் கற்றேன்" என்ற உணர்வை வலுப்படுத்துதலே மௌன வழியின் உள்ளடக்கமாகும்.



# குழந்தை உளவியலும் விளையாட்டுக்களும்

குழந்தைகளின், உடல், உள்ள, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சிகளில் விளையாட்டுக்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. "வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்" என்பது எம் மத்தியில் வழங்கிவரும் உளவியற் பொருண்மை கொண்ட முதுமொழியாகும். நவீன உளவியலாளர்கள், "குழந்தைகளின் விளையாட்டுக்கள்", குழந்தைகளுக்கான விளையாட்டுகள் முதலிய துறைகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

அறிகை மானிடவியலாளர்கள், தொல்குடி மக்களது விளையாட்டுக்களை ஆராய்ந்த பொழுது பல நுண்ணிய கருத்துக்கள் வெளிவந்தன. அதாவது, அவர்களது விளையாட்டுக்களில் வெற்றி, தோல்வி, மூர்க்கமான போட்டி முதலியவற்றுக்கு இடம் தரப்படவில்லை. மகிழ்ச்சி, ஈடுபாட்டு டன் பங்குபற்றல், கூட்டுறவு முதலாம் பண்புகளே அங்கு மேலோங்கியிருந்தன. குழந்தைகளின் இயல்பான விளையாட்டுகளிலும் மேற்குறித்த தொல்குடிமக்களது பண்புகளே மேலோங்கியிருத்தல் ஆய்வுகளிலே கண்டறியப்பட்டுள்ளன.

**குழந்தைகளின் விளையாட்டுக்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.**

1. இயல்பான உடல் உள எழுச்சி இயக்கங்களோடு இணைந்த விளையாட்டுக்கள்.

   அதாவது தாமாகவே ஆடுதல், துள்ளுதல், சிரித்தல், கற்பனை செய்தல் முதலியவற்றோடு இணைந்த விளையாட்டுக்கள்.

2. பாவனை விளையாட்டுக்கள் அதாவது பிறரின் செயல்கள் நடவடிக்கைகள் போன்றவற்றைத் தாமே செய்து விளையாடி மகிழ்ச்சியடைதலும் இசைவாக்கம் செய்தலும்.

3. நாடகப்பாங்கான விளையாட்டுக்கள் - தமக்குப் பிடித்தவற்றை மீள நடித்தல், பாத்திரங்களை ஏற்று நடித்தல் விளையாடுதல் முதலியவை இப்பிரிவில் அடங்கும்.

4. நட்பை உண்டாக்குவதற்கான விளையாட்டுக்கள் - இவை தொடர்பாடல் விளையாட்டுக்கள் என்றும் விளக்கப்படும். அதாவது பிறருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் புரிந் துணர்வை வளர்ப்பதற்கும் குழந்தைகள் மேற்கொள்ளும் விளையாட்டுக்கள்.

5. தனிமை நாட்ட விளையாட்டுக்கள் - குழந்தைகள் ஏனைய குழந்தைகளைக் கருத்திற்கொள்ளாது தாமாகத் தனித்து விளை யாடுதல்.

6. பங்குபற்றா விளையாட்டுக்கள் - ஏனைய குழந்தைகள் விளையாடும் பொழுது அவற்றிலே பங்கு பற்றாது, பார்வையாளராக இருந்து அனுபவிக்கும் விளையாட்டுக்கள்.

7. இடைவினை பெறாத விளையாட்டுக்கள் - அதாவது, இயங்காத பொம்மைகளுடன் விளையாடும் விளையாட்டுக்கள்.

8. கூட்டுறவுப் பாங்கான விளையாட்டுக்கள் - பிறருடன் சேர்ந்தும் விட்டுக்கொடுத்தும், உதவி செய்தும், தனது சந்தர்ப்பத்துக்காகப் பொறுத்திருந்தும் மேற்கொள்ளும் விளையாட்டுக்கள்.

9. நடிபங்கு ஏற்கும் நாடகப்பாங்கான விளையாட்டுக்கள் - தாமே தனித்து, நடித்தல், பிறருடன் இணைந்து நடித்தல் முதலிய விளையாட்டுக்கள் இதில் அடங்கும்.

விளையாட்டுக்களின் வாயிலாகக் குழந்தைகள் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளுகின்றார்கள். அறவொழுக்கங்கள், கட்டுப்பாடுகள், ஆண், பெண் வேறுபாடுகள், உணர்ச்சி வெளிப்பாட்டுக்குரிய சொற்கள் முதலானவற்றைக் கற்றுக் கொள்வதற்கு விளை



யாட்டுக்கள் துணை நிற்கின்றன. தம்மைப் பற்றிய தற்காட்சியை வளர்த்துக் கொள்வதற்கும் விளையாட்டுக்களே துணை செய்கின்றன.

விளையாட்டுகளில் சரியான நடத்தைகள் மீள வலியுறுத்தப்படுகின்றன. பிழையானவற்றுக்குத் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இவற்றின் காரணமாக நடத்தை உருவாக்கத்துக்கு விளையாட்டுக்கள் பெரிதும் துணை நிற்பதைக் காணலாம்.

குழந்தைகளின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் விளையாட்டுக்கள் தூண்டுதலளிக்கின்றன. உதாரணமாக நாற்காலியை ஓர் ஊர்தியாகக் கற்பனை செய்து ஆக்கத்திறனை வெளிப்படுத்துதல், கல், கடதாசி, தடிகள் முதலியவற்றை வைத்துக் கடை விளையாட்டு நடத்துதல் முதலியவற்றில் குழந்தைகளின் படைப்பாற்றல் மலர்ச்சி வெளிப்படும்.

முன்பள்ளிக் குழந்தைகளின் விளையாட்டுக்களில் ''நடுநாயகப் - படுத்தல்'' (Centration) என்ற பண்பும் மிகுதியாகக் காணப்படும். அதாவது விளையாடும் பொழுது ஒரு பொருளில் மாத்திரம் அவர்களது கவனம் மிகையாக இருந்தலும் ஏனைய பண்புகளைக் கைவிடுதலுமாகிய இயல்பு காணப்படும். உதாரணமாக விளையாடும் பந்தை மாத்திரம் கவனித்துக் கொண்ட ஓடி இடைநடுவிலிருக்கும் வீட்டுப்படியைக் கவனியாது விழுந்து விடும் பண்பும் காணப்படும். தனது தந்தையார் அவரது ''அப்பாவின் மகன்'' என்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாம லிருக்கும். இதுவும் நடுநாயகப்படுத்தலுக்கு வேறோர் உதாரணமாகும்.

குழந்தைகளின் விளையாட்டுக்களில் தன் முனையப் பண்புகளும் (EGO) Centrism) அதீதமாகக் காணப்படும். தமக்கே பரிசு கிடைக்க வேண்டுதலும், கிடைக்காதவிடத்து அழுதலும் தன்முனையப் பண்புகளுக்கு உதாரணங்களாகும். பொருட்களுக்கு உயிர்ப்பு ஊட்டுதலும் (Animism) அவர்களது விளையாட்டுக்களில் இடம் பெறும் உதாரணமாக;

கதிரை ஒன்று குழந்தையை மோதிவிட்டால் அந்தக் கதிரைக்கு அடித்துக் கோபத்தைத் தணித்துக் கொள்ளும் பண்பும் காணப்படும்.

விளையாட்டுக் குழுக்களின் பண்புகள் குழந்தைகளின் இயல்பு கள் மீது செல்வாக்குச் செலுத்தலும் கண்டறியப்பட்டுள்ளன. உதாரணமாக மிகுந்த வன்நடத்தை கொண்ட குழுக்களில் சேர்ந்து விளையாடும் சாதுவான குழந்தைகளிடத்து வன்நடத்தைப் பண்பு கள் மேலோங்கிய காட்சியை உளவியலாளர்கள் கண்டறிந்துள்ள னர். இந்நிலையை மாற்றியமைப்பதற்கு ''வன்நடத்தையை வெளிப்படுத்தாதவருக்கே வெகு மதி" என்ற நிலையை உருவாக்குதல் வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது.

முன்பள்ளிக் குழந்தைகளது விளையாட்டுக்களினூடாக அறிகை, எழுச்சி மற்றும் உடலியக்கத்திறன்களை வளம்படுத்து வதற்கு ஆசிரியர்கள் வகை வகையான விளையாட்டுப் பொருள் களை பயன்படுத்துதல் சாலச் சிறந்தது. பல்லினப் பாங்கான பொருள்களைப் பயன்படுத்தும் பொழுது அவை குழந்தைகளுக்கு உடல் ஊறு விளைவிக்காதவையாகவும் இருத்தல் வேண்டும்.



# குழந்தைகளும் இயங்காற்றல் குலைவும்

குழந்தைகளிடத்துக் காணப்படும் இயங்காற்றற் குலைவு (Dyspraxia) உளவியலாளர் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. குழந்தைகளிடத்துப் பல்வேறு இயங்காற்றல் குலைவுகள் காணப்படு கின்றன. முதற்கண் உடலியக்கம் சார்ந்த இயங்காற்றல் குலைவை சார்ந்த இயங்காற்றல் குலைவை நோக்கலாம்.

உடல் சார்ந்த இயங்காற்றல் குலைவுக்கு பின்வரும் எடுத்துக் காட்டுக்களைக் குறிப்பிடலாம்.

அ) சட்டைப் பொத்தான்களைப் பூட்ட முடியாதிருத்தல், தவறாகப் பூட்டுதல்.

ஆ) வலப்புற - இடப்புற சப்பாத்துக்களை அல்லது செருப்புக் களை இனங்கண்டு போட முடியாதிருத்தல்,

இ) எழுத்துக்களை உறுப்பாக எழுத முடியாதிருத்தல்.

ஈ) எழுத்துப் பிழைகள் அதிகமாக ஏற்படுதல்.

உ) படங்கள் வரைவதற்கு சிரமப்படுதல்.

சொல் சார்ந்த இயங்காற்றல் குலைவும் குழந்தைகளிடத்துக் காணப்படுதல் உண்டு. அவற்றுக்குரிய சில எடுத்துக்காட்டுகள் வருமாறு;

அ) ஒலி ஒழுங்கைத் தவறாகப் பயன்படுத்துதல் - கட என்பதை டக என்று சொல்லுதல்.

ஆ) ஒலியை எளிமைப்படுத்துதல் மாடு என்பதை மா என்று சொல்லுதல்.

இ) திணறி உச்சரித்தல்.

எண் சார்ந்த இயங்காற்றல் குலைவும் குழந்தைகளிடத்து ஏற்படலாம். அவற்றுக்குரிய சில எடுத்துக்காட்டுகள் வருமாறு;

அ) தொடர்ச்சியாக எண்களைச் சொல்ல முடியாதிருத்தல்.

ஆ) தானங்களைத் தவறவிட்டு கூட்டல் கழித்தல் செய்தல்.

இ) எண்களைத் தவறாக இனங்காணுதல்.

ஈ) தானங்களுக்கு முன்வரும் பூச்சியம், பின்வரும் பூச்சியம் முதலியவற்றுக்கிடையே வேறுபாடு காணமுடியாதிருத்தல்.

வடிவங்கள் தொடர்பான இயங்காற்றல் குறைவும் சிறார்களிடத்துக் காணப்படலாம். அவற்றோடு தொடர்புடைய சில எடுத்துக்காட்டுகள் வருமாறு;

அ) பின்னிய வடிவங்களை வேறு பிரித்து அறிய முடியாதிருத்தல்.

ஆ) ஒரு வடிவத்தினுள் இன்னொரு வடிவம் அமைந்திருக்கும் பொழுது ஒரு வடிவத்தை மாத்திரம் இனங்காண முடியுமான நிலையில் இருத்தல்.

இ) சற்சதுரம் - நீள் சதுரம், வட்டம், நீள்வட்டம் முதலியவற்றை வேறுபடுத்த முடியாதிருத்தல்.

ஈ) சமச்சீர்ப் பண்பை விளங்கமுடியாதிருத்தல்.

உ) உருவத்தைக் கொண்டு நாணயங்களை வேறுபடுத்த முடியதிருத்தல்.

எழுதுதல் தொடர்பான இயங்காற்றல் குறைவும் சிறார்களிடத்து ஏற்படு தல் உண்டு. அதற்குரிய சில உதாரணங்கள் வருமாறு;

அ) குறில் நெடில் எழுத்து வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்த முடியாதிருத்தல்.

ஆ) ல,ள,ழ வேறுபாடுகளை அறிய முடியாதிருத்தல்.

இ) ன, ண எழுத்து வேறுபாடுகளை இனங்காண முடியாதிருத்தல்.



ஈ) ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு, அரவு முதலியவற்றின் வேறுபாடுகள் தெரியாதிருத்தல்.

உ) எழுத்துக்கள் சிலவற்றை அவற்றின் இயல்புக்கு மாறாக எழுதுதல்.

பொதுவாக, இயங்காற்றல் குறைவு பல காரணிகளால் ஏற்படுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். உடலியக்கக் காரணிகள், நோய்கள், அதீத மனவெழுச்சிகள் , உளநெருக்குவாரங்கள், மன அழுத்தங் கள், தீவிரமான தண்டனைகள், ஆரோக்கியமற்ற போட்டிகள், பொருத்த மற்ற திணிப்புக் கற்பித்தல், பயமுறுத்தல்கள், தேவைகள் நிறைவேற்றப் படாமை, தவறான அணுகுமுறைகள், தவறான கற்பித்தல், தவறான சமூக உறவுகள் போன்ற பல காரணிகள் இயங்காற்றலிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு ஆசிரியரும் மருத்துவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியும் ஏற்படலாம். ஆசிரியரும் பெற்றாரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டி வரலாம்.

இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப் பார்ந்த பணிகளாகப் பின்வருவன இடம் பெறல் வேண்டும்.

1) மாணவரது ஆற்றலுக்கு மீறிய பணிகளைக் கொடுத்தலாகாது.

2) புலன்கள் வழியாகவும், பல்லுணர்வுகள் வழியாகவும், செயல் முறைகள் தழுவியதாகவும் கற்றல் கற்பித்தலை முன்னெடுத்தல் வேண்டும்.

3) தெளிவான புலக்காட்சி கொள்ளலுக்கு வழியமைத்தல் வேண்டும்.

4) அமைப்பு வேறுபாடுகளை வெவ்வேறு வண்ணங்களினாலும், ஒலியமுத்தங்களினாலும் தெளிவுற விளக்குதல் வேண்டும்.

5) சிறிய சிறிய பணிகளில் வெற்றிகள் கிடைக்கச் செய்து உற்சாகம் தருதல் சிறந்தது.

6) ஊக்கல் உபாயங்களைப் பயன்படுத்துதல் நன்று.

7) குழந்தைகளின் சமூக இசைவாக்கத்தில் ஏற்படும் இடர்களைக் கண்டறிந்து நீக்குதல் வேண்டும்.

8) கற்பித்தலை ஆரம்ப நிலையில் இருந்து தொடங்குதல் சாலச் சிறந்தது.

சில இயங்காற்றல் குலைவுகள் குழந்தைகள் வளர வளர முதிர்ச்சியின் போது நீங்கிவிடும். ஆனால் வயதுக்குரிய திறன் களிலே பின்னடைவுகள் காணப்படுமாயின் ஆசிரியர் கூடுதலான கவனம் எடுத்தல் வேண்டும். பின்னடைவுகளை நீக்கும் கற்பித்தல் முறைகளை ஒன்றிணைத்துப் பயன்படுத்துதல் வேண்டும்.

குழந்தைகளை வகுப்பறையின் முழுத் தொகுதியாகக் கருதாது தனித்தனி உறுப்பினராகக் கருதி, தனியாள் நிலைப்பட்ட கற்றலும் கற்பித்தலுக்கும் இடம் தருதலே சிறந்தது. குழு வேளைகளில் தனி உறுப்பினர்கள் நிராகரிக்கப்படாதிருக்கும் நிலையையும் ஆசிரியர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

## சிறப்பார்ந்த கற்பித்தலுக்குரிய சிறார்கள்

அனைவருக்கும் கல்வியை வழங்குதல் வேண்டும், அனைவருக் கும் முழு நிறைவாகக் கல்வியை வழங்குதல் வேண்டும், அனைத்து மாணவரும் முழு ஈடுபாட்டுன் கற்க உதவுதல் வேண்டும் என்ற இலக்குகளை முன்னெடுக்கும் பொழுது சிறப்பார்ந்த கற்பித்தலை வேண்டிநிற்கும் சிறுவர்களை இனங்காண வேண்டியுள்ளது.

முதலில் சிறப்பார்ந்த கற்பித்தலுக்குரிய சிறுவர்கள் யார் என்பதை அறிதல் வேண்டும். கல்வி உளவியலாளர் பின்வரும் வகையினரைச் சிறப்பார்ந்த கற்பித்தலுக்குரியவர்கள் என்று குறிப் பிட்டுள்ளனர்.

1) மீத்திறன் உள்ளவர்கள்
2) உளவளர்ச்சி பின்னடைந்தவர்கள்
3) கற்றல் இடர்ப்பாடு கொண்டவர்கள்
4) மனவெழுச்சிக் குழப்பமுடையோர்
5) கண்பார்வை குறைவுடையோர்
6) செவிப்புலன் குறைவுடையோர்
7) பேச்சுக் குறைபாடுடையோர்
8) உடல் உறுப்புக்களில் ஊனமும் பின்னவடைவு முடை யோர்



பல்வேறு காரணிகளால் சில மாணவர்கள் சிறந்த அடைவு களைத் தொடர்ச்சியாகக் காட்டி தமது மீத்திறனை வெளிப்படுத்து கின்றார்கள், நுண்மதித்திறன், புலமை உளச்சார்பு, ஆற்றுகைத்திறன், விளைவுச் சிந்தனை முதலியவை அவர்களிடத்து மிகுதியாகக் காணப்படுகின்றன. அந்த மாணவர்கள் ஆற்றல்களை மழுங்கடித்து விடக்கூடாது. பின்னடைவு செய்து விடவும் கூடாது. சராசரியான கற்பித்தல் அவர்களிடத்துச் சோர்வை ஏற்படுத்திவிடும் மீத்திறனு டையவர்களை பின்வரும் வெளிப்பாடுகளில் இருந்த கண்டறிந்து கொள்ளலாம்.

1) வாசிப்புத்திறனும் சொல்வளமும் மிகுந்து காணப்படல்.
2) அடிப்படைத்திறன்களை வேகமாகக் கற்கும் திறன் இருத்தல்.
3) ஆற்றுகைத்திறன் மிகுந்து காணப்படல்.
4) புத்தாக்கத்திறன் மிகுந்திருத்தல்.
5) பல்துறை ஆற்றல்கள் தென்படுதல்.
6) கற்றலில் நீண்ட நேரம் ஈடுபடக்கூடிய திறன் இருத்தல்.
7) அருவமாகச் சிந்திக்கும் திறன் மிகுந்திருத்தல்.
8) அதிக உசாவல் விருப்பு இருத்தல்.
9) தியானிக்கும் ஆற்றல் காணப்படல்.

இவர்களின் ஆற்றல்களை முடுக்கிவிடும் வகையிலும், வளமாக் கும் வகையிலும் கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைத்தல் வேண் டும்.

## முடுக்கி விடுதல் (ACCELERATION)

வளமாக்குதல் (Enrichmemt) ஆகிய இரண்டு நுண் உபாயங் களையும் விரிந்த அளவிலே இவர்களுக்குப் பயன்படுத்துதல் வேண் டும்.

உளவளர்ச்சி பின்னடைந்தவர்கள் அனைத்துத் துறையிலும் தாமதித்த வர்களாயிருப்பர். உளவளர்ச்சி பின்னடைந்தவர்களைப் பொதுவாக இரண்டு பிரிவினராக வகுத்து ஆராய்வார்கள்.

1) உளவளர்ச்சியில் அதிக பின்னடைவு கொண்டவர்களாகவும் பிறரது பாதுகாப்பிலும் வாழவேண்டியவர்கள்.
2) பயிற்சியளித்து வளப்படுத்தப்படக் கூடியவர்கள்.

நீண்ட கவனம் எடுத்தல், அதிக பொறுமையைக் கடைப்பிடித்துக் கற்பித்தல், பணிகளை இலகுவாக்கிக் கொடுத்தல், படிபடிப்படியாக எளிதிலிருந்து சிக்கலுக்குச் செல்லல், இசைவாக்கல் நெருக்கடிகளை ஏற்படுத்தாதிருத்தல் முதலிய நடவடிக்கைகளால் அவர்களுக்குரிய கற்பித்தலை முன்னெடுத்தல் வேண்டும்.

கற்றல் இடர்ப்பாடுகள் பல்வேறு உடல், உள, மனவெழுச்சி, மற்றும் சமூகக் காரணிகளால் ஏற்படுகின்றன. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், கணித்தல், காரணங் காணுதல் முதலிய அடிப்படைத்திறன்களிலே பின்னடைவு காரணமாகவும் கற்றல் இடர்ப்பாடுகள் ஏற்படும்.

பொதுவான கற்றல் பின்னடைவு, சிறப்பார்ந்த பாடங்களிலே கற்றல் பின்னடைவு என்றவாறு பின்னடைவுகளைப் பகுத்து ஆராய வேண்டியுள்ளது. பின்னடைவை நன்கு விளங்கிக் கொள்வதற்கும், கண்டு பிடிப்பதற்கும், வழிகாட்டுவதற்கும் ஆசிரியர் முதற்கண் விரிவான ஒப்புப் பட்டியல்களை (Check Lists) தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.

மாணவரின் ஆக்கங்கள், குறிப்பேடுகள் முதலியவற்றிலிருந்தும் குறித்த பின்னடைவுகளை இனங்காணலாம். மாறி எழுதுதல், தலைகீழ்ப்பட எழுதுதல், தொடர்பின்றிக் கதைகூறல் எழுத்துக்களை இனங்காணாது வாசித்தல், பொருள்களைப் பொத்தமாக இணைக்க முடியாதிருத்தல், முதலியவை பின்னடைவுக்குச் சில உதாரணங்களாகும்.

பின்னடைவுகளை நீக்குவுதற்கு ஆசிரியர் பின்வரும் நுண் உபாயங் களைப் பயன்படுத்தலாம்.

1) தனியாள்மயக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் (IEP)
2) சிறப்பார்ந்ததும் தனித்துவமானதுமான கற்பித்தல் உபாயங்களைப் பயன்படுத்துதல்.
3) புதிய முறையியல்களைப் பயன்படுத்துதல்.



4) சீர்மியத்தோடு (Counselling) இணைந்த கற்பித்தலை மேற் கொள்ளல்.
5) அறிகைச் செயல்முறையை மீள்வடிவமைத்தல்.
6) பல்லுணர்வுச் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல்.

சிறப்பார்ந்த கற்பித்தலுக்குரிய சிறுவர்களுள் மனவெழுச்சிக் குழப்பமுடையோரும் அடங்குகின்றனர். மனவெழுச்சிக் குழப்பமுடையோர் பிறருடன் திருப்தி தரக்கூடிய தொடர்புகளைக் கட்டியெழுப்ப முடியாதவர்களாக இருப்பர். பல்வேறு இசைவாக்கப் பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்வதாற் கற்றலும், கற்பித்தலும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

சாதாரண சந்தர்ப்பங்களிலும் அவர்களது நடத்தைகள் பொருத்த மற்றனவாக இருக்கும். மகிழ்ச்சியின்மை பொதுவாக அவர்களிடத்து இழையோடியிருக்கும். உள அழுத்தங்கள் பொதுவாக அவர்களிடத்துக் காணப்படும். கற்றலோடும், பள்ளிக்கூடத்தோடும், ஆசிரியர்களோடும் தொடர்புடைய பயம் குடிகொண்டிருக்கும். உடற்கூறு சார்ந்த உறுத்தல்களும் தென்படும்.

வறுமை, குடும்ப நெருக்குவாரம், அன்பு கிடைக்கப் பெறாமை, உறுதியற்ற சூழல், புறக்கணிப்பு, சிறார் கேடுறுத்தல், தங்கியிருத்தல் முதலிய பல காரணிகள் மனவெழுச்சிக் குழப்பங்கள் உண்டாக்குகின்றன. மனவெழுச்சிக் குழப்பமுள்ளோரைக் கண்டறிவதற் குரிய தரமான ஒப்புப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கும் தனியார்மயக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை (IEP) அறிமுகம் செய்தல் வேண்டும். மனவெழுச்சிக் குழப்பத்தை உண்டாக்கும் சூழற்காரணிகளை மாற்ற முயல வேண்டும். மீளவலியுறுத்தல், வெகுமதி தருதல் ஊக்கம் தருதல் முதலாம் நுண் உபாயங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

கண் பார்வைக் குறைவுடையோருக்கும் சிறப்பார்ந்த கற்றலை ஒழுங்கமைத்தல் வேண்டும். கண்பார்வைக் குறைவைப் பின்வரும் செயற் பாடுகளில் இருந்து கண்டறிய முடியும்.

1) கண்களை கசக்குதல்.
2) ஒரு கண்ணை மூடுதல்.
3) ஒளிக்கு அதிக கூச்சப்படுதல்.

4) வாசிக்கும் பொழுது இடர்ப்படுதல்.
5) புத்தகத்தை அதிக கிட்டப் பிடித்து அல்லது அதிக தூரத்திற் பிடித்து வாசித்தல்.
6) தலைவலி, கண்வலி முதலியவை ஏற்படுதல்.
7) வாசிக்கும் பொழுது சொற்களை அல்லது வசனங்களை விட்டுவிடல்.
8) வாசிக்கும் பொழுது எழுத்துக் குழப்பம் ஏற்படல்.
9) நேர்க் கோட்டில் எழுத முடியாதிருத்தல்.

கண்பார்வைக் குறைவு, பேச்சுக் குறைபாடு, செவிப்புலன் குறைபாடு முதலியவை பல்வேறு செறிவுகளில் மாணவரிடத்துக் காணப்படும். கண்பார்வைக் குறைவை எளிதிற் கண்டு பிடித்தல் போன்று செவிப்புலக் குறைப்பாட்டை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியாது. ஆயினும் பின்வரும் நடத்தைகள் செவிப்புலன் குறைப் பாட்டுடன் தொடர்புடையதாக இருக்கும்.

1) காதுவலி தோன்றுதல்.
2) ஆசிரியரது பேச்சிற் கவனம் குன்றியிருத்தல்.
3) காதுகளைத் திருப்பிச் செவிமடுத்தல்.
4) ஒலிவரும் சரியான திசையைத் திட்டவட்டமாகக் கண்டறிய முடியாதிருத்தல்.
5) சொல்வதைத் திருப்பச் சொல்லும்படி ஆசிரியரைக் கேட்டல்.
6) அருகிலிருக்கும் மாணவரை ஆசிரியர் கூறியதைச் சொல் லும் படி கேட்டல்.
7) சொல்சார்ந்த நிகழ்ச்சிகளிலே பங்குபற்றாது ஒதுங்குதல்.
8) ஆசிரியர் கற்பிக்கும் போது அமைதி குன்றியிருத்தல்,
9) சொல்வதெழுதலில் அதிக பின்னடைவு காட்டுதல்.

கட்புல, செவிப்புலக் குறைபாடுடையோர்க்குத் தனித்தனியாகப் பொருந் தக்கூடிய வகையிலே வகுப்பறைக் கட்டமைப்பை மாற்றியமைத்தல் வேண்டும்.



கட்புலக் குறைபாடுடையோர்க்கு அதிக செவிப்புலச் சாதனங்களையும் செவிப்புலக் குறைபாடுடையோர்க்கு அதிக கட்புலச் சாதனங்களையும் பயன்படுத்திக் கற்பித்தல் வேண்டும். அவரவருக்குப் பொருத்தமான தனித்தனி அனுபவங்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். கட்புலக் குறைபாடுடையோர்க்குப் பொருத்தமான மூக்குக்கண்ணாடிகளையும், செவிப்புலக்குறைபாடுடையோர்க்கு ஒலிச்சாதனங்களையும் தருதல் அவசியமாகின்றது.

கட்புலன் அதிக பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு பிறெயில் எழுத்துக்களை அறிமுகம் செய்தல் வேண்டும். ஊக்கப்படுத்தல் அவர்களது முன்னேற்றத்துக்கு அவசியாமாகின்றது. மிகப் பெரிய சாதனை யாளர்கள் பலர் கட்புலக் குறைபாடுடையவர்கள் என்பது சுட்டிக்காட்டப் படத்தக்கது.

செவிப்புலன் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சைகை முறையான மொழியை (Sign Language) அறிமுகம் செய்தல் வேண்டும். இரு சாராரும் பயன்படுத்தக் கூடிய நவீன மின்னணு மற்றும் தொழில் நுட்பச் சாதனங்கள் நடைமுறைக்கு வந்திருத்தலை ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும்.

உடல் உறுப்புக்களில் ஊனமும் குறைபாடும் உடையோருக்கும் சிறப்பார்ந்த கற்றல் ஒழுங்கமைப்புக்களைச் செய்தல் வேண்டும். அவர்கள் பல்வேறு இசைவாக்கப் பிரச்சினைகளையும், மனவெழுச்சித்தாக்கங்களையும் அனுபவிப்பர். வகுப்பறைக்கு அவர்கள் இலகுவாக வந்து போவதற்கும் செயற்படுவதற்குமுரிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். தம்மைத் தாமே பராமரிப்பதற்குரிய திறன்களை அவர்களிடத்து வளர்ப்பதே சாலச் சிறந்தது. அவர்களின் தொடர்பாடல் திறன்களுக்கு உற்சாகமளித்தலும் நன்று.

சிறப்பார்ந்த கல்வியை அவாவி நிற்போருக்கு உளச்சார்பை அணுகி மேம்படுத்தும் இடைவினைகளை (Aptitude Tretment Interaction) உருவாக்குதலே சிறந்த கற்பித்தல் நடவடிக்கையாகின்றது. கல்வி சார்ந்த உளச்சார்பு மேம்படும் பொழுது அவர்கள் தாமாகக் கற்றலும், தம்மைத் தாமே உருவாக்கிக் கொள்ளலும் வளர்ச்சியடைகின்றன. ஒவ்வொரு மாணவருக்குமுரிய பொருத்தமான தனித்தனி முறையியல்களை ஆசிரியர்கள் பயன்படுத்துதலே சிறப்பார்ந்த வழிமுறையாகும்.

# பகுதி II

## குழந்தைக் கல்விச் சிந்தனைகள்

# ஜோன் கென்றி பெஸ்டலோசி
***(1746 – 1826)***

**சி**றுவர்களுக்கான உளவியல் மயப்பட்ட கல்விச் செயற்பாடு களை முன்மொழிந்தவர்களுள் பெஸ்டலோசி தனிச்சிறப்புப் பெற்ற வர். ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில்களின் படிப்படியான வளர்ச்சி யும் அதனால் நிகழ்ந்த ஏழ்மையும், கல்வி நிராகரிப்புகளும் இவரின் கல்விச் சிந்தனைகளிலே பல்வேறு தாக்கங்களை ஏற்படுத் தின. ரூசோவின் இயற்பண்பு நெறி பெஸ்டலோசியின் மீது கருத்தி யல் சார்ந்த நேர்நிலைகளையும் எதிர்நிலைகளையும் பிறப்பித்தது. ஐரோப்பிய சூழலில் அரும்பத் தொடங்கிய மக்களாட்சிச் சிந்தனை கள் அவருடைய கல்விச் சிந்தனைகளில் வலிதாக ஊடுருவி நின்றன.

இவர் தமது கல்விச் சிந்தனைகளை வெறுமனே எழுத்து வடிவில் மட்டும் கூறாது, அவற்றின் நடைமுறைப் பரிமாணங்களையும் விரிவாக ஆராய்ந்தார். ஸ்ரான்ஸ் ( Stanz ), பேர்டோர்ப் ( Burgdorf), வேர்டன் (Yverdon ) முதலாம் ஊர்களில் பரிசோதனைப் பள்ளிக் கூடங்களை நிறுவி தமது கோட்பாடுகளின் நடைமுறை நுட்பங் களையும் கண்டறிந்தார்.

பெஸ்டலோசி எழுதிய பின்வரும் நூல்கள் அவரது கல்வித் தரிசனத் தின் பரிமாணங்களைப் பலவகைகளில் விளக்குகின்றன.

1) "எனது அனுபவங்கள்"
2) "அன்னப் பறவையின் கீதம்"
3) "ஒரு துறவியின் மாலைப்பொழுது"
4) "லெனோர்ட்டும் யேர்ரூட்டும்"
5) "கிறிஸ்தோப்பரும் எலியாவும்"

6) "இயற்கையின் அருள்மலர்ச்சியில் மனித உளறலின் வளர்ச்சி பற்றிய பரிசிலனை"

7) "யேர்ருட் தமது குழந்தைகளுக்கு எவ்வாறு கற்பிக்கின் றார்"

பெஸ்டலோசியின் கல்விச் செயல்முறையில் குடும்பத்தின் முக்கியத்துவம் மீள வலியுறுத்தப்படுகின்றது. அவரின் வாழ்நிலை அனுபவங்களே இந்த நிலைக்கு அடித்தளமிட்டன. அவர் பிறந்த சுவிற்சலார்ந்து சூரிச் நகரின் வாழ்க்கையிலும் குழந்தை வளர்ப்பிலும், கல்வியிலும் குடும்பங்கள் உன்னதமான இடத்தை வகித்தன. பெஸ்டலோசி சின்னஞ் சிறுவனாயிருக்கும் பொழுதே தமது தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். கல்வி கற்பிப்பவர்களுக்குத் தாயின் குணவியல்புகள் அவசியமானவை என்பதை அவர் கண்டறிந்தார்.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டதும் இவரது கல்விப் பணிகள் ஏழை விவசாயக் குழந்தைகளைத் தழுவியதாய் அமைக்கப்பட்டன. 1764-ம் ஆண்டில் அநாதைகளாய் விடப்பட்ட குழந்தைகளுக்கென ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி செயல் அனுபவங்களை தழுவிய கல்வியை வழங்கினார்.

சிறுவர்க்கான கல்வியில் கைகளும், அறிவும், உணர்வும் என்ற முப்பொருள்களினதும் முக்கியத்துவத்தை விளக்கிய அவர் அவற்றுக்கு உரிய முறையிலே பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

செயல் அனுபவங்கள் இன்றிக் கற்றல், முயன்று தவறிக் கற்றல், இயற்கையை நம்பிய கற்றல் முதலியவற்றின் எதிர்மறைப்பண்புகளை அவர் விளக்கினார். இச்சந்தர்ப்பத்தில் ரூசோவின் இயற்பண்பு நெறியோடு பெஸ்டலோசி முரண்படுகின்றார். கல்வியின் வாயிலாக குடும்பத்தை, கிராமத்தை, சமூகத்தை மறுமலர்ச்சி பெற வைக்க முடியும் என அவர் நம்பினார்.

கல்வியின் உள்ளடக்கம் பெஸ்டலோசியினால் இரு பெரும் பிரிவுகளாக வகுத்துக் கூறப்பட்டது.

1) பருப்பொருள் தொடர்பான கல்வி உள்ளடக்கம். இதில் பொருள் உற்பத்தி, விவசாயம், வணிகம், அறிவியல்,



பயன் தரு கலைகள் முதலியவை பற்றிய கற்கைகள் இடம்பெறும்.

2) அறவொழுக்கம் தொடர்பான கல்வி உள்ளடக்கம். இப்பிரிவில் ஒழுக்கவியல், சமயம், குடியியல் உரிமைகள், பிரசைகளுக்குரிய கடமைகள் ஆகியவை பற்றிய கற்கைகள் உள்ளடங்கும்.

இவ்வாறாக அமையும் கல்வியை வழங்கும்பொழுது கல்வியின் நடைமுறை முக்கியத்துவத்தை அல்லது பிரயோக முக்கியத்துவத்தை அவர் ஆழ்ந்து வலியுறுத்தினார். இச் சிந்தனையின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் அவரது குழந்தைக் கல்விச் சிந்தனைகளில் ஆழ்ந்து வேரூன்றி நின்றன.

அதாவது, குழந்தைகளுக்கான கல்வியும் கோட்பாட்டளவில் நின்றுவிடாது நடைமுறை சார்ந்தாக இருத்தல் வேண்டும் என்பது அவரது துணிபு.

பெஸ்டலோசியின் சிறார்கல்விச் சிந்தனைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1) குழந்தைக் கல்வியில் பேச்சுக்கு முக்கியத்துவம் வழங்குதல், பேச்சுக்குப் பின்னரே எழுத்துக் கற்பித்தல் ஏற்புடையது. அவர் வாழ்ந்த காலத்தில் குழந்தைக்கல்வி, எழுதுதல் முக்கியத்துவத்தோடு ஆரம்பித்தமையை அவர் நிராகரித்தார்.

2) கற்பிக்கப்படும் பாடம் பொருள் குழந்தைகளின் உடல், உள்ள, மனவெழுச்சிக்குப் பொருந்தக் கூடியதாக அமைதல் வேண் டும்.

3) கற்பித்தல் என்பது முற்றிலும் உளவியல் மயப்பட்டதாக, எளிதில் இருந்து படிப்படியாக, சிக்கலை நோக்கிச் செல்லக் கூடியவாறு ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமைக்கப் படுதலே சிறந்தது.

4) குழந்தைகளின் உள்ளுணர்வு ஆற்றலுடன் இணைந்த கல்வியை வழங்குதல் வேண்டும். அதாவது எண், மொழி, வடிவம் முதலியனவே உள்ளுணர்வு ஆற்றலுடன் தொடர்

புடையவை. இவைதான் புலன்களால் தரிசிக்கப்படும் பொருள்கள் பற்றிய அறிவுக்கு அடிப்படைகளாகும். இதனை மேலும் விளக்குவதாயின் குழந்தைகள் காணும் பொருள்களுக்கு வடிவமும், எண்ணும், பெயரும் உண்டென்பதை அவர் கண்டார். பொருள்கள் பற்றிய நேரடி அனுபவங்களில் இருந்தே அறிவு கிளார்ந்தெழுவ தாகக் கொள்ளப்படுகின்றது.

5) உற்றுநோக்கலும் புலக்காட்சியும் அறிதலுக்கு அடிப்படைகளாகின்றன. உற்றுநோக்கப்படும் பொருள்கள் மொழியுடன் தொடர்பு படுத்தப்படல் வேண்டும். பொருளறியா ஒலிகளைக் கற்பிப்பதனால் பயனில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தெளிவற்ற-ஆனால் பொருள்பொதிந்த புலன் உணர்வுகளைத் தெளிவு படுத்துவதற்குச் சொற்கள் துணைநிற்கும். தற்காலத்தில் பயன்படுத்தப்படும் ஒலி மொழி முறையியலுக்குரிய முன்னோடியாகவும் அவரைக் கருதலாம்.

6) குழந்தைகளுக்கான கற்பித்தலில் ஓவியம் வரைதலின் முக்கியத்துவமும் அவரால் வலியுறுத்தப்பட்டது. பொருள்களின் வடிவங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கு ஓவியம் துணைசெய்யும். எழுத்துக்கள் செப்பமடைய ஓவியங்கள் துணை செய்யும் என்றும் அவர் கருதினார்.

7) செயல்முறை அனுபவங்களில் இருந்தே எண்ணும் கணிதமும் கற்பிக்கப்படல் வேண்டும் என்ற கருத்தையும் முன் மொழிந்தார். அவர் காலத்தில் குழந்தைகள் மீது திணிக்கப் பட்ட அருவநிலையான (Abstract) கற்பித்தல் பயனற்ற நடவடிக்கை என்பது அவரது துணிபாக இருந்தது.

8) கற்றலின் பல்வேறு கூறுகளிடையேயும் தொடர்பும் ஒத்திசைவும் இருக்கவேண்டிய தேவையைத் தமது கற்பித்தல் அனுப வங்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவுறக் கூறினார். அதன் வாயிலாக ஆளுமையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வளமூட்ட முடியும்.

9) அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்பதற்குரிய தகுதியுடையவர்கள் என்ற கருத்து அவரால் உரத்து ஒலிக்கப் பட்டது. ஒரு வகையில் தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் சமத்துவம், சமவாய்ப்பு முதலிய முனைப்புகளுக்கு உரிய முன்னோடி களுள் பெஸ்டலோசியையும் ஒருவராகக் கருத முடியும். ஆற்றலுள்ளவர்களுக்கும் வசதிபடைத்தவர் களுக்குமே கல்வி என்ற கருத்து வலிமையாக ஒலித்த காலகட்டத்தில் பெஸ்ட லோசி நலிந்தவர்களின் கல்வி வாய்ப்புகளுக்கான குரலாக ஒலித்தார்.



10) மனிதரின் தேவைகளில் இருந்தே கல்வியும் கண்டுபிடிப்புக் களும் முகிழ்த்தெழும் என்பது அவரது கருத்தாக அமைந்து. 'அழுதபிள்ளை பால் குடிக்கும்' என்று தமிழ் மரபிலே கூறப் பட்ட கருத்துக்களுக்கும் பெஸ்டலோயின் கருத்துக்களுக்கு மிடையே ஒப்புமை காணமுடியும்.

பெஸ்டலோசி அவர்களது கல்விப் பங்களிப்புக்களைத் திறனாய்வு செய்கையில் குழந்தைகள் கல்வியிலும் வறியோர்கள் கல்விலும் அடிப்படையான புரட்சிகளைச் செய்தார் என்று கூற முடியாது. ஆனா லும் குழந்தைகளை நடுநாயகப்படுத்தும் செயல்முறை சார்ந்த கற்பித்தல் இயக்கத்தை வலுவூட்டிய ஒருவராக அவர் விளங்கினார் என்பதை மறுக்க முடியாது. பெஸ்டலோசியின் பணிகள் அவரின் பின்வந்தோரால் தொடர் ந்து முன்னெடுக்கப்பட்டு வருதல் அவரின் செல்வாக்கைத் தெளிவுபடுத்துகின்றன.

# ஜோன் பிரட்ரிக் கேர்பார்ட்
## (1776 – 1841)

**பெ**ஸ்டலோசியின் மாணவர்களுள் ஒருவராகிய கேர்பார்ட், தமது ஆசிரியரின் கல்விக் கோட்பாடுகளுக்கு மேலும் வலுவூட்ட முயன்றார். கற்பித்தலில் உளவியலின் முக்கியத்துவத்தையும் செயல்முறைப் பாங்குகளையும் ஆழ்ந்து வலியுறுத்திய கல்வியாளராக அவர் விளங்கினார். இசை, கணிதம், தத்துவம், சட்டம் போன்ற பல்துறைகளில் இவர் பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் அனைத்து அறிவுப் புலங்களிலுமிருந்து கிடைக்கபெற்ற அனுபவங்களைச் சிறார் கல்வியியலிலே பயன்படுத்தினார்.

இவரால் எழுதப்பெற்ற பின்வரும் நூல்கள் இவரின் கல்விச் சிந்தனைகளையும் தெளிவாக விளக்குகின்றன:

(1) "கற்பித்தலியற் கோட்பாடு பற்றிய சுருக்கம்"

(2) "கற்பித்தலியல் விஞ்ஞானம்"

(3) "கல்வி விஞ்ஞானம்"

(4) "கல்விக்கான கலைச் சொற்றொகுதி"

(5) "கற்பித்தலியற் சுருக்கம்"

(6) "புலக்காட்சி அடிப்படைகள்"

புலக்காட்சிகளை முன்னறிவோடு தொடர்பு படுத்திக் கற்கும் "தொடுபுலக்காட்சி" (Apperception) யின் முக்கியத்துவம் இவரால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. ஒருவர் அறிவைத் திரட்டிக்கொள்வதில் அவரிடம் ஏற்கனவேயுள்ள அறிவின் களஞ்சியம் முக்கியத்துவம் பெறுதல் இந்த எண்ணக்கருவாற் புலப்படுத்தப்படுகிறது. பிற்காலத்தில் இக்கருத்தானது "அனுபவத் திரளமைப்பு" என்ற எண்ணக்கருவால் பியாசேயின் விருத்திமுறை சார்ந்த உளவியலில் நன்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் உளவியல் ஆகிய துறைகளை விஞ்ஞானப்படுத்தும் பல்வேறு முயற்சிகளை இவர் முன்னெடுத்தார். இவர் வாழ்ந்த சூழல் விஞ்ஞான வளர்ச்சியோடு இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விஞ்ஞான மயப்படுத்தலோடு இணைந்த கற்பித்தலின் முக்கியத்துவம் அவரால் உணரப்பட்டிருந்தது. கற்பித்தலைக் கல்வியின் நடுநாயகக் கருத்தாக அவர் கொண்டார். கற்பித்தலின் விளைவாகவே சிந்தனையும் ஒழுக்கமும் முகிழ்த்தெழும் என்று அவர் கருதினார்.

கற்பித்தலியலை விஞ்ஞான மயப்படுத்த முயன்ற கேர்பர்ட், கற்பித்தல் தெளிவு கொண்டதாயும், செயலமைப்புவழி ஒருங்கிணைப்புடையதாகவும், பொருத்தமான முறையியலை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படல் வேண்டுமென்று விளக்கினார். இவை பின்வரும் ஆங்கில எண்ணக் கருக்களால் விளக்கப்படும்:

(a) Clearness

(B) Association

(C) System

(D) Method

கேர்பேர்ட்டின் மாணவராகிய சில்லர் என்பவர் இப்படிநிலைகளை மேலும் விரிவுபடுத்தி பின்வருமாறு நிரற்படுத்தினார்.

அ) தயாரித்தல்

ஆ) சமர்ப்பித்தல் அல்லது வழங்குதல்

இ) தொடர்புறுத்தல்

ஈ) செயலமைப்பு வழி ஒருங்கிணைத்தல்

உ) பிரயோகித்தல்

இந்தப் படிநிலைகள் ஆங்கிலத்தில் பின்வருமாறு விளக்கப்படும்:

a) PREPARATION

B) Presentation

C) Association

D) System

E) Application

சிறாருக்குரிய கற்பித்தல் தொடர்பாக கேர்பேர்ட் முன்வைத்த கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1) சிறார்களுக்குக் கற்பிக்கத் தொடங்கும் பொழுது அவர்களது தொடுபுலக் காட்சியையும், அதனுடன் தொடர்புடைய முன்னறிவுத் திரளையும் அறிந்து கற்பித்தலை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

2) புலக்காட்சிப் பயிற்சிகள் கற்பித்தலிற் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. வடிவங்களைத் தெளிவாக உற்றுநோக்கி உள்வாங்கிக் கொள்ளச் செய்வதன் வாயிலாக கணித அறிவை மேம்படுத்த முடியும்.

3) கட்டுப்பாடு, பயிற்சி ஆகியவை கற்பித்தலிற் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. பயிற்சி எப்பொழுதும் தற்கட்டுப்பாட்டையும், தன்னடக்கத்தையும், சுய உறுதியையும் வளர்க்கின்றது. கட்டுப்பாடு, பயிற்சி ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பயிற்சியையே மேலானதாகக் கொள்ளுதல் வேண்டும். பயிற்சியும் கற்பித்தலும் ஒன்றையொன்று தழுவி நிற்றல் வேண்டும்.

4) ஒழுக்க மேம்பாட்டைக் கற்பித்தல் வாயிலாகவே முன்னெடுக்க முடியும். ஒழுக்கம் என்பது அகத்திலிருந்து முகிழ்த்தெழுவதால் அகத்தைச் செழுமைப்படுத்த மிக விரிந்த அகல்விரி கற்பித்தல் துணைசெய்யும்.

5) கற்பித்தல் கவர்ச்சியும் நாட்டமும் (Interest) கொண்டதாக அமைக்கப்படுதல் வேண்டும். கவர்ச்சியானது ஆர்வத்தைத் தூண்டி வினைத்திறனுடன் முயற்சியடையச் செய்கின்றது. கவர்ச்சியை மலினப்பட்ட பொருளில் அவர் பயன்படுத்த வில்லை. கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகப் பாடப் பொருளை மலினமாக்கிவிடக் கூடாது.

6) பன்முனைப்பட்ட கவர்ச்சிகளைச் சிறார்களிடத்து வளர்த்தல் வேணடும். அதாவது ஒருவர் பல்வேறு பாடங்களையும் கற்பதற்கு உற்சாகமளித்தல் வேண்டும். இதனால் ஒருவரது சிறப்புத் தேர்ச்சி நிராகரிக்கப்படுவதாகக் கொள்ளமுடியாது.



7) கற்பிக்கப்படும் பாடங்களை செய்தி வழங்கும் பிரிவில் அடங்கலாம் அல்லது உணர்ச்சியூட்டும் பிரிவில் அடங்கலாம். அதாவது அறிகை, எழுச்சி என்ற பிரிவுகளை அவர் சுட்டிக் காட்டுகின்றார். அறிகை சார்ந்த பாடப் பொருள்களை உணர்ச்சியூட்டும் வகையிலே கற்பித்தல் ஆசிரியருக்குரிய பணியாகும்.

8) பகுத்தறிதல், தொகுத்தறிதல் என்ற திறன்களை வளர்க்கும் வகையிலே கற்பித்தலைக் கட்டமைப்புச் செய்து அவற்றுக்குரிய பொருத்தமான பாடப் பொருள்களை அமைத்தல் வேண்டும் என்பது அவரால் குறிப்பிடப்படுகின்றது.

பெஸ்டலோசியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி சிறுவர்க்கான கல்வியை வளம்படுத்தும் பல்வேறு நுண்ணுபாயங்களை இவர் முன்மொழிந்துள்ளார். கைத்தொழில் மயப்பட்டு மாற்றமடைந்து வளர்ந்து கொண்டிருந்த ஐரோப்பிய சூழலில், பொது மக்களுக்கான கல்வி விரிவடைந்துசென்ற நிலையில், அனைத்துச் சிறார்களையும் ஒரே வகுப்பறையிலே வைத்துக் கற்பிக்கும் கவிநிலையில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகளுக்குரிய விடையாக அவரது கல்விச் சிந்தனைகள் அமைந்தன.

# பிரெட்ரிக் புரோபல்

ஜேர்மனியின் கிராமியப் பின்புலத்து வாழ்க்கை நிலைக்களனாகக் கொண்ட ஒரு கல்வி முறைமையின் வெளிப்பாடுகளை புரோபலின் (1783-1852) ஆக்கங்களிலே காணமுடியும். சிறார் கல்வியிலே 'குழந்தைப் பூங்கா முறைமையை' முன்மொழிந்த சிறப்பும் இவருக்குரியது. பெஸ்டலோசியின் பள்ளிக்கூடத்தில் பெற்ற அனுபவங்களும் இவரது சிந்தனைகளை வளமூட்டின.

குழந்தைப் பருவத்திலே தமது தாயாரை இழந்த தவிப்பும் கிராமப் புறத்து இயற்கைச் சூழலிலே வாழ்ந்தும் கற்றும் பெற்ற அனுபவங்களும், ஆசிரியத் தொழிலிலே கிடைக்கப்பெற்ற பன்முகமான அனுபவங்களும் குழவிப் பூங்கா முறைமையை உருவாக்குவதற்குரிய தளங்களாயின. அக் காலத்து ஜேர்மனிய சிந்தனையாளர்களிடத்து முகிழ்த்திருந்த முழு நிறைவுக் கருத்தியல் (Absolute Idealism) இவரிடத்துச் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இறைவன், இயற்கை, மனிதன் ஆகிய மூன்றும் இணைந்த முழுமையானதும், ஒருமையானதுமான கருத்தியல் இவரால் வலியுறுத்தப்பட்டது.

புரோபலின் கல்விக் கொள்கைகளை அவர் எழுதிய பின்வரும் நூல்களில் தெளிவாகக் கண்டு கொள்ளமுடியும்.

1. "குழவிப் பூங்கா கற்பித்தலியல்"
2. "மனிதனின் கல்வி"
3. "அன்னையின் விளையாட்டும், மழலையர் பாடல்களும்"
4. "விருத்திவழிக் கல்வி".



ஒவ்வொருவரிடத்தும் கல்வி முழுவளர்ச்சியை ஏற்படுத்தல் வேண்டும். ஒவ்வொருவரதும் பன்முக ஆற்றல்களைக் கல்வி முனைப்புடன் வளர்த்தல் வேண்டும். இவற்றின் வாயிலாக மனிதரிடத்து உள்ளுறைந்து காணப்படும் இறையுணர்வை வெளிக்கொண்டு வருதல் வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்கான கல்வியின் முக்கியத்துவத்தை இவர் நன்கு உணர்ந்துகொண்டதுடன் தெளிவாக வெளிப்படுத்தியுமுள்ளார். மூன்று வயது தொடக்கம் ஏழுவயது வரையான குழந்தைகளுக்குரிய "குழவிப் பூங்கா" பள்ளியை அவர் திட்டமிட்டு அமைத்தார். அந்தப் பள்ளிக்கூடம் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்தது.

1) குழந்தைகள் தாம் விரும்பி ஈடுபடக்கூடிய செயல்களுக்கு பள்ளிக்கூடத்தில் வசதிகள் இருத்தல் வேண்டும்.

2) அத்தகைய செயல்களினால் தனது இயல்பை ஒரு குழந்தை அறிந்து கொள்ளவும், சூழலை விளங்கிக் கொள்ளவும் முடியும்.

3) விரும்பி ஈடுபடும் நடவடிக்கைகள் அறிவுக்கும் செயலுக்குமிடையேயுள்ள இடைவெளியைச் சுருக்கி ஆற்றலை அதிகரிக்கச் செய்யும்.

4) கற்றல் மகிழ்ச்சி கொண்டதாகவும், விடுதலை உணர்ச்சி தருவ தாகவும் ஆக்கம் தரும் ஊக்கலை முன்னெடுப்பதாகவும் இருத் தல் வேண்டும்.

5) ஒவ்வொரு குழந்தையிடத்தும் காணப்படும் இயல்பான படைப்பாற்றலை வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் ஒழுங்கமைக் கப்படுதலே சிறந்தது.

6) சிறுவர்க்குரிய சிற்றரசு (Miniature State) ஒன்றை அமைத்தல், சுதந்திரத்தோடும் மகிழ்ச்சியோடும் அவர்கள் ஈடுபடல் முதலியவை அவரது குழவிப் பூங்காவிலே இடம் பெற்றன.

7) அவருடைய குழவிப் பூங்காவில் பாட நூல்கள் பயன்படுத்தப்படவில்லை. அதாவது பாட நூல்கள் பொறிமுறையான கற்றலுக்கே இடமளிக்கும் என்று அவர் கருதினார்.

8) பாடுதல், ஓடியாடி இயங்குதல், புதிதாக நிர்மாணம் செய்தல் (Construction) முதலியவற்றால் மொழியைப் பயன்படுத்துதலும், கருத்துக்களை வெளிப்படுத்துதலும் வளர்ச்சியடைகின்றன.

9) குழவிப் பூங்காவில் பாடல்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றன. குழந்தையின் உடல்வளர்ச்சி. உளவளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி முதலியவற்றுக்குப் பொருத்தமான ஐம்பது பாடல்களை அவர் தயாரித்து வைத்திருந்தார். அவர் இயற்றிய பாலர் பாடல்கள் உலகப் புகழ் பெற்றவை. பல பாடல்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

10) குழந்தைகள் கல்விக்குரிய நன்கொடைகளையும் தொழிற் செயற்பாடுகளையும் அவர் வழங்கினார். வண்ணப் பந்துகள், மர உருளைகள், கோளங்கள் முதலிய பல பொருள்கள் அவர் வழங்கிய நன்கொடைகளாகும். காகித அலங்காரம், களிமண் வேலை, றேந்தை பின்னுதல், ஓவியம் வரைதல் முதலியவை அவர் வழங்கிய தொழிற் செயற்பாடுகளுக்கு உதாரணங்களாகும்.

11) நன்கொடைகளும், தொழிற் செயற்பாடுகளும் குழந்தைகளின் புலன்களுக்கு இங்கிதமான அனுபவங்களைத் தருகின்றன. பொருள்களின் வண்ணம், வடிவம், பருமன் முதலாம் அனுபவங்களையும், எண்ணறிவையும் அழகுணர்ச்சியையும் வளர்க்கின்றன.

12) குழவிப் பூங்காவில் விளையாட்டுக்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. மகிழ்ச்சி, இசைவாக்கம், விடுதலை உணர்வு, உளநிறைவு முதலியவற்றை விளையாட்டுக்கள் வழங்கு கின்றன. குழந்தையின் தனித்துவமான இயல்புகள் விளையாட்டுக்கள் வாயிலாக வெளிவருகின்றன. அதனால் குழந்தைகளின் ஆன்மபலம் வளர்ச்சியடைகின்றது.

13) மொழிகள், கலைகள், சமயக்கல்வி, இயற்கை அறிவு, உடல் உழைப்பு முதலாம் பாடங்கள் குழந்தைகளின் உள நிலைக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.



14) குழவிப் பூங்காவில் ஆசிரியர் பயிர் வளர்க்கும் தோட்டக்காராய் இருந்து குழந்தைகளின் இயல்பான வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் வேண்டும். குழந்தைகளின் இயல்பான ஆற்றல்களை அவர் மழுங்கடித்து விடலாகாது.

15) குழந்தைகளுக்குத் தரப்படும் பாதுகாப்பு வழியாக அவர்களிடத்திலே கட்டுப்பாடுகள் வளர்த்தெடுக்கப்படும். கூட்டுறவுச் செயற்பாடுகள் அதற்கு மேலும் வலிமையைத் தரவல்லது.

குழந்தைகள் கல்வியிலும், குழந்தைகளுக்கான பிரயோக உளவியற் புலத்திலும் பிரெட்ரிக் புரோபல் தனித்துவமான பங்களிப்பினைச் செய்துள்ளார். துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கிக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் எதிர்மறைப் பாரம்பரியத்தை உடைத்தெறிந்தவர்களுள் இவர் குறிப்பிட்டுக் கூறப்படக் கூடியவர். குழந்தைக் கல்வி என்பது ஒரு மகிழ்ச்சி தரும் பூங்காவாகவும், உற்சாகம் தரும் நந்தவனமாகவும் இருத்தல் அவரது இலட்சியமாக அமைந்தது.

# மரிய மொன்ரிசோரி அம்மையார்

குழந்தைகளுக்கான உளவியல் மயப்பட்ட கல்வி இயக்கத்தின் நவீன சிற்பிகளுள் ஒருவராக மொன்ரிசோரி அம்மையார் (1870-1952) விளங்குகின்றார். இத்தாலியில் பிறந்த இந்த அம்மையார் ரோமாபுரிப் பல்கலைக்கழகத்திலே மருத்துவத்துறையிற் பெற்ற பட்டமும், உளநலம் குறைந்த குழந்தைகளின் பராமரிப்பிலும், கல்வியிலும் ஈடுபட்டமையாற் கிடைக்கப்பெற்ற பட்டறிவும், அவரது கல்விச்சிந்தனைகளுக்கு வளமும் வலுவும் தந்தன.

குழந்தைகளை நடுநாயகப்படுத்திய கல்விமுறையில், புலன்களுக்கான பயிற்சியின் முக்கியத்துவத்தை அம்மையார் வலியுறுத்தினார். அதா வது பொருத்தமான முறையில் குழந்தைகளின் புலன்களுக்குப் பயிற்சி தந்தால் அவர்கள் அறிவில் மேம்பாடு அடைந்து கொண்டு செல்வார்கள் என்பதை அவர் கண்டறிந்தார். அவர் நடத்திய பரிசோதனைகள் இந்த முடிவுக்கு மேலும் வலுவூட்டின.

குழந்தைகள் ஒவ்வொருவரும் தனித்தன்மை பொருந்தியவர்கள். இந்நிலையில் எல்லாக் குழந்தைகளையும் ஒரே வகுப்பில் இருத்தி ஒன்றாகக் கற்பிக்கும் பொழுது அவர்களின் தனித்தன்மைகள் நசுக்கப் பட்டு விடலாம் என்ற அச்சம் அம்மையாருக்கு எழுந்தது. ஒவ்வொரு குழந்தையும் தத்தமது இயல்புக்கு ஏற்பவும், தன் வேகத்துக்கேற்பவும் கற்பதற்கு வழியமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

குழந்தைகளின் தனித்துவம், குழந்தைகளுக்குரிய புலன் பயிற்சி, மற்றும் கற்பித்தல் சாதனங்கள் முதலியற்றை முதன்மைப்படுத்திய அம்மையாரின் குழந்தைக் கல்விக் கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:



1) குழந்தைகளது தனித்துவத்தையும் தனியாள் இயல்புகளையும் மலர்ச்சியடையச் செய்யும் வண்ணம் கற்பித்தலை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

2) அறிவின் நுழைவாயில்களாக அமையும் புலன்களுக்குப் பல வகையாகவும் பல நிலைகளிலும் பயிற்சி தருதலே சிறந்த கற்பித்தல் முறையாகும். மூன்று வயது முதல் ஏழு வயதுவரையான வீச்சில் உள்ள மாணவர்ள் தீவிரமான புலன் செயற்பாடுகள் கொண்டவர்களாக இருப்பார்கள்.

3) புலன்களுக்குப் பயிற்சிதரும் விளையாட்டுக்களுக்கும், செயற்பாடுகளும் கற்பித்தலிலே சிறப்பிடம் பெற வேண்டியுள்ளன.

4) தாமே முயன்று கற்கும் செயற்பாட்டைக் குழந்தைகளிடத்து வளர்த்தல் வேண்டும். அதற்குரிய பொருத்தமான கற்பித்தற் கருவிகளைத் தேர்ந்தெடுத்து ஒழுங்கமைத்தலே சிறந்தது.

5) குழந்தைக் கல்வியில் குழந்தைகளின் தன்னுரிமைக்கும், சுயாதீனமான செயற்பாடுகளுக்கும் இடமளித்தல் வேண்டும்.

6) பொருத்தமான நிலையில் வழங்கப்படும் கற்பித்தற் கருவிகள் வாயிலாக சுயாதீனமான கற்றலும். குழந்தைகள் தம்மைத் தாமே திருத்தியமைத்துக் கொள்ளலும் இடம் பெறுகின்றன.

7) சிறுவர்க்குரிய பள்ளிக்கூடம் வீட்டுச் சூழலைப் பிரதி பலிப்பதாய் அமைக்கப்படுமதே சிறந்தது. குழந்தைகள் படிக்க, உணவு உண்ண, விளையாட, ஓய்வெடுக்க, உடல் உழைப்புடன் இணைந்து விளையாட, தனித்தனி அறைகள் இருத்தல் விருப்பத்தக்கது. திட்டவட்டமான நேர சூசிகை இன்றி ஒவ்வொரு குழந்தையும் தத்தமது விருப்பத்துக் கேற்ற செயல்களில் ஈடுபடுவர்.

8) சிறார்களுக்குரிய கல்வி எப்பொழுதும் நடைமுறை வாழ்க்கையைத் தழுவிச் செல்லுதல் வேண்டும். தங்களுக்குரிய பொருள்களைத் துடைத்து அழகாக வைத்திருத்தல்,

பல்துலக்குதல், நகங்களைச் சுத்தப்படுத்தல், கைகழுவுதல் போன்ற நாளாந்த செயற்பாடுகள் அவர்களுக்குக் கற்பிக் கப்படுதல் வேண்டும்.

9) உடல் ஒத்திசைவையும், இயக்கத்தையும் மேம்படுத்தும் உடற் பயிற்சிகளும் குழந்தைகளுக்கு வேண்டப்படு கின்றன.

10) பல்வேறு வடிவங்களைக் கொண்ட மரக்கட்டைகள், வண்ணத் தாள்கள், நாணயங்கள், மணிகள், கம்பளி நூல் கள், பெட்டிகள், வெப்ப வேறுபாடுகள் கொண்ட நீர்ப் போத்தல் முதலியவற்றைக் கொண்டு சிறந்த புலப்பயிற் சியை மாணவர்களுக்கு வழங்கலாம்.

11) அவற்றைத் தொடர்ந்து வண்ணங்களை இனங்காணல், வடிவங்களை இனங்காணல், ஒலிகளை இனங்காணல், எடை வேறுபாடுகளை அறிதல் முதலாம் செயற்பாடுகளை வழங்கலாம்.

12) அவற்றைத் தொடர்ந்து எழுதுதல், படித்தல், கணித்தல் முதலியவற்றைச் செயற்பாடுகளுடன் இணைத்துக் கற்பித் தல் வேண்டும்.

13) எழுத்துக் கற்பித்தலில் மூன்று நடைமுறைகள் பின்பற்றப்ப பட வேண்டியுள்ளன. அவையாவன:

அ) எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பை அறிதல்.

ஆ) எழுத்துக்கள் குறிக்கும் ஒலியை அறிந்து கொள்ளல்.

இ) எழுதுகோலைக் கையாளும் திறனறிதல்.

14) சொற்களையும், சொற்றொடர்களையும் கற்பிப்பதற்கு எழுத்துப் பளிச்சீட்டு அட்டைகளைப் பயன்படுத்துதல்.

கற்பித்தலில் குழந்தை உளவியலின் பிரயோகத்தை முன்னெ டுத்த கல்வியியலாளர்களுள் அம்மையார் தனித்துவம் பெறுகின்றார். அவர் கண்ட ஆசிரியத்துவமும் உளவியல் மயப்பட்டதாக அமைந்து. ஆசிரியர் " நெறியாளராக" இருக்க வேண்டும் என அம்மையார் வலியுறுத்தினார். குழந்தைகளின் தொழிற்பாடுகளில் தேவையற்ற வகையில் ஆசிரியர் குறுக்கீடு செய்யலாகாது. சிறந்த முறையில்



குழந்தைகளை உற்றுநோக்கி அவர்கள் தனித்துவத்தைக் கண்டறிந்து ஊக்குவித்தல் வேண்டும். ஆசிரியர்களுக்குப் பாட அறிவு, மருத்துவ அறிவு, ஒழுக்கம் முதலியவை கட்டாயமாக வேண்டப்படுகின்றன.

மறைபொருளாய் அகத்தே மலர்ந்துள்ள குழந்தையின் உள்ளத்தை வளம்படுத்தும் ஆற்றல்மிக்க கருத்துக்களை அம்மையார் முன்மொழிந்தார். அவரின் குழந்தைக் கல்வி இயக்கம் ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளில் விரைந்து பரவலாயிற்று.

இலங்கையிலும் இக்கருத்துக்கள் படிப்படியாகப் பரவலாயின. யாழ்ப்பாணத்தில் வேம்பஸ்தானில் அமைக்கப்பட்ட பாலர் கல்வி நிலையத்திலும், பின்னர் றிம்மர் மண்டபத்தில் அமைக்கப்பட்ட பாலர் கல்வி நிலையத்திலும் அம்மையாரின் குழந்தைக் கல்விக் கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அக்கருத்துக்களை இங்கு பரப்புவதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக விருந்த கலாநிதி வண. டி.ரி. நைல்ஸ் சிறப்பார்ந்த பங்கு வகித்தார்.

# ஜி.ஸ்ரான்லி ஹோல்

**சா**ர்ல்ஸ் டார்வினுடைய உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் குழந்தைக் கல்வி பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டோருக்குப் பெரும் உற்சாகத்தைத் தந்தன. ஐரோப்பாவில் வாழ்ந்த ஆய்வாளர்கள் குழந்தைகளின் இயற்கையான வளர்ச்சி பற்றிய ஆய்வுகளிலே சிறப்பார்ந்த கவனம் செலுத்தினர். அமெரிக்காவில் இந்த ஆய்வுகளின் செல்வாக்கு ஜி. ஸ்ரான்லி ஹோல் *(1844-1924)* அவர்களிடம் பிரதிபலித்தது. குழந்தைகள் பற்றிய கற்கையின் தந்தை என்று அவரை அமெரிக்கர்கள் குறிப்பிட லாயினர்.

மனிதரைப் பற்றி விளங்கிக்கொள்வதற்கு குழந்தை நிலையிலிருந்து அவர்களது விருத்திபற்றிய கற்கை இன்றியமையாதுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொருவரதும் விருத்தியானது எமது முன்னோர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அனுபவித்தவற்றுக்கு ஏறத்தாழச் சமமானதாயிருக்கும் என்ற ஒரு கருத்தை அவர் முன்வைத்தார். இது தொடர்பாக அவர் குழந்தைகள் தொடர்பான ஆசிரியர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். அவற்றிலிருந்து சிறார்களின் நடத்தைகள், மனப்பதிவுகள், உணர்வுகள், பிரச்சினைகள், நம்பிக்கைகள் தொடர்பான பெருந்தொகையான தகவல்களைத் திரட்டிக் கொண்டார்.

ஆரம்பத்தில் இவர் அகநோக்கல் என்ற ஆய்வுமுறையைப் பயன்படுத்தினார். அந்த ஆய்வுமுறையில் இருந்த மட்டுப்பாடுகளை அவர் பின்னர் அறிந்துகொண்டார், அதன் பயனாக அவர் திருத்தமானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான வினாக்கொத்துக்களைப் பயன்படுத்தி சிறார் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தார். இந்த முறையின் பயனாக மிகக் குறைந்தளவு காலப்பகுதியில் பெருந்தொகுதியான தகவல்களையும், தரவுகளை அவரால் திரட்ட முடிந்தது.



வளர்ந்தோர்கள் சிறுவர்களாயிருந்த பொழுது பெற்ற அனுபவங்களையும் வினாக் கொத்துக்கள் வாயிலாக அவர் திரட்டிக் கொண்டார். அவை அனைத்தையும் தொகுத்து சிறாரின் ஆசைகள், பயம், தண்டனைகள், கனவுகள், விளையாட்டுப் பொருள் விருப்புக்கள், தம்மைப்பற்றிய புலக்காட்சி, பிரார்த்தனைகள், ஒத்திசைவுகள் பற்றிய புலக்காட்சி முதலியவற்றை அறிக்கைகளாக அவர் வெளியிட்டார்.

இயன்றவரை விஞ்ஞான பூர்வமாகவும், புறவயமாகவும், சிறார் தொடர்பான ஆய்வுத்தகவல்களைப் பெறவேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. விஞ்ஞான பூர்வமற்றதும், குறைபாடுகள் கொண்டதுமான ஆய்வுக் கருவிகளை சிறார் உளவியலிலும், சிறார் பற்றிய ஆய்வுகளிலும் பயன்படுத்தலாகாது என்ற அணுகுமுறையை முன்னெடுத்தவர்கள் வரிசையில் இவர் முதன்மையாகக் கருதப்படுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சிறார் தொடர்பான ஆய்வுகளை விஞ்ஞான பூர்வமாக முன்னெடுப்பதில் இவர் மேற்கொண்ட பணிகள் பிற சிந்தனையாளர்கள் மீதும் செல்வாக்கினை ஏற்படுத்தின.

வினாக் கொத்துக்களில் இருந்து திரட்டப்பட்ட தகவல்களையும், தரவுகளையும் பகுத்து ஆராய்வதற்கு இவர் எளிமையான புள்ளிவிபர வியல் நுட்பங்களைப் பயன்படுத்தினார். இதுவும் இவரது. அணுகு முறையின் தனித்துவமாகக் கருதப்படுகின்றது.

ஸ்ரான்லி ஹோல் மேற்கொண்ட சிறார் தொடர்பான ஆய்வுகள் டார்வினுடைய கூர்ப்புக் கோட்பாட்டினைச் சிறாருடன் தொடர்புபடுத்தி மீளாய்வு செய்வதற்கும் உறுதுணையாக அமைந்தன. விலங்குகளில் இருந்து மனிதனின் எவ்வாறு படிமலர்ச்சி கொண்டான் என்பதை விளக்கும் ஒரு தொடுகோடாக (Link) குழந்தைகள் அமைகின்றார்கள் என்பது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. குழந்தைகளின் அசைவுகளுக்கும் மீன்களின் நீச்சலுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றன. குழந்தைகள் தாவுதலுக்கும் முலையூட்டிகளின் அசைவுகளுக்குமிடையே ஒற்றுமைகள் தென்படுகின்றன. குழந்தைகள் ஓடுதலுக்கும் மனிதரின் அசைவுகளுக்குமிடையே உடலியக்கம் சார்ந்த தொடர்புகள் உள்ளன.

டார்வினுடைய ஆய்வு முன்னெடுப்புக்கள் அவருக்குப் பின்னர் பல பரிமாணங்களிலே வளர்ச்சியுற்றுச் சென்றன. டார்வினுடைய ஆய்வுகளையும் முன்மொழிவுகளையும் முன் உதாரணங்களாகக் கொண்டு குழந்தை உளவியல், குழந்தைகளின் விருத்தி, உடலியக்கச் செயற்பாடுகள், மனவெழுச்சிக் கோலங்கள், சூழலுக்கு அவர்கள் இசைவாக்கம் செய்யும் முறைமை, முதலாம் துறைகளில் புறவயமான ஆய்வுகளை முன்னெடுத்த முன்னோடிகளுள் ஒருவராக இவர் விளங்குகின்றார்.

சிறார்களுக்கான நுண்மதித் தேர்வுகளை வடிவமைப்பதிலும் இவரது ஆக்கப்பணிகள் விதந்து குறிப்பிடப்படுகின்றன. ஹேலின் மாணவர்கள் இப்பணியினை முன்னெடுத்துச் சென்றார்கள். லிவிஸ் மடிசன், ரேர்மன் என்ற இவரது மாணவர் நுண்மதித் தேர்வினை ஆக்கும் பணியிலே சிறப்பார்ந்த பங்களிப்பைச் செய்துள்ளார்.



# அல்பிரெட் பீனே

**உ**ளவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு எவ்வாறு உரிய முறையில் கற்பிக்கலாம் என்பது தொடர்பான முன்மொழிவுகளை வழங்குமாறு பிரான்ஸ் நாட்டின் கல்வி மந்திரி 1904ஆம் ஆண்டு ஓர் ஆணைக்குழுவினை அமைத்தார். ஒரு சிறப்பார்ந்த பரீட்சையின் அடிப்படையிலே தான் அத்தகைய சிறுவர்களை சாதாரண வகுப்பறையிலிருந்து உள வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் கற்கும் பள்ளிக் கூடங்களுக்கு இடம்மாற்றல் வேண்டுமென அந்த ஆணைக்குழு குறிப்பிட்டது. இந்நிலையில் மாணவரது நுண்மதி எந்த அளவிலே அமைந்துள்ளது என்பதைக் கண்டறியும் தேர்வினை உருவாக்கும் பொறுப்பு அல்பிரெட் பீனே (1857-1911) யிடம் கையளிக்கப் பட்டது.

குழந்தைகளின் கல்வி, குழந்தை உளவியல் முதலியவற்றில் நுண் மதித் தேர்வுகளை ஆக்கும் முயற்சிகளின் முன்னோடியாக பீனே விளங்குகின்றார். இவரது ஆய்வுகளுக்கு தியோடர் சிம்சன் என்பாரும் உறுதுணை யாக விளங்கினார்.

பீனே தமது நுண்மதித் தேர்வினை வடிவமைப்பதற்கு முன்னர் ஆய்வு கூடங்களில் வழங்கப்பட்ட செய்முறைத் தேர்வுகளில் இருந்தே ஒருவரது உள ஆற்றல் நிச்சயிக்கப்பட்டது. பொருள்களை வகைப்படுத்து தல், வேறுபிரித்தறிதல், பொருள்களுக்கிடையேயுள்ள தூரத்தை நிச்சியித்தல், துலங்கல் வேகம் முதலியவற்றை அறிதலே ஆய்வு கூடங்களில் பெரும்பாலும் பரீட்சிக்கப்பட்டன.

ஆனால் பீனே அவர்கள் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடையதும் நடப்பியல் தழுவியதும், ஆனால் சிக்கல் பொருந்தியதுமான நுண்மதித் தேர்வினை சிறார்களுக்கென வடிவமைத்தார்.

ஐம்பது தேர்வு உருப்படிகளை அவர் முதலில் ஆக்கினார். அவற்றிலே சொல் சார்ந்த உருப்படிகளும் அமைத்தன. உடற்கூறுகளுக்குப் பெயரிடல், பொதுவான பொருள்களுக்குப் பெயரிடல், எண் மீட்டல், ஞாபகத்திலுள்ள கோலங் களை வரைதல், பொருத்தமான சொல்லை இட்டு எளிய வசனங்களை நிரப்புதல், அருவமான எண்ணக்கருக்களை விளக்குதல் முதலாம் உருப்படிகளை அவர் தமது நுண்மதித் தேர்விலே அமைத்தார். எளிதிலிருந்து கடினமானது வரை ஓர் ஒழுங்குமுறையில் அவற்றை நிரற்படுத்தி அமைத்தார்.

சிறார் கல்விக்கு அவர் வழங்கிய அடுத்த முக்கியமான பங்களிப் பாகக் கருதப்படுவது வயது அடிப்படையில் நுண்மதித் தேர்வினை ஒழுங் கமைத்தமையாகும். "கால வயது", "உளவயது" என்ற இரண்டு எண்ணக் கருக்களை அவர் தாம் அமைத்த தேர்வுகளை அடிப்படை யாகக் கொண்டு விளக்கினார். இந்நிலையில் மூன்று வகையாக சிறுவர்களின் நுண்மதியாற்றல்களை இனங்கண்டு விளக்கக் கூடிய தாகவுள்ளது.

அ) கால வயதிலும் குறைவான நுண்மதியாற்றல்களைக் கொண்ட சிறுவர்கள்.

ஆ) கால வயதோடு சமாந்தரமாகச் செல்லும் நுண்மதியாற்றல் களைக் கொண்ட சிறுவர்கள்.

இ) கால வயதிலும் கூடிய உள ஆற்றல்களைக் கொண்ட சிறுவர்கள், அதாவது இவர்களின் உளவயதானது கால வயதிலும் கூடுதலாகக் காணப்படும்.

சிறாரின் நுண்மதியாற்றில் அளவீடு தொடர்பாக பீனே மேற் கொண்ட ஆய்வுகள் பல கண்டனங்களையும் எதிர் கொண்டன. "சிறார் தொடர்பான சிறுபிள்ளைத் தனமான ஆய்வை இவர் மேற் கொண்டுள்ளார்" என்ற கண்டனமும் முன்வைக்கப்பட்டது. "நுண் மதியை எண்ணளவுகளுக்குள் சிறைப்பிடித்துக் கொண்டுவர முடி யுமா?" என்ற வினாவும் இவர் மீது தொடுக்கப்பட்டது.

சிறார் கல்விக்கும் உளவியலுக்கும் பீனே தந்த பெரும் பங்களிப்பு நுண்மதி என்ற பண்பினை எண்ணளவுக்குள் கொண்டுவந்தமை என்ற பாராட்டையும் ஒரு சாரார் அவருக்கு வழங்குகினர்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொது மக்களுக்கான கல்வி விரைந்து வளர்ச்சியடையத் தொடங்கியது. பல்வேறு வகை



யான ஆற்றல் வேறுபாடுகளைக் கொண்ட சிறுவர்களை ஒரே வகுப் பறையில் இருத்திக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் பல இடர்களை எதிர்கொண்டனர். இந் நிலையில் மாணவர்களை அவர்களின் உள ஆற்றல்களுக்கு ஏற்றவாறு குழுக்களாகப் பிரித்துக் கற்பிப்பதற்கு பீனேயின் நுண்மதித் தேர்வுகள் பயன்படுத்தப்பட்டன.

சிறுவர்களுக்குச் சீர்மியம் உரைப்பதற்கு அவர்களின் நுண்மதிக் குறைபாடுகளைக் கண்டறிதல் தேவையென உணரப்பட்டது. அந் நிலையிலும் பீனேயின் தேர்வுகள் பயன்ப்பட்டன. உளக் குறை பாட்டை ஆய்ந்தறிந்த பின்னரே கல்விசார்ந்த சீர்மியத்தைப் பொருத்தமான முறையில் வழங்க முடியும்.

உள ஆற்றல் குறைபாடுகளுக்கும், மனவெழுச்சிக் குழப்பங் களுக்கும் இணைப்புகள் காணப்பட்டமையால் பள்ளிக்கூட இசை வாக்க முறைமையை நெறிப்படுத்துவதற்கும் பீனேயின் தேர்வுகள் பயன்பட்டன.

உள ஆற்றல் மிகுந்து காணப்பட்ட சிறுவர்களும் ஒருவகையில் பள்ளிக்கூட அமைதிக்கும் பங்கம் விளைவிப்போராய்க் காணப் பட்டனர். அவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கல்வியில் முழுமையாக ஈடுபடுத் தக்கூடிய வகையில் அறைகூவற் கற்பித்தலை ஒழுங்கமைப்பதற்கும் பீனேயின் தேர்வுகள் மாணவர்களை இனங் காட்டும் சோதனைகளாக அமைந்தன.

பீனே வடிவமைத்த நுண்மதித் தேர்வுகள் பல நாடுகளில் பயன் படுத்தப்படலாயின. சிறார்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கல், சிறப் பார்ந்த சில பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்கல் முதலாம் தேர்வு களுக்குப் பல நாடுகளிலே பீனே பயன்படலானார்.

பீனேயின் தேர்வுகளை அடிப்படையாக வைத்து அமெரிக்க நாட்டு ஆய்வாளர்கள் தமது பண்பாட்டுச் சூழலுக்கேற்றவாறு நுண்மதிச் சோதனையை வடிவமைத்தனர். யாழ்ப்பாணத்துச் சூழ லில் பீனேயின் சோதனையை அடிப்படையாக வைத்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முந்நாள் அதிபர் அமரர் சிவபாத சுந்தரனார், ஆசிரியர் கலாசாலை முந்நாள் விரிவுரையாளர் கலாநிதி சிவப் பிரகாசம், புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய முந்நாள் அதிபர் இராமநாதபிள்ளை ஆகியோர் தமிழில் சில நுண்மதிச் சோதனை களை அமைத்தனர்.

## புறூனர்

**கு**ழந்தை உளவியல், குழந்தைக்கல்வி, அறிகை உளவியல் முதலாம் துறைகளில் அதீத ஈடுபாடு கொண்ட ஆய்வாளராக ஜெரோம் எஸ். புறூனர் விளங்கினார். 1915ஆம் ஆண்டு நியூயோர்க் நகரத்தில் பிறந்த புறூனர் 1941ஆம் ஆண்டில் ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் உளவியல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். ஹாவார்ட் பல்கலைக் கழகம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முதலியவற்றில் பேராசிரியராகவும், பல்கலைக்கழக அறிகைக் கற்கை மையத்தின் பணிப்பாளராகவும் அவர் பணியாற்றினார்.

"மக்களுக்கான ஒப்புதல்"(1944), "சிந்தனை பற்றிய கற்கை"(1956), "அறிதல் பற்றியது"(1962), "போதனைக்கான ஒரு கோட்பாட்டினை நோக்கி"(1966), "அறிகைச் செயல்முறை வளர்ச்சி"(1968), "கல்வியின் பொருத்தப்பாடு"(1971), "மொழியை நிகர்த்த தொடர்பாடல்" (1982) முதலாம் ஆய்வு நூல்கள் அவரால் எழுதப்பெற்றன.

குழந்தைகளின் கல்வியில், அவர்களால் திரட்டிக் கொள்ளப்படும் மொழி விருத்தியானது சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. குறியீடுகள் தொகுதியே மொழியாகின்றது. புறவுலகினை மனத்திலே பிரதிநிதித்துவம் செய்வதற்கு குறியீட்டுத் தொகுதி துணை நிற்கின்றது. சிந்தனையை இயக்குவதற்கும் அந்தக் குறியீட்டுத் தொகுதியே தளமாக அமைகின்றது.

கற்றல் மேம்பாடு தொடர்பான நான்கு அடிப்படை அமைப்புக்களை அவர் விளக்கினார். அவையாவன:

1) கற்பதற்கான உளநிலை கற்போனிடம் இருத்தல்.



2) கற்பவர் விளங்கிக் கொள்ளும் வகையில் அறிவுத் தொகுதியை அமைப்பாக்கிக் கொடுத்தல்

3) கற்பவர் ஈடுபடக்கூடிய வகையில் படிநிலை வரிசைக் கிரமப்படுத்தி அறிவை வழங்குதல்.

4) பொருத்தமான மீளவலியுறுத்தல்ளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் சிறாரின் கல்வி தொடர்பான சிறப்பார்ந்த கருத்தொன்றினை அவர் முன்மொழிந்தார். "எந்தப் பாடத்தையும், எந்தப் பிள்ளைக்கும், எத்தகைய விருத்திப் படிநிலைகளிலும் அறிவுசார் நேர்மையான அமைப்பில் கற்பிக்கலாம்" என்பது அவர் முன் மொழிந்த வலுவான ஒரு கருத்தாகும்.

சிறார்கள் உலகு பற்றிய அறிகையை மூன்று படிநிலைகளின் வழியாக வளர்த்தெடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட அறிகை விருத்திப் படிநிலைகள் வருமாறு:

1) செயல் வடிவப் படிநிலை

2) உளப்படிம வடிவப் படிநிலை

3) குறியீட்டு வடிவப் படிநிலை.

1) செயல் வடிவப் படிநிலையில் சிறார்கள் தொழிற்பாடுகளின் வழியாக மட்டும் சூழலை விளங்கிக் கொள்ளுகின்றனர். உதாரணமாக ஒரு தள்ளுவண்டியை அசைத்தும், உருட்டியும் தொழிற்படும் பொழுது உடலும் உள்ளமும் இணைந்து இயக்க நிலையில் அந்த வண்டியை விளங்கிக் கொள்ளுகின்றனர்.

2) உளப்படிம வடிவப் படிநிலையில் தொழிற்பாடுகள் மனப் படங்களாக உருவெடுக்கின்றன. தள்ளுவண்டி இல்லாத பொழுதும் அதனைப் பற்றிய படத்தை மனவடிவமாக உருவாக்கி வைத்திருக்கும் நிலையை இது குறிப்பிடுகின்றது. அதாவது பட்டறிவு, மனக்காட்சியாகப் பரிணமித்து நிற்றலை இப் படிநிலை சுட்டுகின்றது.

3) குறியீட்டு வடிவப் படிநிலையின் சிறார்கள் தாம் பெற்ற அனுபவங்களை மொழிக் குறியீடுகளாக்கும் ஆற்றலைப் பெறுகின்றனர். முன்னைய இரண்டு படிநிலைகளினதும் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக இது அமையும். உதாரணமாக இப்பருவத்தில் முன்னர் அனுபவித்த தள்ளு வண்டியை 'தள்ளுவண்டி' என்று எழுதி மொழிக் குறியீட்டு வடிவமைக்கும் ஆற்றலைக் கொண்டு விளங்குகின்றனர். "வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும், ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்" என்பதன் பொருளை விளங்கும் திறனைப் பெறுகின்றனர்.

செயல் வடிவப் படிநிலையிலிருந்து உளப்படிம வடிவப் படிநிலைக்கும் அதிலிருந்து குறியீட்டு வடிவப் படிநிலைக்கும் பொதுவாக பிள்ளைகள் தாம் உள்வாங்கும் அனுபவங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்பது புறூனரின் கருத்தாகும்.

பாலர் கல்வி ஆசிரியர்கள் மேற்கூறிய பிரதிநிதித்துவப்படுத்தற் செயற்பாட்டினை உய்த்துணர்ந்து செயற்பட முடியும். செயல் அனுபவங்கள், காட்சிசார் அனுபவங்கள் முதலியவற்றிலிருந்து பிள்ளைகளின் கற்றலை வளம்படுத்தலாம்.

பாலர்களுக்குரிய கல்வியை ஒழுங்கமைக்கும் பொழுது மேற்கூறியவை பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.

அறிவின் கட்டமைப்புப் பற்றிய மூன்று பண்புக் கூறுகளை புறூனர் வலியுறுத்தியுள்ளார். அவையாவன:

1) முறைமை(Mode)
2) சிக்கனம் (Economy)
3) வலு (Power)

1) முறைமை என்பது அறிவைப் பிரதிமை செய்யும் செயற்பாடாகும். அதாவது, காட்சிவடிவில், படிமவடிவில், குறியீட்டு வடிவில் அறிவு பிரதிமை செய்யப்படுகின்றது.
2) பெருந்தொகுதியான அறிவைச் சிக்கனப்படுத்தி, கருச்சுருக்கமாக்கி மூளையிலே பதித்துவைத்தல் சிக்கனம் எனப்படும்.



3) அறிவின் அமைப்பிலிருந்து ஆற்றல்மிக்க கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்துதல் வலு எனப்படும்.

பிள்ளைகளுக்கு பொருத்தமான வகையில் கற்றல் பணிகள் திட்டமிட்டு அமைக்கப்படுதல் வேண்டுமென புறூனர் வலியுறுத்தினார். புலக் காட்சியாக்கத்தில் பிள்ளைகளின் விழுமியங்களும் அவர்களுக்குரிய பெறுமானங்களும் (Values) அதிக முக்கியத்துவம் பெறுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பகுதி III

## தமிழ் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகள்

# பாரதியார்

**த**மிழகத்திற் செயற்பட்டுக்கொண்டிருந்த ஆங்கிலக்கல்வி முறையும் புதுச்சேரியில் இயங்கிக்கொண்டிருந்த பிரெஞ்சுக் கல்வி முறையும், சிறார் தொடர்பான அணுகு முறைகளில் புதிய புலக் காட்சிகளை ஏற்படுத்தின. சிறார் அனைவருக்கும் கல்வி, பெண் சிறார்களுக்கும் கல்வி, சிறார்க்குரிய கற்பித்தல் உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், இலக்கிய ஆக்கம் முதலாம் துறைகளில் மேலெழுந்த அபிவிருத்திகளை பாரதியார், பாரதிதாசன், தேசிகவிநாயகம் முதலானவர்களின் ஆக்கங்களிலே காணமுடியும்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியக் கல்வி முறையிலே நன்கு இனங்காணக் கூடியதான இருமைத் தன்மைகள் காணப்பட்டன. ஒருபுறம் வளமான கட்டுமானங்களுடன் கூடிய ஆங்கிலக்கல்வி ஒழுங்கமைப்பு, மறுபுறம் நலிவுக்கு உள்ளாக்கப்பட்ட சுதேசக் கல்வி முறை. இந்த முரண்பாடுகளை விளங்கியும் உணர்ந்தும் பாரதியாரின் சிந்தனைகள், சிறப்பாக சிறார் கல்விச் சிந்தனைகள் முகிழ்த்தெழுந்தன.

இந்தியாவெங்கிலும் பொதுமக்களின் கல்வி பங்கு பற்றல் விசையடைந்துவரும் காலகட்டத்தில் தமிழகத்து மக்களின் கல்விப் பங்கு பற்றல் பின்னடைந்த நிலையில் இருப்பதை 'விதி' என்ற தமது கட்டுரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டினார். கல்வி பரவலும், பங்கு பற்றலும், சிறார் கல்வியிலிருந்தே கால்கோள் கொள்ளல் வேண்டுமென்று அவர் கருதினார். தாய் மொழியை ஊடகமாகக் கொண்ட கல்வியே பயன்மிக்க கல்வியாகவும், வினைத்திறன் கொண்ட கல்வியாகவும். சிறார்களிடத்தே கூடிய விளக்கத்தை ஏற்படுத்தும் கல்வியாகவும் அமையுமென்பது அவரது துணிபு. அத்துடன் சிறார்க்கான கல்வி, கட்டணம் எதுவுமின்றி இலவசமாகத் தரப்படல் வேண்டுமென்ற கருத்தையும் அவர் முன்வைத்தார்.

ஆங்கிலக்கல்வி முறைமை,கற்பவர் அனைவரையும் அந்நிய மயப்படுத்திக் கொண்டிருந்த அவலங்களையும் அறிந்திருந்தார். "ஆங்கிலம் ஒன்றையே கற்றார், அதற்கு ஆக்கையோடு ஆவியும் விற்றார், தாங்களும் அந்நியர் ஆனார்" என்று துணிந்து எழுதினார்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏழ்மைக்கும் கல்விக்குமிடை யேயிருந்து இடைவெளியைத் தமது பட்டறிவு வாயிலாக அறிந்து கொண்ட பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்".

சிறார்கள் வீரமும் உறுதியும் கொண்டவர்களாக மலர்ச்சி கொள் ளல் வேண்டும் என்பது பாரதியாரின் குழந்தைக் கல்விச் சிந்தனை களுள் மேலோங்கிய வீச்சாக அமைந்தது. பின்வரும் அடிகளில் அந்த விசைகளைக் காணலாம்.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா".

"அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்".

"பாதகம் செய்பவரைக் கண்டால்- நீ
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

சிறுவர்களது ஆளுமையைத் துலங்கவிடாது தடுத்தும், அவர் களால் எதுவும் செய்யமுடியாது என்று பலவீனப்படுத்தியும் அவர் களின் புத்தாக்கத் திறன்களை முறியடித்தும் வந்த கல்விச் சூழலுக்கு எதிரான கிளார்ச்சியாக பாரதியாரின் கல்விக் கருத்துக்கள் எழுந்தன. பிரெஞ்சுப் புரட்சி, சோவியத் புரட்சி முதலியவை பற்றிய இலக்கியங் களை அறிந்தமையால் சிறார் கல்வி தொடர்பான மரபுநிலைக்கு மாறுபட்ட கருத்துக்கள் பாரதியாரிடத்து அரும்பிநின்றன.



குழந்தைகளைத் தெய்வ வடிவினராகக் காணுதல் பாரதியாரது கவிதைகளிலே பரவலாகக் காணப்படும் ஒரு பண்பாகும். பராசக் தியை அவர் குழந்தையாகப் பாவனைசெய்து, தெய்வம் - குழந்தை அன்பு செல்வம் முதலாம் பரிமாணங்களை ஒன்றிணைத்துப் பாடி னார்.

"அன்பு தருவதிலே-உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?
மார்பில் அணிவதற்கே- உன்னைப்போல்
வைர மணிகள் உண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே-உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டா?"

என்ற பாடல் மேற்கூறிய கருத்தை மீள வலியுறுத்தி நிற்கின்றது.

பாரதியாரது குழந்தைக் கல்விச் சிந்தனைகள் பாப்பாப் பாட்டில் உரத்து வெளிப்படுகின்றன.

குழந்தைகளுக்கான கலைத்திட்டத்தில் கற்றல் அழகியற் செயற்பாடுகள்-விளையாட்டு-ஆகியவை ஒன்றிணைந்திருத்தலின் சிறப்பை அவர் பின்வருமாறு விளக்கினார்:

"காலை எழுந்தவுடன் படிப்பு
பின்னர் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு".

பாரதியாருடைய குழந்தைக் கல்விச் சிந்தனைகளுள் முகிழ்த் தெழும் பிறிதொரு விசையாகக் காணப்படுவது, அனைத்து உயிர் களிடத்தும் அன்பு காட்டும் நெறியாகும். பாலைப் பொழியும் பசு, வாலைக் குழைக்கும் நாய், வண்டியிழுக்கும் குதிரை, வயலில் உழும் மாடு, அண்டிப்பிழைக்கும் ஆடு என்றவாறு அனைத்துப் பிராணி களிடத்தும் அன்பு காட்டல் என்பது கல்விச் செயல்முறையின் வாயிலாக மலர்விக்கப்படல் வேண்டு மென்பதை அவர் வலியுறுத்து கின்றார்.

அறக்கல்வி, ஒழுக்கக்கல்வி முதலியனவும் பாரதியாரது சிறார் கல்விச் சிந்தனைகளிலே பரக்கக் காணப்படுகின்றன. 'பொய் சொல் லக் கூடாது' என்பது பொதுவாக எல்லா அறங்களிலும் வலியுறுத்தப்

பட்டு வந்தாலும், பாரதியார் அதனையும் வலியுறுத்தி அதற்கு மேலாகவும் சென்று "புறம் சொல்லலாகாது" என்ற கருத்தைச் சிறார்க்கு வழங்கியுள்ளார்.

பாரதி வாழ்ந்த காலத்து அரசியற் சூழல் கல்வி வாயிலான நாட்டுப் பற்றை வளர்ப்பதற்குத் தூண்டுதலளித்து. குழந்தைகளிடத்து மொழிப் பற்றையும், நாட்டுப்பற்றையும் நேரடியாக உணர்த்திக் கற்பித்தல் வேண்டு மென்று அவர் விரும்பினார்.

"தமிழ்த்திரு நாடுதனைப்பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிட்டி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா – நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா".

நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் வளர்த்தல் தொடர்பான இரண்டு விதமான கருத்துக்கள் கல்வியியலாளரிடையே காணப்படுகின்றன. ஒருசாரார் நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் நேரடியாகக் கற்பிக்காது, அறிவுத்துறைகளோடும் அழகியற் பாடங்களோடும் ஒன்றிணைத்துக் கற்பித்தல் வேண்டுமென்று கருதுகின்றனர். இன்னொருசாரார் அவற்றை நேரடியாகவே கற்பிக்க வேண்டுமென்று கருதுகின்றனர். இந்த நேரடி முறைமையே பாரதியாரால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. நாட்டுப் பற்றைப் போலவே சாதி வேறுபாடுகளுக்கு எதிரான மனோபாவங்களை வளர்க்கும் கற்பித்தலையும் நேரடியான முறையில் அவர் முன்வைக்கிறார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

என்ற பாடல் மேற்கூறிய கருத்தைத் துல்லியமாக விளக்கிநிற்கின்றது.

சிறார் கல்வியோடு வளர்ந்தோர் கல்வி தொடர்புபட்டு நிற்றலும் கல்வி விரிவாக்கம் அனைத்து மக்களையும் தழுவிய வெகுஜனப் படுத்தலாக (Massification) இருத்தல் வேண்டும் என்பதும் பாரதியின் வேட்கைகளாக அமைந்தன.

"வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி



நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி
தேடு கல்வியிலாத தோர் ஊரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்......

என்ற பாடல் மேற்கூறிய கருத்தை மீள வலியுறுத்தி நிற்கின்றது.

சிறார் கல்வியூடாக வளர்ந்தோர் கல்விக்கு அடித்தளமிடுதலுடன் மட்டும் பாரதியாரது வேட்கை நின்றுவிடவில்லை. கல்விவாயிலான சமூக அசைவியக்கம் (Social Mobitity) பற்றி தொலைநோக்கும் அவரிடத்துக் காணப்பட்டது.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்குவாழு மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."

கல்விவாயிலான சமூக அசைவியக்கம், மனிதவள மேம்பாடு, தேசிய செல்வத்தின் வளர்ச்சி முதலியவை பாரதியாரால் முன்மொழியப்பட்டுள்ளன.

# தேசிக விநாயகம்பிள்ளை

**ஒ**ரு கவிஞர் என்ற நிலையிலும் ஓர் ஆசிரியர் என்ற பாத்திரத்தி லும் நின்று தமிழ் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகளை முன் மொழிந்த வர்களுள் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை (1876-1954) அவர்கள் தனித்துவமானவர். நாஞ்சில் நாட்டுப் பகுதியில் வாழ்ந்து வந்தமை யால், அவர் வாழ்ந்த காலப்பகுதியின் மலையாள நாட்டுக் கல்விச் செல்வாக்கும் அவரிடத்தே சுவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கவிமணிக்குக் குழந்தைகள் இல்லை. ஆயினும் குழந்தைகள் பால் அவருக்கு அதீத அன்பிருந்தது. குழந்தைகளின் உளஇயல்பை அறிந்து கொள்வதிலும் குழந்தைகளிடம் பழகுவதிலும் அவருக்கு அதிக ஈடுபாடிருந்தது. ஆத்திசூடி முதலிய இலக்கியங்களைக் குழந்தைகள் படித்துப் புரிந்துகொள்வது கடினம் என்று புலவர் கருதி னார். "தமிழில் ஏதோ சில பாடல்கள் சிறுவர்களுக்காகப் பாடியிருப்ப தாகவும், அறஞ்செய்ய விரும்பு ஆறுவது சினம் முதலிய குழந்தை களுக்கு புரியாதென்றும், குழந்தை கட்குப் புரியும்படி பாடல்கள் இயற்றப்படல் வேண்டும்" என்று கவிமணி குறிப்பிட்டுள்ளார்.

இசை கலந்த பாடல்களால் குழந்தைகள் பெரிதும் கவரப்படு வார்கள் என்று கருதிய கவிமணி "ஒருமுறை ஒரு குறிப்பிட்ட இசை யொலியில் ஈடுபட்டு இன்பமுறும் குழந்தையின் உள்ளம் மீண்டும் மீண்டும் அந்த இசையினை நாடி நாடிச் செல்லும்" என்று கூறினார். சிந்து மெட்டினால் சிறார்கள் கவர்ந்திழுக்கப்படுவார்கள் என்பதை யறிந்த கவிஞர் சிறுவர்க்கான கவிதைகளில் சிந்து மெட்டினை நன்கு பயன்படுத்தினார். வகை மாதிரியாக பின்வரும் பாடலைக் குறிப்பிட லாம்:



" பொழுது விடிந்தது, பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலிவதைப் பாராய்
பொன்னே! நீ எழுந்தோடி வாராய்!

காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் கானினைப் பாராய்
கண்ணே! நீ எழுந்தோடி வாராய்!"

பறவைகள் மற்றும் விலங்குகளைக் குழந்தைகள் விளித்துப் பேசும் பொழுதும், பாடும்பொழுதும் குழந்தைகளின் கற்றல் ஈடுபாடு தீவிரமடையும் என்பது புலவரின் கருத்தாக அமைந்தது. கவிமணி யின் பின்வரும் பாடலை இச்சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டலாம் :

"காக்காய்! காக்காய்! பறந்துவா,
கண்ணுக்கு மை கொண்டுவா;
கோழி! கோழி! கூவிவா;
குழந்தைக்குப் பூக்கொண்டுவா!"

பாலர் கல்வியில் 'பொம்மைக் கலைத்திட்டம்' எத்துணை ஆற்றல் மிக்கது என்பதையும் புலவர் வற்புறுத்தினார். "பல பொம்மை களையும் ஓரிடத்தில் வரிசையாக வைத்துக்கொண்டு ஆடுவதில் அளவிலா இன்பம் குழந்தைகட்கு உண்டு. இந்தப் பாவை விளை யாட்டிலே ஒரு திருமணத்தையே நடத்தி முடிப்பதாகக் காட்டு கின்றார் கவிமணி" (சு. பாலச்சந்திரன் 1978). "திருமணத்துக்கு உரிய ஏற்பாடுகளைச் சிலந்தியும், நண்டும், கறையானும் செய்துவரு கின்றன. காக்கை, நத்தை, கோழியும் பங்கு கொள்கின்றன. குயில்கள் பண்ணொடு பாட, மயில்கள் ஆடுகின்றன. வண்டினங்களோ வந்த வரை வரவேற்று விருந்து பேணுகின்றன. வீட்டெலி, காட்டெலி, வெள்ளெலி, முள்ளெலி, குண்டெலி, சுண் டெலி எல்லாம் வந்தன. விருந்து ஏழுநாள் நடைபெற்றது. மணமக்களை வாழ்க வாழ்கவே என்றும் மங்கலவொலி எங்கும் முழங்கியது" என்று கவிஞர் பொம்மைகளின் ஊடாட்டம் வாயிலான கதைச் சித்திரிப்பினைக் காட்டுதல் குறிப்பிடத்தக்கது.

கற்பனைப் பரிமாணங்களை வளர்ப்பதாய் சிறார் கல்விச் செயற் பாடுகள் சிறக்கவேண்டும் என்பதும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் கருத்தூன்றலாக அமைந்தது.

அவர் சிறார்க்காக முன்வைத்த கற்பனைகள் சிலவற்றைப் பின் வருமாறு தொகுத்துத் தரலாம்.

"கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்:
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இயங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்"

"பூமகளின் புன்னகைபோல்
பூத்திடுவோமே-கம்பன்
பாமணக்குந் தமிழினைப்போல்
பரிமளிப் போமே".

தாம் காணும் காட்சிகளை எளிமையான முறையில் விபரித்துக் கூறும் திறன்களை வளர்த்தல் என்ற கலைத்திட்டச் செயற்பாடு சிறார் கல்வியிலே முன்னெடுக்கப்படல் வேண்டும் என்ற கருத்தும் கவிஞரிடத்து நிலைபேறு கொண்டிருந்தது. தோட்டத்தில் நிகழும் காட்சியைப் பின்வரும் காட்டுரு வினால் கவிஞர் விளக்குகின்றார்.

"தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி!
அம்மா என்குது
வெள்ளைப்பசு- உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப் பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு-மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி".



கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர் தமிழாசிரியராகக் கடமை யாற்றி வரையறுக்கப்பட்ட இலக்கண வழிப்பட்ட தமிழைப் பள்ளிக் கூடத்திலே கற்பித்தாலும், பேச்சுத்தமிழின் இயக்கப் பண்பை நன்கு அறிந்திருந்தார். சிறாரின் அறிகையை வளர்ப்பதில் பேச்சு மொழி வலிமைமிக்க ஊடகமாகும் என்பதை அறிந்த அவர் சிறார் கவிதைகளிலும், உரையாடல்களிலும், கட்டுரைகளிலும், பேச்சு மொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்தினார். கேட்டல், பேசுதல், எழுதுதல் என்ற படி முறைகளில் சிறார்கல்வி நிகழவேண்டும் என்பது அவரது துணிபு. அக்காலத் தமிழ்க் கல்வியில் கேட்டலுக்கும் பேசுதலுக்கும் முக்கியத்துவம் கொடுக்காது எழுதுதலுக்கும் வாசித்த லுக்குமே கற்பித்தலில் முதன்மை நிலைகள் வழங்கப்பட்டன. இந்தப் பாரம்பரிய அணுகுமுறையினை மாற்றியமைப்பதற்குக் கவிமணிக் குத் கற்பித்தலிற் கிடைத்த பட்டறிவே துணை செய்திருத்தல் வேண்டு மென ஊகிக்க இடமுண்டு.

# அழ. வள்ளியப்பா

குழந்தை இலக்கியங்கள் வாயிலாகச் சிறார்க்குரிய கல்விக் கருத்துக்களைத் தமிழர் கல்வி மரபில் முன்மொழிந்தவர்களுள் அழ. வள்ளியப்பா விதந்து குறிப்பிடத்தக்கவர். 1922ஆம் ஆண்டில் இராயவரத்தில் பிறந்த வள்ளியப்பா "காந்தி பாடசாலையில்" தமது தொடக்கக் கல்வியைக் கற்றவேளை இந்திய விடுதலை இயக்கத்துக் குரிய கல்விச் சிந்தனைகளால் ஊட்டம் பெற்றார். தேசப்பற்று, மொழிப்பற்று, நல்லொழுக்கம், இயற்கை நயப்பு, முதலாம் சிந்தனை களை குழந்தைகளின் உளக்கோலங்களுக்கு ஏற்றவாறு எளிமையாகக் கற்பிக்கவேண்டுமென்பது அழ. வள்ளியப்பாவின் கருத்தாக அமைந் தது.

'ஈசாப் கதைப் பாடல்கள்'. 'ரோஜாச் செடி','உமாவின் பூனைக் குட்டி', 'அம்மாவும் அத்தையும்" 'மணிக்குமணி', 'மலரும் உள்ளம்' , 'கதை சொன்னவர் கதை' , மூன்று பரிசுகள்' , எங்கள் கதையைக் கேளுங்கள்' , நான்கு நண்பர்கள்' , 'பர்மாரமணி, 'எங்கள் பாட்டி' , 'மிருகங்களுடன் மூன்று மணி', 'நல்ல நண்பர்கள்', 'பாட்டிலே காந்தி கதை' , 'குதிரைச் சவாரி' , 'நேரு தந்த பொம்மை' , 'நீலாமாலா' , 'பாடிப் பணிவோம்' , 'வாழ்க்கை விநோதம்' , 'சின்னஞ்சிறு வயதில்' ,'பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள்' முதலாம் பல நூல்களை வள்ளியப்பா எழுதினார்.

சிறார்கல்வி தொடர்பான கோட்பாடுகளை அவர் நேரடியாகக் கூறாவிடினும், மேற்கூறிய நூல்களில் சிறுவர்க்கான கல்விச் சிந்தனை கள் பல இழையோடி நிற்பதைக் காணமுடியும். இலக்கியத்துறையில் தி. ஜ. ரங்கநாதன் (தி. ஜ. ர.) அவர்களிடம் பெற்ற அனுபவமும் பேராசிரியர் ஐயன் பெருமாள் கோனாரின் நட்பும், அவரிடத்து



மேற்கொள்ளப்பெற்ற கல்வி தொடர்பான கலந்துரையாடல்களும் வள்ளியப்பா அவர்களின் சிறார் கல்விச் சிந்தனைகளை வளமூட்டின.

சிறார் கல்வியில் சுற்றப்புறச் சூழலின் அறிவும், சுற்றுப்புறச் சூழலு டன் மேற்கொள்ளப்படும் இடை வினைகளும் சிறப்பார்ந்த இடங்களைப் பெறும் என்று கருதிய இவர் வீட்டிலுள்ள பறவைகள், விலங்குகள், விளையாட்டுப் பொருள்கள், தெய்வங்கள், பெற்றோர், உறவினர், தின்பண்டங்கள் முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்ட பல குழந்தைப் பாடல்களை எழுதினார்.

கல்வியில் இயற்பண்பு நெறி (Naturalism) கவியரசர் தாகூரால் முனனெடுக்கப்பட்ட இந்தியச் சூழலும் அழ. வள்ளியப்பா மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் போலத் தெரிகின்றது. இயற் கையை உற்று நோக்கல், இயற்கையை அனுபவித்தல், இயற்கை யோடு இணைந்து வாழ்தல் முதலாம் உள்ளடக்கங்களை இவர் தமது குழந்தைக் கவிதைகளிலே முன்வைத்தார். பூஞ்சோலை, மலர், மல்லிகை, வண்டு, வெண் ணிலா, கடல், மழை, காற்று முதலான வற்றை உட்பொதிந்து பல குழந்தைக் கவிதைகளை எழுதினார்.

சிறார்க்கான அறிவூட்டடல், நகைச்சுவையுடன் இணைந்த மன வெழுச்சி சார்ந்த கற்பித்தலாக (Emotional Learning) இருத்தல் வேண் டும் என்ற கருத்தும் இவரிடத்து இழையோடியிருந்தது. குறும்புகள் பிறர் மனத்தைப் புண்படுத்தலாகாது என்ற உறுதியான கருத்தையும் இவர் கொண்டிருந்தார். பறவைகள், விலங்குகள், பொருள்கள் சார்ந்த நகைச்சுவையிலும், குறும்புகளிலும் இவரது ஈடுபாடு கூடுத லாக இருந்தது. வகை மாதிரிக்கு ஒரு பாடல் வருமாறு:

"ஒட்டைச் சிவிங்கி கழுத்து மிகவும்
நெட்டையானதேன்? - அது
எட்டி எட்டி இலையுந் தழையும்
பறித்துத் தின்றதால்"

என்றவாறு வினாவிடை வாயிலாக நகைச்சுவையைத் தூண்டி குழந்தைகளின் அறிகையை மேம்படுத்தும் நடவடிக்கையைப் புலவர் மேற்கொண்டிருந்தார்.

நகைச்சுவையை வெளிப்படுத்தும் பிறிதொரு கவிதை வருமாறு:

"உருண்டு விழுந்தது நாற்காலி
ஒடிந்தன மூன்று கால்களுமே!

மிச்சம் ஒற்றைக் காலுடனே
முடமாய்க் கிடந்தது நாற்காலி".

சிறார்க்கான கல்வியிற் செவிப்புலன் பயிற்சியின் முக்கியத்துவமும் இவரால் பல சந்தர்ப்பங்களிலே வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்படுகின்றன.

"வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு".

"டிங் டாங் டிங்டிங்
டிங் டாங் டிங்டிங்
கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள்".

குழந்தைகளுக்கான கற்பித்தலில் "இசையும் அசைவும்" என்ற "உடல்-உள இயக்க" தேவைப்பாட்டினையும் கவிஞர் முன்மொழிந்தார். இசையும் அசைவும் தழுவிய நடித்துக் காட்டும் பாடல்கள் பலவற்றைக் கவிஞர் புனைந்து தந்துள்ளார். "பாப்பா அழாதே", "நாய்க்குட்டி", "சிட்டுக்குருவி", "சின்னப்பொம்மை" முதலியவை இப்பிரிவிற் குறிப்பிடத்தக்கவை.

"அனுபவங்ளில் இருந்து அனுபவங்களை நோக்கி" சிறார்க்குரிய கல்வி நகர்ந்து செல்லல் வேண்டும் என்ற கருத்தும் கவிஞரால் உள்வாங்கப்பட்டுள்ளது. மிக எளிமையான அனுபவக் கட்டமைப்பிலிருந்து இவரது குழந்தைக் கவிதைகள் முகிழ்த்தெழுகின்றன. வகை மாதிரியாக பின்வரும் எடுத்துக்காட்டைக் குறிப்பிடலாம்.

"அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா
கொய்யா மரம் ஏறிவா
குண்டுப் பழம் கொண்டுவா".

சிறார்க்கு, நாட்டுப்பற்றுடன் கூடிய தாய்மொழி வாயிலான கல்வி இன்றியமையாதது என்பது கவிஞரால் வலியுறுத்தப்



பட்டுள்ளது. சமூக உணர்வுடன் கூடிய கல்வியை வலியுறுத்திய இவர் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அவலங்களையும் கற்பித்தல் வேண்டும் என்பதையும் உணர்த்தியுள்ளார்.

"மாடு இல்லை குதிரை இல்லை
மனிதன் வண்டி இழுக்கிறான்
பாடுபட்டு உடல் வளர்க்கப்
பாவம், இதுபோல் செய்கிறான்"

வண்டியிழுக்கும் மனிதர்மீது இப்பாடல் இரக்கத்தை ஏற்படுத்துகிறது.

சிறார்க்குரிய இலக்கிய ஆக்கங்களை வளம்படுத்தும் நடவடிக்கைகளிலும் அழ. வள்ளியப்பா அவர்கள் பரந்த பங்களிப்பினை தமிழ் இலக்கியப் பரப்பிலே மேற்கொண்டுள்ளார்.

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

**த**மிழர் மரபில், சிறப்பாக ஈழத்துச் சிறார் கல்வி மரபில் பல்வேறு கல்வியியற் சிந்தனைகளைத் தமது கவிதைகள் வாயிலாக உதிர்த்தவர் களுள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தனித்துவமாகக் குறிப்பிடத் தக்கவர். இலங்கையில் இலவசக்கல்வி விரிவாக்கம் பெற்ற காலகட் டத்தில் சிறாரை நடுநாயகப்படுத்தும் கல்வி நோக்கங்கள் முனைப்புப் பெற்ற பின்புலத்தில் இவரது பங்களிப்பை நோக்கவேண்டியுள்ளது.

புலவரது சமகாலத்தில் வாழ்ந்த கல்வியதிகாரி திரு. எஸ். அருள் நந்தியவர்கள் குழந்தை உளவியலறிவு வாய்க்கப்பெற்றவராயிருந்த துடன், பருத்தித்துறை தும்பளைக் கிராமத்தில் தாம் வாழ்ந்த நெய்தலங்கானல் இல்லத்துக்கு யாழ்ப்பாணத்துப் புலவர்களை அழைத்து, சிறார்க்கான கவிதைகளை இயற்றுமாறு வேண்டினார். குழந்தைக் கல்விச் சிந்தனைகள் பரவலடைவதற்கு அருள்நந்தியவர்க ளது பங்களிப்புக்களும், யாழ்ப் பாணத்தில் இயங்கிவந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் விசைகளாக அமைந்தன. ஏற்கனவே சிறுவர்க்கான பாட நூலாக்கத்திலும், கல்வியிலும் ஆறுமுகநாவலரது செல்வாக்கு இங்கு ஊடுருவியிருந்தது. கிறிஸ்தவ திருச்சபையினரும் சிறுவர்க்கான கல்விப் பரவலிலும், மேம்பாட்டிலும் ஒன்றிணைந்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இவற்றின் பின்னணி யிலே கற்கச் செய்தல் முதலாம் கற்பித்தல் உபாயங்களைப் பயன் படுத்தும் ஒவ்வொரு மாணவரிடத்தும் வினையாற்றல் மிக்க கற்பித் தலை மேற்கொள்ள முடியும் என்று புலவர் கருதினார். உரையாடல் வாயிலாகக் கற்பித்தலை 'சல்லாப முறை' என்று புலவர் பெயரிட்டு அழைத்தார்.

சிறார்க்கான கற்பித்தலில் 'அன்பு' என்ற விழுமியம் ஊடுருவி யிருத்தல் வேண்டும் என புலவர் வலியுறுத்தினார். தாம் கற்பித்த பாட



சாலையை கலையரசியாக உருவகம் செய்து 'கலையரசி ஐம்பருவம்' என்ற நடிப்புப் பாடலை உருவாக்கிய புலவர் அவர்கள் அம்புலிப் பருவத்தில் அன்பின் ஆழத்தை வலியுறுத்துகின்றார்.

'அன்னைமார்கள் தந்தைமார்கள் வெண்ணிலாவே-இங்கு
அன்புடையோர் வந்துவிட்டார் வெண்ணிலாவே"

என்று அந்த அடிகள் வருகின்றன. "ஆடு கதறியது" என்ற பாடலில் ஆடு என்பதைக் குறியீடாக வைத்து அன்பின் வடிவங் களை விளக்குகின்றார். நட்பின் பெருமை, ஈதல், அறம், கொல்லாமை முதலாம் விழுமியங்கள் அன்புடன் தொடர்புபட்டு நிற்றல் புலவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சோமசுந்தரப்புலவர் அவர்களது சிறார் கல்விச் சிந்தனைகள் இயற்பண்புநெறி (Naturalism) தழுவி மலர்ச்சியடையத்தொடங்கின.

சிறார்க்கான கற்பித்தலில் குழவிப் பாடல்களின் முக்கியத்து வம் சோமசுந்தரப் புலவரினால் வலியுறுத்தப்பட்டது. தமிழிலே காணப்படும் இனிய ஓசையின் அமைதி 'வண்ணம்' என்று அழைக் கப்படும். செவிக்கு இன்பம் தரும் வண்ணங்களைப் பயன்படுத்தி சிறார்க்கு முறைசார்ந்த வகையிலும் முறைசாரா வகையிலும் கற்பித் தல் வேண்டுமென்பது புலவரது கருத்தாக அமைந்தது. வண்ணங் களைக் கேட்கும்பொழுது செவிப்புலன் தழுவிய அறிகையும் எண்ணக்கருவாக்கமும் வளர்ச்சி யடைந்து மேம்பாடு கொள்ளும்.

புலவர் அவர்கள் வட்டுக்கிழக்கு சைவாங்கில வித்தியாசாலை யில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக இருந்து கற்பித்த வர். தமது அனுபவங்களை அடியொற்றிச் சிறுவர்களை முத்திறத் தினராக வகைப்படுத்தினார். அந்த வகைப்பாடு வருமாறு:

1) ஆற்றல்மிகு சிறார்
2) சராசரி நிலைச் சிறார்
3) மெதுவாகக் கற்கும் சிறார்.

மேற்கூறிய மூன்று திறத்தாரும் நிறைந்த பயனைப் பெறுமாறு கல்வி ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென்பது புலவரின் கருத்தாக அமைந்தது.

பாத்திரமேற்று நடித்தல் (Role play), உரையாடல் வாயிலாக தாமே ஈடுபாடு கொண்டு மாணவரைத் தழுவியதாகவும் அமைந்தன.

அவர் எழுதிய கலையரசி ஐம்பருவக் காப்புப் பருவத்தில் வேப்பிலைக் காப்புப் பாடியமை அவர் வரித்துக் கொண்ட இயற்பண்பு நெறி யினை ஒருவகையிலே சுட்டிக்காட்டுகின்றது.

"காற்றுடனே தோற்றுபிணி
காலநெடுங் கோளரிட்டம்
வேற்று விடங்கெடுக்கும்
வேப்பிலைதான் காத்தருள்க"

என்றவாறு வேப்பிலைக் காப்பைப் புலவர் பாடியுள்ளார். மேலும் புழுக்கொடியலைப் பற்றிய பாடும் பொழுது,

"வண்ணப் பனங்கிழங்கதுதான்-வேறு
மருந்துமா மென்றுமுன் சொல்லிவைத்தாரே"

என்றவாறு புலவர் இயற்கை உணவுகள், இயற்கை வைத்திய முறை கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சிறார்க்கான கற்பித்தலில் நகைச்சுவையின் முக்கியத்துவமும் புலவரால் வற்புறுத்தப்பட்டுள்ளது. நகைச்சுவை வாயிலாக உடல் உளச் செயற்பாடுகளை எழுச்சிபெறச்செய்து ஆற்றல்மிக்க கற்பித் தலை முன்னெடுக்கலாம் என்று புலவர் கருதினார். இதனை அடி யொற்றியே 'கத்தரி வெருளி', 'தாடியறுந்த வேடன்' முதலாம் சித்திரங் களை அவர் பாவடிவில் அமைத்தார்.

சிறார் கல்வியில் குழுநிலைக் கற்பித்தல், குழுச்செயற்பாடு முதலி யனவும் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதைப் புலவர் தமது குழந்தைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். குழுச் செயற்பாடு புலவரது கண்ணோட்டத்திலே 'தோழமைச் செய்பாடாக' வலியுறுத்தப்பட்டது. ஆடிப்பிறப்புப் பாடலில் தோழமைச் செயற் பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

கவிஞர் வாழ்ந்த காலம் கல்வி வாயிலான சமூக அசைவியக்கம் யாழ்ப்பாணத்தில் விசைகொண்டு செயற்பட்டுக்கொண்டிருந்தது. கல்வி வாயிலாகத் தொழில் வாய்ப்புக்களையும், சமூக உயர்நிலையை யும் எட்டக் கூடியதாக இருந்தது. அந்நிலையில் கல்வி பற்றிய



எண்ணக் கருவையும் சிறாருக்கு வழங்கவேண்டிய தேவை கவிஞ ருக்கு இருந்தது. ஏற்கனவே தமிழர்களுடைய பண்பாட்டிற் கல்வி யின் முக்கியத்துவம் வலியுறுத்தப் பட்டிருந்தாலும், இருமொழிக் கல்வியின் சிறப்பு புலவரால் விதந்து கூறப்பட்டுள்ளது.

"சைவந்தழைக்கத் தமிழாங்கிலம் வளர
பல்லுயிர்க்குந் தாயாய்ப் படைத்த
பசுங்கொடியே-ஆராரோ ஆரிவரோ"

என்று புலவர் தமது கலையரசி ஐம்பருவத்திலே குறிப்பிட் டுள்ளார்.

# சிறாரைக் கேடுறுத்தல் தொடர்பான சமூக உளவியற் காட்டுருக்களின் மதிப்பீடு

**சி**றுவர் துஷ்பிரயோகம் அல்லது சிறாரைக் கேடுறுத்தல் (Child Abuse) என்பது நவீன கட்டற்ற பொருளாதார செயல்முறைகளாலும் தீவிர சுரண்டற் கோலங்களாலும் கூர்ப்படைந்துவரும் ஒரு சமூக உளவி யற் பிரச்சினையாக மேற்கிளம்பியுள்ளது. சிறாரைப் பாதுகாப்பதற்குரிய சட்டங்கள் பல இயற்றப்பட்டாலும் நிறுவன ஒழுங்கமைப்புக்கள் அவ்வப்போது உருவாக்கப்பட்டாலும் கேடுறுத்தல் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமுள்ளது. (Fontona,*1973*, p.*223)* அத்துடன் மூன்று வயதுக்குக் குறைந்த சிறாரைக் கேடுறுத்தல் மேலும் மிகவும் துன்பகரமாகவுள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். (Terr, *1970*,p.*665)* திட்ட மிட்ட வகையில் கேடுறுத்தல் ஒருபுறம் நிகழ, பெற்றோர் பாதுகாவலரின் அறியாமையாலும், உடல் உள்ள மனவெழுச்சிக் கேடுறுத்தல்களுக்கு சிறார் உள்ளாக்கப்படுகின்றனர். சிறார்களிடத்துக் கல்வியில் பின்னடைவு ஏற்படுவதற்கும் ஆளமைச் சிதைவு ஏற்படுவதற்கும், உளநோய்கள் தோன்று வதற்கும் கேடுறுத்தல் அடிப்படைக் காரணியாகின்றது.

சிறாரைக் கேடுறுத்தல் பின்வருமாறு விளக்கிக் கூறப்படுகின்றது:

1. உடல் சார்ந்த கேடுறுத்தல்.
2. உளம் சார்ந்த கேடுறுத்தல்.
3. மனவெழுச்சி சார்ந்த கேடுறுத்தல்
4. ஊட்ட உணவுப் புறக்கணிப்பு.
5. பாலியல் சார்ந்த கேடுறுத்தல்.
6. போதைப்பொருள் கடத்தல்.



7. மருந்து வழங்கல் நிராகரிப்பு.
8. கல்வி நிராகரிப்பு
9. வேலைகளில் ஈடுபடுத்தல்
10. வன் நடத்தைகளில் ஈடுபடுத்தல்.

சிறாரைக் கேடுறுத்தல் தொடர்பான காட்டுருக்களை (Models) மதிப்பீடு செய்தலே இவ்வாய்வுக் கட்டுரையின் இலக்குகளாகும். கேடுறுத்தல் தொடர்பான காட்டுருக்களைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்:

1. உளவியற் காட்டுரு.
2. சமூகவியற் காட்டுரு.
3. சமூக சந்தர்ப்பக் காட்டுரு.
4. ஒன்றிணைக் காட்டுரு.

## 1. உளவியற் காட்டுரு:

பெற்றோரின் உளவிற் பிரச்சினைகள், அவர்களால் கட்டுப் படுத்த முடியாத மனவெழுச்சிப் பிரச்சினைகள், பெற்றோர்கள் வளர்ந்துவந்த முறைமை, எதிர்ப் பண்பு கொண்ட முறைமை, முதலிய பல்வேறு உளவியற் பிரச்சினைகள் சிறாரைக் கேடுறுத்தலுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதை உளவியற் காட்டுரு விளக்கு கின்றது. பெற்றோருக்குப் பொருத்தமான கல்வியை வழங்குதல், அவர்களின் ஆளுமைக் குழப்பங்களைத் தவிர்த்தல், சீர்மியம் வழங்குதல் முதலியவற்றால் கேடுறுத் தலைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று கருதப்படுகின்றது.

சிறுவர்கள் மீது உடற் காயங்களை ஏற்படுத்தல், பொறுப்பற்ற முறையில் தமது பிள்ளைகளுக்கு வைத்தியம் செய்தல், தவறான கற்பித்தல் முறைமை முதலியவை சிறார்களுக்கு கேடுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன. இலங்கையின் நிலவரப்படி பெண் சிறார்களே அதிக அளவிற் கேடுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதல் தெரியவருகின்றது. (Economic Review, Nov. Dec.*1996)*.

கேடுறுத்தலை உளவியற் கண்ணோட்டத்தில் நோக்கியவர்கள் ஒரு பிரதான கருத்தை முன்மொழிகின்றார்கள். அதாவது தாழ்ந்த

சுயபடிமம் (Low Self image) உள்ளவர்களே கூடுதலாக சிறாரைக் கேடுறுத்துகின்றார்கள் என்று விளக்கப்படுகின்றது. (Papalia,1979, P.230). கேடுறுத்தப்படும் சிறார்களிடத்தும் பின்னடைந்து தாழ்ந்த சுயபடிமமே ஏற்படுகின்து.

## 2. சமூகவியற் காட்டுரு:

சமூகத்தின் இயல்பு, அதன் அடிக்கட்டுமானம், சமூக உறவுகள், சுரண்டற் கோலங்கள், சமூகத்தின் ஒடுக்குமுறை இயல்பு முதலியற் றின் கூட்டு மொத்தமான விளைவாக எழுவதே சிறார் கேடுறுத்தல் ஏற்படு கின்றது என்பதைச் சமூகவியற் காட்டுரு விளக்குகின்றது. இது தொடர் பாககில் (Gill, 1975) என்பார் ஐந்து பிரதான பரிமாணங் களைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவையாவன:

1. சமூகத்தின் அடிப்படையான தத்துவம், ஆட்சி செலுத்தும் விழுமியங்கள், மனிதன் பற்றிய எண்ணக்கரு, மற்றும் சமூக நிறுவனங்களின் இயல்பு.
2. முடிவுகளைப் பெறுவதற்குச் சமூகத்திலுள்ளோர் பயன் படுத்தும் அதிகார வலுவின் ஏற்புடைமை.
3. சிறார் பற்றிய சமூகத்தின் எண்ணக்கரு.
4. சமூகத்தின் நெருடற் கேடுகளுக்கான சந்தர்ப்பங்கள். எடுத்துக் காட்டாக, மிகு வறுமை, குடித்தொகைக் குவிப்பு, இடநெருக்கடி, மற்றும் போதுமான நல வசதியின்மை முதலியன.
5. சமூத்திற் காணப்படும் பல்வேறு வகைப்பட்ட உளப்பிணி கள்.

சில ஆய்வாளர்கள் சமூகத்திலே காணப்படும் அதியிடர் சந்தர்ப்பங்களுடன் (High-risk Situations) தொடர்புபடுத்தி (Bronfen Nrenner-1974) சிறார் கேடுறுத்தல் விளக்குகின்றார்கள். அதாவது மனிதச் சூழலின் இயல்பும், சிறாரைக் கேடுறுத்துவதற்கான சமூக ஆதரவுச் செயற்றொகுதியின் பண்பும், இந்நிலையை ஏற்படுத்துவ தாகக் குறிப்பிடுகின்றார்.



மேற்குறித்த ஆய்வாளர்கள் பெரும்பாலும் சமூக நிலவரங்களை விளக்குவதிலும், தோற்றப்பாடுகளை விளக்குவதிலும் கவனம் செலுத்து கின்றார்களேயன்றி சமூகத்தை மாற்றியமைக்கும் உபாயங் களை முன் மொழியவில்லை. அவற்றை மார்க்சிய சிந்தனையாளர் களிடமிருந்தே பெறவேண்டியுள்ளது.

## 3. சமூக சந்தர்ப்பக் காட்டுரு:

சிறாரைக் கேடுறுத்தல் தொடர்பான சமூக சந்தர்ப்பக் காட்டு ருவை, பார்க் மற்றும் கொல்மர் முன்மொழிந்தார்கள். (Park and Collmer-1975). குடும்பப் பின்புலத்தில் நிகழும் இடைவினைகளை யும், சந்தர்ப்பங்களையும் அவர்கள் தீவிரமாகப் பகுப்பாய்வு செய் தார்கள். குடும்பப் பின்புலத்தில் குறைந்தளவு இடைவினைகள் காணப்படுதல், எதிர்மறையான அணுகுமுறைகள் நிலவுதல், எதிர் இசைவாக்கல் காணப்படுதல் முதலிய சந்தர்ப்பங்களால் சிறுவர் கேடுறுத்தல் நிகழ்வதாக சமூக சந்தர்ப்பக் காட்டுருவிளக்குகின்றது. இதுவும் ஒருவகை நுண்பகுப்பாய்வாக இருக்கின்றதேயன்றி, சமூக நிலவரங்களை மாற்றியமைப்பதற்கான விஞ்ஞான பூர்வமான கருத்தை முன்வைப்பதாகக் காணப்படவில்லை. சமூக ஆதரவு நடவடிக்கைகள் வாயிலாக நடத்தைகளை மாற்றியமைக்க முயல லாம் என்பதும் வெறும் கற்பனை வாதமாகிவிடுகின்றது. ஏனெனில் சுரண்டற் கோலங்கள் நிலவும் ஒரு சமூகத்தில் உற்பத்திச் சாதனங் களை வைத்திருப்பவரே சமூக ஆதரவு நடவடிக்கைகளிலும் ஈடு படவேண்டியுள்ளமையால், தமது சுரண்டல் நலனை அவர் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து இறுகப்பற்றி நிற்கவேண்டியுள்ளது.

## 4. ஒன்றிணைக் காட்டுரு (INTEGRATIVE MODEL)

யாதாயினும் ஒரு காரணியால் மட்டும் சிறார் கேடுறுத்தல் நிகழ்வதில்லை என்றும், பல்வேறு காரணிகளின் ஒன்றிணைப் பாலேயே அந்நிகழ்ச்சி ஏற்படுகின்றதென்றும் ஒன்றிணையக் காட்டுரு விளக்குகின்றது. கிலிஸ் (Gelles 1973), அல்வி (Alvy) முதலியோர் இந்தக் காட்டுருவை விளக்கினர். ஆளுமைப் பண்புக் கூறுகள், பெற்றோர் பெற்ற சமூக மயமாக்கல் அனுபவங்கள், அவர்களின்

சமூக அந்தஸ்து, வன் நடத்தை தொடர்பான பண் பாட்டு நியமங்கள் சந்தர்ப்ப நெருக்குவாரங்கள், உடனடியான நிகழ்ச்சி முதலியன ஒன்றிணைந்த முறையிலே சிறார் கேடுறுத்தலை உருவாக்குகின்றதென இந்தக் காட்டுரு விளக்குகின்றது.

பெற்றோரின் ஆளுமை, சிறாரின் ஆளுமை, சூழல் முதலியவற்றின் இடைவினை ஒன்றிணைப்பு கேடுறுத்தலுக்கு அடிப்படையாகின்றது என்பது இதன் சாராம்சம்.

## தீர்வு பற்றிய திறனாய்வு:

சமூச உளவியற் கண்ணோட்டத்தில் இந்தக் காட்டுருக்களை ஆராய்ந் தோர் பிரச்சினைக்குப் பினவரும் தீர்வு முறைகளைக் குறிப்பிடுகின்றனர்:

1. வறுமையை ஒழித்தலும் குடும்பத் திட்டமிடற் செயற்பாடுகளை முன்னெடுத்தலும்.
2. ஆற்றுப்படுத்தல் மற்றும் சீர்மிய நடவடிக்கைகளைப் பல மட்டங்களிலும் விரிவுபடுத்தல்.
3. உச்சநிலைப் பயன் தரக்கூடியவாறு உடல் நல, உள நல, நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
4. குடும்பச் சூழலில் நெருக்குவாரங்களைத் தணிப்பதற்குரிய குடும்ப அயற்புறச் சமூக சேவைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
5. ஒன்றிணைந்த சமூக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. சிறார்நலப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
7. சமூகத்துக்கான முறைசாராக் கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.

மேற்கூறியவற்றோடு தனித்தனி நிறுவன அமைப்புக்களோடு கூடிய தீர்வு முறைகளும் முன்வைக்கப்படுகின்றன. பின்வருவனவற்றை இதற்கு எடுத்துக் காட்டுக்களாகக் குறிப்பிடலாம்:



1. சிறார்க்கென பகற்பாதுகாப்பு இல்லங்களை (Day Care Centre) நிறுவுதல்.
2. நெருக்குவாரப் பாதுகாப்பு இல்லங்களை (Crisis Nurseries) அமைத்தல். நெருக்கடியான எந்த நேரத்திலும் சிறார்களை இந்த இல்லத்திலே கொண்டுவந்து பாதுகாப் புக்கென விட முடியும்.
3. வதிவிடப் பாதுகாப்பு (Residential Care) இல்லங்களை ஏற்படுத்துதல். சிறாரும், அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒரு குறுங்காலப் பாதுகாப்பு நடவடிக்கையாக இங்கு வந்து தங்கிப் பயன்பெறும் வழிமுறையாக இது அமைகின்றது.
4. சமூக உளவில் நிறுவனங்களை ஏற்படுத்தி ஒன்றிணைந்த உள வியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. நடத்தைச் சீர்ப்படுத்தல் (Behaviour Modification) நிலையங்களை ஏற்படுத்தல்.
6. மாற்றுப் பாதுகாப்பு இல்லங்களை (Foster Homes) அமைத்து, பாதுகாப்பான வதிவிட மாற்றத்தின் வழியாகத் தீர்வு காண முயற்சித்தல்.
7. மறுவாழ்வு இல்லங்களை அமைத்து பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பாதுகாப்பும் கல்வியும் வழங்குதல்.

எத்தகைய விரிவானதும் ஒன்றிணைந்ததுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், சிறார் கேடுறுத்தல் அதிகரித்து வருதல் ஆய்வாளருக்குப் பெரும் அறைகூவலாகவும் உள்ளது. அடிப்படையான ஒரு சமூக மாற்றம், பொருள் உற்பத்தி உறவுகளின் அடிப்படையான மாற்றம் எவ்வகையான சுரண்டல்களையும் ஒழிப்பதற்கான அடிப்படையான மாற்றம் பற்றிய சிந்தனையின் முக்கியத்துவத்தையே இச்சந்தர்ப்பத்தில் மேலும் வலியுறுத்தவேண்டியுள்ளது.

# சிறார் கல்வி தொடர்பான மாற்றுவகைச் சிந்தனை

உலகளாவிய நிலையில் சிறுவர் கல்வியின் இன்றியமையாமை பல பரிமாணங்களிலும், பல நிலைகளிலும் விளக்கப்பட்டாலும், விடுபட்டு நிற்கும் ஒரு பெரும் இடைவெளி பற்றிக் குறிப்பிடாமல் இருந்துவிட முடியாது. சிறார் கல்வியைப் பொறுத்தவரை வர்க்க இடைவெளி கூர்ப்படைந்து கொண்டு நிற்கின்றது. வாய்ப்பு மிக்கோரின் குழந்தைகள் விரைந்த கல்விப் பங்குபற்றலுக்கு உள்ளாகிச் சிறக்கின்றனர். வறுமை நிலையிலுள்ள சிறார்கள் தொடர்ந்து பின்னடைவுகளை அனுபவித்து வருகின்றனர்.

உணவு ஊட்டப் பற்றாக்குறைவு, சிறப்பாக புரத உணவுகளின் பற்றாக்குறைவு, காரணமாக ஏழைக் குழந்தைகளின் மூளைவளர்ச்சி பின்னடைவுகளை எதிர்கொள்ளுகின்றது. உயிர்ச்சத்துக்களின் போதாமை, கனிமங்களின் பற்றாக்குறை முதலியவற்றால் ஏழைக் குழந்தைகளின் சராசரியான உடல் வளர்ச்சியும், தசை நார்களின் இயக்க வளர்ச்சியும் பின்னடைவுகளை எதிர் கொள்ளுகின்றன. உடல் மேம்பாடு தொடர்பான பின்னடைவு உள மேம்பாட்டிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

வசதிமிக்க சிறார்களுக்குரிய பள்ளிக்கூடங்கள் வசதிகுறைந்த ஏழைச் சிறுவர்களுக்குரிய பள்ளிக்கூடங்கள் என்ற முரண்பாடான செல்வழிகள் தோன்றியுள்ளன.

இல்லங்களிற் கிடைக்கப்பெறும் கல்விசார்ந்த வளங்கள், சிறாரின் கல்வியில் நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன. வசதிமிக்க சிறார்களின் இல்லங்களிற் கிடைக்கப்பெறும் கணனிகள் உட்பட்ட வளங்கள் அவர்களின் அடைவுகளை உயர்த்துவதற்குத் துணை நிற்கின்றன. ஆனால் ஏழைச் சிறார்கள் அடிப்படை வளவசதிகள் அற்ற நிலையில் பொதுத் தேர்வுகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது.



சிறார் கல்விச் சிந்தனைகள் பற்றி ஆழ்ந்து நோக்கும்பொழுது முகிழ்த்தெழும் ஒரு பிரதான விசையாக "மறைநிலை நிராகரிப்புக் கோட்பாடு" (Theory of Hidden Deprivation) என்பதை முன்வைக்க வேண்டியுள்ளது. அதாவது வெளிப்படையாக கல்வியில் சம சந்தர்ப்பம், சமவாய்ப்பு என்று கூறப்பட்டாலும், அனைத்து மாணவர்களுக்கும் பாட நூல்களும் சீருடைகளும் வழங்கப்பெற்றாலும், பள்ளிக்கூடக் கட்டமைப்புகளும் வழங்கப்பெற்றாலும், பள்ளிக்கூடக் கட்டமைப்புகளிலும், குடும்பச் சூழலிலும் காணப்படும் வேறுபாடுகள் மறைமுகமான நிராகரிப்புக்களை ஏற்படுத்திவிடுகின்றன.

மறைநிலை நிராகரிப்புக்களினால் சிறார்கள் தமது ஆற்றல்களை உய்த்தறிதல் தம்மைப்பற்றிய விழிப்புணர்வு (Salf Awareness), தம்மை அங்கீகரிக்கும் உணர்வு (Self Acceptance), தம்மை ஏற்று மதிக்கும் உணர்வு (Self Respect) முதலிய துறைகளிலும் பாதிப்புக்களையும் பின்னடைவு களையும் எதிர்கொள்ளுகின்றனர். குடும்ப வறுமையாலும், ஏழ்மையாலும், கைதூக்கி விட முடியாத போட்டி நிலைமைகளினாலும், அவர்களின் உட்பொதித்த ஆற்றல்கள் (Potentialities) வெளி வரமுடியாமலிருக்கின்றன.

சமூக ஏற்றத்தாழ்வுகளும், சமூக நிரலமைப்பை வலியுறுத்தி நிற்கும் போட்டிகளும் வறுமையின் பாதிப்புக்கு உள்ளாகிய சிறுவர்களிடத்து தனிலைத்தேய்வை (Self Depreciation) அல்லது சுய ஆற்றல் சுருங்கலை ஏற்படுத்திவிடுகின்றது. அவர்களது 'இருப்பு' பாதகமாக இருப்பினும், ஒன்றிணைந்த முறையிலே அந்த இருப்பை அவர்களால் மாற்றமுடியாதிருத்தல் சிறார் கல்விச் சிந்தனையாளர் பலருடைய கவனத்தை ஈர்க்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

சிறார்களுக்குக் கல்வி நிதியும், புலமைப் பரிசில்களும், 'புகழ் பூத்த' பள்ளிக்கூடங்களுக்கான நுழைவும் நுண்மதித் தேர்வுகளை அடிப் படையாகக் கொண்டே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றன. சில நாடுகளில் "உளச்சார்புத் தேர்வு' என்ற தலைப்பில் நுண்மதித் தேர்வுகளே நடத்தப்படுகின்றன. ஆனால் நுண்மதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நரம்பியல் இரசாயன ஆய்வுகள்

(Gurowitz 1968, Hicks, 1970) திடுக்குறும் தகவல்களைத் தந்துள்ளன. அதாவது சிறார் நிலையில் வறுமை காரணமாக நிகழ்ந்த உணவு ஊட்டப் பிறழ்வு நுண்மதித் தேர்வுகளில் குறைந்த அடைவுகளை அவர்களுக்குக் கொடுத்துள்ளன.

சிறாரினது வறுமையினதும் பின்னடைவுகளினதும் ஆழ்ந்த காரணிகளை ஆராயாது சில கல்வியியலாளர்கள் அவர்களைப் பண்பாட்டு நிலையில் பிரதிகூலம் அடைந்தவர்கள் (Culturally Disadvantaged) என்று மேலோட்டமாகக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது பண்பாட்டு உள்வாங் கலாலும், பண்பாட்டு அதிர்ச்சியைத் தீர்த்துவைப்பதனாலும், புரிந்துணர்வினாலும் எளிதாக இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

ஐ. அமெரிக்காவின் பெருநகரங்களிலே வாழும் குழந்தைகளுக் குக் கற்பிக்க முடியுமா என்று எழுப்பப்பட்ட வினா (Can Slum pupils be educated?) (Raspberry, 1971) சமூக பொருளாதார நிராகரிப்புக் கும் கல்விக்குமுள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது. இச்சந்தர்ப் பத்தில் சிறாரின் கல்வி தொடர்பான இன்னோர் அதிர்ச்சியும் வெளியிடப்பட்டுள்ளது. அதாவது வறுமைச் சூழலில் உள நோய் களும் அதிகம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (Adams, 1973, P. 91).

சிறார்க்கான கல்வி உளவியல் மயப்பட்டதாக இருத்தல் வேண் டும் என்பதைப் பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டாலும் நடை முறையில் உளவியல் நிராகரிப்பு மிகுந்து காணப்படுகின்றது. போலி உளவியற் பாங்குளும் இழையோடிக் காணப்படுகின்றன. நடை முறையில் காணப்படும் சில குறைபாடுகள் வருமாறு:

1. ஆசிரியர்களிடத்து ஏற்படும் எதிர்மனப்பதிவுகளும் முற்சாய்வுகளும் மாணவர்களிடத்து உளத்தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

2. தமது நடையியலே (Style) மேலானது என்று ஆசிரியர்கள் அவற்றை மாணவர் மீது திணித்து விடுகின்றனர்.

3. மாணவர்கள் தவறாக விடையளிக்கும் வேளைகளில் ஆசிரியர்களுக்குக் கோபம் என்ற மனவெழுச்சியே மேலோங்குகின்றது.



4. மாணவர்கள் ஈட்டுப் புள்ளிகளுக்கும், தரநிலைகளுக்கும் அடிமைகளாக்கப்படுகின்றனர் அதாவது தேர்வுகளுக்கு விடையளிக்கும் பொறிகளாக மாணவர்கள் உருவாக்கப் படுகின்றனர். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் தேர்வு மேற்குறித்த பண்புகளை மீள வலியுறுத்தி நிற்கின்றது.

5. சிறுவர்களது பாட அடைவுகளுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை அவர்களது விழுமிய அடைவுகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு சிறுவனையும் சிறுமியையும் கற்பவர்களாகவும், கற்பிப்போராகவும் ஒரே நேரத்தில் மாற்றமுறச்செய்யும் இரு பரி மாண அணுகுமுறையே (Two Dimensional Approach) நவீன சிறுவர் கல்வியின் வெற்றிக்கு வித்தாக அமையும். தாம்பெற்ற அனுபவங் களை ஒவ்வொரு சிறுவரும் பரிமாற்றம் செய்வோராக மாற்றப்படல் வேண்டும்.

# புலன் தழுவிய கற்றல்

## கட்புலன் :

கற்றலை உள்வாங்கும் பலம் பொருந்திய புலன் உறுப்புக்களிற் கண் சிறப்பிடம் பெறும். வெறுமனே ஒரு நிழற்படக் கருவியின் செயல்களை மாத்திரம் கண்கள் புரியவில்லை. அறிகைச் செயல் முறையில் கண்கள் மூளையுடன் இணைந்து செயற்படுகின்றன.

வடிவங்கள், வண்ணங்கள் என்பவை கண்களால் உணரப்படுகின்றன. ஒளியின் நீள அளவுகளினாலே காட்சி தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு வண்ணமும் அவற்றைக்குரிய ஒளி நீளங்களைக் கொண்டிருக்கும்.

கட்புலச் செயற்பாடுகள் ஒளியின் செறிவோடு சம்பந்தப்பட்டிருக்கும். முற்றான இருளில் புலச் செயற்பாடு பூச்சியமாக இருக்கும். சிறி தளவு ஒளி பரவத் தொங்கியவுடன் கட்புலச் செயற்பாடு அரும்பத் தொடங்கிவிடும். கட்புலச் செயற்பாட்டினைப் பல காரணிகள் பாதிக்கின்றன. ஒரு பொருளின் உடனடிப் பின்னணியின் ஒளிச் செறிவு முக்கியமாகக் குறிப்பிடத்துக்கது. மென்பழுப்பு நிறப் பின் புலத்தின் மீது அமைந்த கரிய எழுத்துக்கள் நல்ல துலக்கமாகத் தெரியும் படிக்கும் அறையின் முழுப்பகுதிகளிலும் ஒளி பரவியிருக்குமாயின் கட்புலச் செயற்பாடு மேம்பாடு கொண்டதாக இருக்கும்.

சிறுவர்களின் கண் அசைவுகள், நிற்க்குருடு முதலியவை கட்புலன் தழுவிய கற்றலைப் பாதிக்கும். வாசிக்கும் பொழுது கண்கள் ஒரு தொடர்ச்சியான முறையில் அசைவதில்லை. வேகமான பாய்ச்சலுடன் கண் அசைவுகள் இடம்பெறும். வேகமான பாய்ச்சலிடையே ஒரு நுண் செக்கனில் கண் ஓய்வெடுத்துக் கொள்ளும். இவை வாசிப்புத் திறனிலே செல்வாக்கினை ஏற்படுத்தும். ஒரே பார்வையில்



உள்வாங்கக் கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது வாசிப்பு வேகமும் வளர்ச்சியடையும்.

## செவிப்புலன்:

ஒலியின் செறிவு, அதன் இயக்கவீச்சு, அடிப்படை சுருதி, பேசும் விகிதம் முதலியவை செவிப்புலன் தழுவிய கற்றலின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒலி அலைகள் குறிப்பிட்ட அளவு மீடிறன்களையும் செறிவையும் கொண்டுள்ளன. ஒழுங்கற்ற முறையில் இடம்பெறும் பல்வேறு மீடிறன்களைக் கொண்ட ஒலி அலைகள் "இசைவற்ற சத்தங்கள்" என்று குறிப்பிடப்படும்.

காதிலுள்ள ஒலிப்பறைகள் மீது ஒலிபடும்பொழுது அதிர்வு ஏற்படுகின்றது. செவிப்பறைகளில் இருந்து உட்காதுக்கு ஒலி கடத்தப் படுகின்றது. அங்கிருந்து உடற்கூற்றியல் செயல் முறைகளினூடாக மூளைக்கு ஒலிசார் உள்ளீடுகள் அனுப்பப்படுகின்றன. மிகவும் நுண்ணிதான ஒலிகளைச் செவிகளால் உணரமுடிவதில்லை. அவ்வாறே அதிஉயர் மீடிறன்களைக் கொண்ட ஒலிகளும் செவிகளினால் உணரப்படுவதில்லை. பொதுவாக நிமிடத்துக்கு இருபது தொடக்கம் இருபதாயிரம் மீடிறன்களை கொண்ட ஒலிகளை சாதாரணமான செவிகளால் உணரமுடியும்.

ஒலிகளின் குறுக்கீடு, ஒலிகளின் இசைவு, இசைவுப் பிறழ்வு என்பனவும் செவிப்புலன் தழுவிய கற்றலில் வேறுபடுத்திப் பார்க்கப் படவேண்டி யுள்ளன.

ஒலி எந்தத் திசையிலிருந்து வருகின்றது. எவ்வளவு தூரத்திலிருந்து வருகின்றது என்பவை பற்றிய உணர்வும் சிறுவர்களுக்கு முக்கியமானவை.

## முகர் புலன்:

காற்றுடன் செறிந்துவரும் மணங்கள் முகர்ந்து அறியப்படுகின்றன. நறுமணம், உப்புமணம், வெறுப்பு மணம் என்றவாறு அடிப்படை மணங்கள் வேறுபடுத்தப்படுகின்றன. மணங்களில் வேறு பாட்டுக்கேற்ப முகரும் செயல்முறையிலும் வேறுபாடுகள் காணப்படும். முகர்தலுடன் இணைந்து மனவெழுச்சிகள் தூண்டப் படுகின்றன. பொருந்தாத மணங்கள் சிறுவர்களுக்கு வெறுப்பை

மட்டுமல்ல பயத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. பல்வேறு மணங்களை இனங்காணக்கூடிய பயிற்சிகள் பாலர் பாடசாலைகளிலே அமைக்கப்படவேண்டியுள்ளன.

**சுவைப் புலன்:**

நாவிலுள்ள சுவைக்கலன்களினூடாக சுவைப்புலன் உணரப்படுகின்றது. உவர்ப்பு, புளிப்பு, இனிப்பு. கசப்பு ஆகியவை அடிப்படைச் சுவைகள் என்று குறிப்பிடப்படும். சுவைப்புலன் சார்ந்த உய்த்துணரும் பயிற்சி, வேறுபடுத்தும் பயிற்சி, தொடர்புபடுத்தும் பயிற்சி, பழக்கப் படுத்திக் கொள்ளும் பயிற்சி முதலியவற்றைப் பாலர் கல்வியில் வளர்த்தெடுத்தல் வேண்டும். முகர்புலனும், சுவைப் புலனும் ஒன்றிணைந்த வகையில் சிறுவர்களால் அனுபவிக்கப் படுகின்றன. சிறுவர் விரும்பாத சத்துள்ள உணவுகளுக்கு நறுமணம் ஊட்டி அவற்றிலே விருப்பத்தை ஏற்படுத்தலாம். உணவுப் பொருள்களின் வடிவமைப்பும், விநோதமான பெயர்களும் சிறுவர்களுக்கு உண்ணும் விருப்பத்தை ஏற்படுத்துவதால் அவற்றின் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**தோல் உணர்வுகள்:**

தோல் உணர்வுகள் வழியாகவும் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. தோற்பரப்பு முழுவதும் உணர்வுகள் சமமாக இருப்பதில்லை. சில பகுதிகளில் மீயுணர்வு நிலை காணப்படும். எத்தகைய அழுத்த நிலையில் தோல் உணர்வுகள் தூண்டப்படும் என்பதிலும் தோற்பரப்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாநுனி, உதடுகள், விரல்கள், கைகள் என்பவற்றில் மீயுணர்வு காணப்படும். கால்கள், இடுப்பு முதலியவை ஒப்பீட்டளவிற் குறைந்த அளவு தோல் உணர்வை வெளிப்படுத்தும்.

குத்தும் பொருள்கள், மென்மையான பொருள்கள், திண்மம், திரவம், களிப்பாங்கான பொருள், சூடு, குளிர், அழுத்தம் முதலியவை தோல் உணர்வுகளினால் அறியப்படுகின்றன. இத்துறைகளிலும் சிறுவர்களுக்குக் கற்றல் அனுபவங்களைக் கொடுத்தல் வேண்டும்.

புலன்கள் தழுவிய கற்றலும் கற்பித்தலும் சிறார் கல்வியிற் சிறப்பிடம் பெறுகின்றன.



# விளங்கும் திறன் வளர்ச்சி

**சூ**ழலுடன் குழந்தைகள் மேற்கொள்ளும் இடைவினைகள் வாயிலாக செயற்பாடுகள் சார்ந்த திரளமைப்பு (Action Schema) மூளையிலே வளர்த்தெடுக்கப்படுகின்றது. தன்மயமாக்கல், தன்மை வாக்கம் என்ற இரு இயக்கப்பாடுகளும் அனுபவங்களை உள்வாங்கிக் கொள்ள உதவுகின்றன.

சொல்சார்ந்த குறியீட்டாக்கத்துடன் விளங்கும் திறன் மேலும் வளர்ச்சியடைகின்றது. ஆனால் குழந்தைகளின் பிரச்சினைகள் சொல் சார்ந்த குறியீடுகளினால் மட்டும் அணுகப்படுவதில்லை. பாவனை செய்தல் பிரதிநிதித்துவம் செய்தல் முதலியனவும் விளங்கும் திறன் வளர்ச்சியோடு தொடர்புடையதாக இருக்கும்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட திரளமைப்பை மீள்வடிவாக்கலுடன் விளங்கும் திறன் தொடர்புடையதாக இருக்கும் என்பது அறிகை உளவியலாளரின் கருத்து. அறிகையில் சொற்களுக்கு அதீத முக்கியத் துவத்தைக் கொடுப்போர் சொற்களின் வழியாகவே குழந்தை தனக் குரிய அனுபவங்களை உள்வாங்கிக் கொள்கின்றதென்றும் மீள் வடிவமைத்துக் கொள்கின்ற தென்றும் குறிப்பிடுகின்றனர். "பெரியது" "சிறியது" போன்ற எண்ணக் கருக்களை சொல்சார்ந்த முறையிலே குழந்தைகள் உள்வாங்கிக் கொள்ளுகின்றார்கள் என்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இந்த அடிப்படையிலிருந்து மேலும் சொல் சார்ந்த உள்வாங்கல்கள் இடம்பெறு கின்றன. "பெரிய பெட்டி" "சிறிய பெட்டி", "பெரிய நீலநிறப் பெட்டி", "சிறிய பச்சை நிறப்பெட்டி" என்றவாறு உள்வாங்கி விளங்கும் திறன் சொற் கள் வாயிலாக முனைப்புப் பெறுகின்றது. சொற்கள், எண்ணக்கருக்களின் குறியீடுகளாக இருப்பதானால் இந்தப்பணி இலகுவாக்கப்படு கின்றது.

குழந்தைகளின் விளங்கும் உயிர் இரசாயனவியல் அடிப்படையி லும், நரம்பியல் அடிப்படையிலும் விளக்கப்படத்தக்கவை. இவை உள்ளார்ந்த நிலையில் நிகழும் உடற்கூற்றியல் மாற்றங்களாகவுள்ளன.

பொருள்களை வேறுபடுத்திக் காணும் ஆற்றல் குழந்தைப்பருவ விளங்கும் திறனில் முக்கியமாக வற்புறுத்தப்படுகின்றது. வேறுபட்ட வடிவங்களைக் காண்பதால் திரட்டப்படும் அனுபவத் தொகுதி, விளங்கும் ஆற்றலை வளப்படுத்துகின்றது. முரண்படும் வடிவங்கள் குழந்தைகளால் விரைந்து உள்வாங்கப்படுகின்றன. சில உதாரணங்கள் வருமாறு:

அ. மூடிய எழுத்தும் திறந்த எழுத்தும்
O - C

ஆ. நேர்வடிவமும் தலைகீழ் வடிவமும்
M - W

இ. நேர்கோடுகளும் வளை கோடுகளும்
L - O

பொருள்களின் மேல் அதன் பெயரும் நிறமும் பதிந்திருக்கும் பொழுது, குழந்தைகள் அவற்றை இலகுவிலே விளங்கிக்கொள்கின்ற னர். உருவம், பின்புலம் என்பவற்றுக்கான தொடர்புகளையும், வேறு பாடுகளையும் தெரிய வைத்தல் குழந்தைப் பருவத்து விளங்கும் திறனை அதிகரிக்கச் செய்கிறது. இலைகளைப் பார்த்து வரையும்படி குழந்தைகளைக் கேட்கும் பொழுது, உருவம் பின்புலம் என்பவற் றைப் பிரித்தறியக்கூடிய குழந்தைகள், இலை நரம்புகளை நுட்பமாக வரைந்தார்கள்.

நிறங்களின் செறிவு, முரண்படும் நிறங்கள், நிறங்கள் மீது பெயர் பதித்தல், முதலியவை நிறங்கள் பற்றிய விளங்கும் திறனை அதிகரிக்கச் செய்கின்றன.

எண்பற்றிய அறிவு விலங்குகளுக்கு இல்லை. சேர்தல், இணைத் தல், திரட்டுதல், பிரித்தல், பகுத்துக் கொடுத்தல் முதலியவை குழந்தை களிடத்தே எண்பற்றிய எண்ணக்கருவை வளர்க்கத் துணைநிற் கின்றன.

விளங்கும் திறன் வளர்ச்சியை அனுசரித்தே சிறார் கல்வியைக் கட்டியெழுப்பவேண்டியுள்ளது.



## அசைவுக் கல்வி

**பா**லர் பாடசாலைகளில் நிகழும் கற்பித்தல் நுட்பவியலில் அசைவுக் கல்வி பற்றி (Movement Education) உளவியலாளர் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். உடல் அசைவு உள அசைவுடன் இணைந்து அறிகை அமைப்பை விரிவாக்குகின்றது.

பாலர்களால் மேற்கொள்ளப்படும் அசைவுகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவையாவன:

### அ) செயல் நெறிப்பட்ட அசைவுகள்:

ஏறுதல், தள்ளுதல், தாவுதல், சமநிலைப்படுத்தல் முதலியவை செயல் நெறிப்பட்ட அசைவுகளுக்கு உதாரணங்கள். இவற்றி லிருந்து பிற்காலத்தில் தசை நார்வகைத் திறன்கள் மேம்பாடு அடையும்.

### ஆ) உடற்பலத்தையும் வேகத்தையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்தும் அசைவுகள்:

ஓடுதல், பாய்தல், நீந்துதல், கெந்துதல் முதலியவை இதற்கு உதாரணங்கள். இவற்றிலிருந்து மெய்வல்லுனர் திறன்களும், விளையாட்டுத் திறன்களும் பிற்காலத்தில் வளர்ச்சியடையும்.

### இ) ஒத்திசைவுடன் இணைந்த அசைவுகள்

தாளத்தோடும், இசையோடும் இணைந்த அசைவுகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமையும். இவற்றை அடியொற்றிப் பிற்காலத்தில் நடனமாடும் திறன் படிமலர்ச்சி கொள்ளும்.

அசைவுக் கல்வியுடன் இணைந்ததாகவே ஒரு பிள்ளையின் பேச்சுத்திறன், எழுத்துத்திறன். ஆற்றுகைத்திறன் முதலியவை வளர்ச்சியடைவதால், பெற்றோரும் ஆசிரியர்களும் இத்துறையிலே கவனக் குவிப்பை ஏற்படுத்தவேண்டியுள்ளது. இவற்றை மேலும் ஆழ்ந்து பார்க்கும்போது நுண்மதித்திறன், ஆக்கத்திறன் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் அசைவுக்கல்வி இன்றியமையாது விளங்குவதைக் காணலாம்.

சிறுவர்களுக்கு அசைவுக் கல்வியை உரிய முறையிலே வழங்குவதன் வாயிலாக தன்னம்பிக்கை, தமது நடத்தைகளை தாமே நேர்முகமாக நெறிப்படுத்தல் கூடிய ஆற்றல் முதலியவற்றை வளர்க்கலாம். சிறுவர்களின் மனவெழுச்சிக் கட்டுப்பாடுகளுக்கும் அசைவுக் கல்வி மேலும் துணை செய்கின்றது. பெரியவர்களைப் பார்த்துச் செய்யும் "திணிப்பு முறைகள்" கைவிடப்பட்டு, அசைவுகளைக் கற்றுக் கொள்ளக்கூடிய தூண்டிகளையும் அறைகூவல்களையும் வழங்குதல் வேண்டும். உள்ளார்ந்த அறிகையையும், அனுபவத்திரளமைப்பையும் வளர்ப்பதற்கு அசைவுக் கல்வி மிகப் பொருத்தமானதாக விளங்குகின்றது.

அசைவுக் கல்வியை வளர்ப்பதற்கு முதற்படியாக ஆசிரியரும் பெற்றோரும் சிறுவர்களை உற்று நோக்கல் வேண்டும். இவ்வகையான உற்று நோக்கலில் நான்கு வகையான வினாக்களுக்கு விடை காணும் தேடல் இடம்பெறல் முக்கியமானது.

அவை :

அ) அசைவுகளின்போது உடலின் எப்பகுதிகள் கூடுதலாகச் சம்பந்தப்படுகின்றது என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

ஆ) 'எங்கு' அசைவு ஏற்படுகின்றது என்பதை நோக்கல். மேல் நோக்கிய அசைவு, தரை அளவு சம்பந்தப்படும் அசைவு என்ற பண்புகள் 'எங்கு' என்பதோடு இணைந்தது.

இ) எவ்வாறு அசைவு ஆற்றகை கொள்ளப்படுகின்றது என்பதை ஆராய்தல் இப்பிரிவில் இடம்பெறும். அசைவின் விசை, மெதுவானதா வேகமானதா என்பதை நோக்குதல்,அசைவின் பலத்தை மதிப்பிடுதல் போன்றவை இப் பிரிவில் இடம்பெறும்.



ஈ) அசைவுகள் எவற்றுடன் சம்பந்தப்படுகின்றன என்பதை இனங்காணல் இப்பிரிவில் இடம்பெறும். இலக்குகளுடன், பொருள்களுடன், நண்பர்களுடன் என்றவாறு அசைவுகளின் சம்பந்தங்கள் விரித்து நோக்கப்படும்.

மேற்கூறிய அவதானிப்புகளை அடிப்படையாக வைத்து அசைவுக்கல்வியை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

அ) உடலோடு தொடர்புடைய கற்றற் பரப்புக்கள் பின்வருமாறு இடம்பெறும்:

1. முழு உடலையும் பயன்படுத்தும் செயற் கோலங்கள்.
2. தனித்தனி உடல் உறுப்புக்களைப் பயன்படுத்தும் செயற் கோலங்கள்.
3. உடல் உருவத்தோடு இணைந்த செயற்கோலங்கள். வளைந்து நிற்றல், சரிந்து நிற்றல் முதலியவை.

ஆ) அசைவு இடைவெளிக்கு முதன்மை கொடுக்கும் கற்றற் பரப்புக்கள் பின்வருமாறு இடம்பெறும்:

1. அண்மைநிலை - சேய்மைநிலை:
2. தளத்தில் நிகழும் அசைவுகள்.
3. மேல் வெளியில் நிகழும் அசைவுகள்.
4. தாள் மட்டம், உயர் மட்டம், நடுத்தர மட்டங்களில் நிகழும் அசைவுகள்.
5. முன் அசைவு, பக்க அசைவு, பின் அசைவு.

இ) உடலின் பண்புகளை வலியுறுத்தும் கற்றற் பரப்புக்கள்

1. உசார்நிலை, தளர்ந்தநிலை, ஓய்வுநிலை.
2. மனவெழுச்சிகள் கலந்த அசைவுகள்.
3. வேறுபட்ட விசைகள் கலந்த அசைவுகள்.
4. பாரங்கள் தூக்கும் அசைவுகள்.

ஈ) சம்பந்தப்படும் அசைவுகளோடு இணைந்த கற்றற் பரப்புக்கள்.

1. மாணவரும் - மாணவரும்
2. மாணவரும் - அசையும் பொருள்களும்
3. மாணவரும் - அசையாப் பொருள்களும்
4. மாணவரும் - ஆசிரியரும்.

பாலர் கல்வி என்பது முற்றிலும் உளவியல் மயப்படுத்தப்பட்ட கல்வியாக மாற்றுவகைப்பட்டதும், பன்முகமான செயற்பாடுகளை உள்ளடக்கியதுமான கல்வியாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இந்த அவதானிப்புக்களை உள்வாங்காது பாரம்பரியமான, நெகிழ்ச்சியற்ற வகுப்பறை மாதிரிகையினை இன்னமும் இறுகப்பற்றி நிற்றல் பொருத்தமற்றது.

சூழலுடன் இடைவினைகளை விருத்தி செய்தல், சூழலை விளங்கிக்கொள்ளல், சூழலுடன் பொருத்தப்பாடு கொள்ளல். உடற் பலத்தைத் தனியாகவும் , கூட்டாகவும் பிரயோகித்தல், சமூக இசைவாக்கம் போன்ற கல்வியாற்றல்களை வளம்படுத்த அசைவுக் கல்விக்கு பிரதியீடுகள் இல்லை. அசைவுகள் வாயிலாக ஆற்றல்கள் வெளிப்படுகின்றன, நெறிப்படுகின்றன. அனைத்துச் செயற்பாடுகளும் அசைவுகளும் தொடர்புடையன எழுதுதல், பேசுதல், பாடுகள் என்பவை நுண்ணிய அசைவுகளுடன் தொடர்புடையவை. உடலை இயக்கி உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் அசைவுகளே அடிப்படையாகின்றது. அழகியற் செயற்பாடுகள் அனைத்தும் அசைவுகளினாற் பிறப்பிக்கப்படுகின்றன.

உளவியலாளர் மட்டுமன்றி சமூக மானுடவியலாளரும் அசைவுகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களது சடங்குகளிலும், நடனங்களிலும், செயற்பாடுகளிலும், மரபுகளிலும் அசைவுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மேலை நாடுகளில், பாலர் பள்ளிகள் "விளையாட்டுப் பள்ளிகள்" (Play School) என்ற அமைப்பையும் பெற்று வருகின்றன.



# பாலர் கல்வியில் இசையாக்கல்

**பா**லர் கல்வி ஆசிரியர்கள் தமது மாணவர்களின் உள்ளத்தோடு உறவாடும் உளவியற் கடப்பாடு கொண்டவர்கள். இதனை 'Child Minders' என்ற தொடர் தெளிவுபடுத்தும். இந்த உறவாடலில் 'ஓசை' சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. அவர்கள் அனுபவங்களோடும், கற்பனைகளோடும் ஆக்க வெளிப்பாடுகளோடும், மனவெழுச்சிகளோடும் உலா வருவதற்கு ஓசை நயமும், ஒத்திசைவும், ஒலிக் கோவைகளும் துணை செய்கின்றன.

பாலர் கல்வியில் இசையாக்கல், உடல் சார்ந்த ஒலிகளில் இருந்து ஆரம்பமாகின்றது. விரல்களால் சுண்டி ஒலி எழுப்புதல், உள்ளங்கைகளைத் தட்டி ஒலி எழுப்புதல், துள்ளி ஒலி எழுப்புதல் முதலியன உடல்சார் ஒலி எழுப்புதலுக்கு உதாரணங்கள்.

எளிமையான ஒலிகளோடு இணைந்த உடலசைவுகள் ஒலி சார்ந்த ஆக்க வெளிப்பாடுகளுக்கு அடித்தளமிடுதலுடன் உடல், உள்ளம் , மனவெழுச்சி இணைப்புச் சுவடுகளையும் பலப்படுத்தும். ஒலிகளோடு இணைந்து வலம் திரும்புதல், இடம் திரும்புதல், வட்டமிடுதல், வடிவங்களை உருவாக்குதல், எழுத்துக்களை உருவாக்கல் என்றவாறு இணைப்புச் சுவடுகள் பலப்படுத்தல் பன்முகப்படும்.

மேற்கூறிய இசையாக்கலோடு இணைந்த முறையில் "இசை தழுவிய விளையாட்டுகள்" முன்னெடுக்கப்படும். இசையாக்கல், இசைகேட்டல் இரண்டும் ஒன்றையொன்று வலுவும் வளமும் படுத்தும். பாலர் கல்வியில் இசைகேட்டல் நன்கு திட்டமிட்டு வளர்க்கப்படல் வேண்டும். "வாய் சார்ந்த பன்முக இசையாக்கல்" இதற்குப் பக்கபலமாக அமையும். இதற்குரிய சில முன்மொழிவுகள் வருமாறு:

1. பறவைகள் போன்ற ஒலிகள்
2. விலங்குகள் போன்ற ஒலிகள்
3. மனிதப்பாங்கு ஒலிகள் - சிரித்தல், அழுதல், இருமுதல், மூசுதல், உரத்த குரல், தாழ்ந்த குரல் முதலியன.
4. வெளிக்கள ஒலிகள் - காற்றொலி, மழைஒலி, அலைஒலி, நீர்வீழ்ச்சி ஒலி முதலியவை.
5. உள்ளக ஒலிகள் - தொலைபேசி, மணிஒலி, தையற்பொறி ஒலி, கடிகார ஒலி முதலியவை.

பாலர் கல்வியில் இசைவாக்கல் மேலும் வளம் பெற "இசை ஓவிய இணைப்புப் பலம்" வேண்டப்படுகின்றது. இசைக்கு ஓவியம் தீட்டும் அனுபவம் உளவியற் சீராக்க உபாயமாக மட்டுமன்றி. உளக் கோல வெளிப்பாடுகளுடன் இணைந்த ஆக்கத்திறன் முயற்சிகளுக் குத் தூண்டுதலாகவும் அமையும்.

பாலர் பள்ளிக்கூடங்களில் இசைத் தொழில் நுட்பத்தையும் கட்டியெழுப்பவேண்டியுள்ளது. சூழலிற் கிடைக்கும் பொருள் களைப் பயன்படுத்தி இணக்கல் இசை உபகரணங்கள் செய்யும் திறன்களை மேம்படுத்த வேண்டியுள்ளது. சில முன்னெடுப்புக்கள் வருமாறு:

1. வட்டவடிவமான கொள்கலன்களைப் பயன்படுத்தி சிற்றொலி மேளங்களை உருவாக்குதல்.
2. உலோகத் துண்டுகளைப் பயன்படுத்தி கொங்கணங்கள் (Gongs) செய்தல்.
3. ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பக்கூடிய சிலுப்பிகள் (Jingles) செய்தல்
4. கொள்கலன்களுள் பரல்களை அல்லது உலோகத் துண்டு களை இட்டு அசையொலிப்பான்களைச் (Shakers) செய்தல்
5. மரத்துண்டு, சிறுதடிகள், எலும்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தி இருதள மோதல் உபகரணங்களை (Clappers)ச் செய்தல்.



6. துருவல் ஒலிச்சாதனங்களை (Scraper) ஆரை வடிவத் தட்டுக் களில் இருந்து உருவாக்குதல்.

மேற்கூறியவற்றோடு மேலும் நுண் உபாயங்களைப் பயன் படுத்தி நுண் ஒலிகளைப் பிறப்பிக்க முடியும். மென் தகடுகள் மீது காற்றழுத் தத்தைப் பிரயோகித்தல் வாயிலாக எழும் ஒலி, செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தி எழுப்பும் நரம்பு ஒலி, தண்ணீர்க் குவளை களைத் தட்டி எழுப்பும் ஒலி என்றவாறு பல்வேறு இயக்கல் முயற்சி களைப் பள்ளிக்கூடங்களிலே மேற்கொள்ளலாம்.

இசையாக்கத்தில் "ஒலி ஒழுங்குபடுத்தல்" ஓர் அடிப்படை ஆற்ற லாகும். யாதாயினும் ஓர் ஒலி அலகைத் தெரிந்தெடுத்து (உதாரணம் ஆ, ஏ, ஓ) அதனைக் குறுஒலி நீளத்திலிருந்து நீண்ட ஒலி நீளம்வரை ஒலித்துக் காட்டும்பொழுது ஒலி ஒழுங்குபடுத்தல் ஆற்றல்களையும், ஒலி இன்பதையும் மாணவர் பெறக்கூடியதாக இருக்கும்.

அ) இரண்டு அடுக்கு ஆ.
ஆ.
ஆ) மூன்று அடுக்கு ஆ.
ஆ.
ஆ.

மேற்காட்டியவாறு அடுக்குகளைத் தேவைக்கேற்றவாறு விரிவு படுத்தலாம். படிப்படியாக இரு வேறுபட்ட ஒலி அலகுகளை ஒழுங் கமைத்தல், வேறுபட்ட ஒலி அலகுகளை ஒழுங்கமைத்தல், பயிற்சி களை மாணவரின் முதிர்ச்சி நிலைகளுக்கேற்றவாறு வழங்கலாம். படிப்படியாக ஒலி அலகுகளை ஏறு நிரைப்படுத்தல், அதே அலகு களை இறங்கு நிரைப்படுத்தல் போன்ற பயிற்சிகளை செயல் பூர்வ மாக அறிமுகப்படுத்தல் பொருத்தமானதாகும்.

இசையாக்கல் உளவியலில் வேறுபட்ட ஒலிகளை ஒன்றிணைக் கும் "ஒலிக்கூடல்" (Sound Collage) ஒரு முக்கியமான அனுபவமாகப் பாலர் கல்வியில் வலியுறுத்தப்படுகின்றது. வேறுபட்ட மிடற்றொலி களை ஒன்றிணைத்தல், வேறுபட்ட கருவிகளின் ஒலிகளை ஒன்றி ணைத்தல் என்ற அனுபவத்தில் மனவெழுச்சிச் சமநிலைகளுக்கு உயர்ந்த பயிற்சி தரப்படுகின்றது.

பாலர் பள்ளிகளில் நிகழும் இசையாக்கல் அனுபவங்களூடாக "காட்சி வடிவாக்கல்" மீது கவனம் செலுத்தவேண்டியுள்ளது. இசையைக் காட்சிக் குறியீடாக்கும் பொழுது, அவை சிக்கலற்ற வகையில் மிக எளிதாக இருத்தல் வேண்டும். மெதுவாய் இசைத்தல், விரைவாய் இசைத்தல், மௌனித்து நிற்றல் முதலிய ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு வகை யான எளிய குறியீடுகளைப் பயன்படுத்தலாம்.

இசையாக்கலில் இன்னொரு பரிமாணம், இசை விளையாட்டாகும். இசை விளையாட்டுக்கள் சிறுவர்களின் உடலுக்கும், உள்ளத்துக்கும், மனவெழுச்சிகளுக்கும் சமகாலத்தில் அழகியல் நிலைப்பட்ட பயிற்சியைத் தருவதனதல் உளப்பிணிகளை நீக்கவல்ல வலிமையை அங்கே காண முடியும்.



# சிந்தனையும் காரணங்காணலும்

**ந**டத்தை அணுகு முறைகளின் மட்டுப்பாடுகள் தந்த உணர்வுகளின் விளைவாக அறிகை உளவியல் வளர்ச்சியடையத் தொடங்கியது. அறிகைச் செயல்முறை என்பது ஒன்றிணைந்தது. புலக்காட்சி, நினைவு, படிமவாக்கம், மொழி முதலிய அறிகை உள்ளீட்டுக் கூறுகள் இன்றி சிந்தனை நிகழமாட்டாது.

சிந்தனை என்பது மூன்று பரிமாணங்களைக் கொண்டது. சிந்தனை அறிகை பூர்வமானது. அது அறிகைத் தொகுதியின் தொழிற்பாடுகளைக் கையாளும் ஒரு செயல்முறையாக அமைகின்றது. அது ஒரு பிரச்சினையின் அமைப்பையும் தீர்வையும் நோக்கி நெறிப்பட்டு நிற்கின்றது. அளவையியல் சார்ந்த சிந்தனைக் கோலங்கள் காரணங் காணலாக இடம்பெறும்.

பாலர்களின் சிந்தனை, வளர்ந்தோரின் சிந்தனையிலும் பார்க்கப் பண்பளவில் வேறுப்பட்டது. அனுபவங்களை உள்ளார்ந்த வகையாகக் கையாளலுடன் சிந்தனைச் செயல்முறை இணைந்துள்ளது. உள்ளார்ந்த அனுபவத்திரள் இடைவினைகள் காரணமாகத் தொடர்ந்து மாறிய வண்ணம் இருக்கும். இந்த இடைவெளியே வளர்ந்தோருக்கும் பாலர்களுக்குமிடையே சிந்தனையைப் பணப்பளவில் வேறுபடுத்துகின்றது.

மொழித்திறனோடு சிந்தனையும் காரணங்காணலும் மேலும் மேம்பாடு அடையும். எண்ணக்கருக்களைத் திரட்டிக் கொள்ளவும் குறியீட்டு விளக்கங்களை வளர்த்துக் கொள்ளவும் மொழி துணை செய்கின்றது. அனுபவப்படுதல், உளப்படிமங்களை ஆக்கிக் கொள்ளுதல், மொழிக் குறியீடுகளாக்குதல் தொடர்புகள் ஊடுருவி நிற்கின்றன.

தகவலின் அளவு அவற்றைக் கையாளக்கூடிய மூளையின் இயல்பு, உள்ளார்ந்த தந்திரோபாயம் ஆகியவை இடைவினை கொள் வதன் வாயிலாகவும், வளர்ச்சியடைவதன் வாயிலாகவும் சிந்தனை, காரணங்காணல் ஆகியவை விருத்தியடைகின்றன.

பாரம்பரிய உளவியல், குழந்தைகளை எதனையும் உள்வாங்கக் கூடிய தெறித்தல் அற்ற கொள்கலன்களாகக் கருதியது. ஆனால் நவீன உளவியல் பிரச்சினைகளுக்குத் தாமே முயன்று தொழிற்படும் தெறித் தல் செயற்பாடுகள் கொண்ட தொடர்வளர்ச்சி கொண்ட பொருள் களாகக் குழந்தைகளைக் கருதுகின்றது.

நவீன உளவியல் குழந்தைகளின் செயல்முனைய நடவடிக்கை களுக்கு (Strategies) முதன்மை கொடுக்கின்றது. ஆசிரியர்கள் இதனை வளர்ப்பதிலே தான் கூடியளவு கவனம் செலுத்தவேண்டி யுள்ளது.



# பேச்சுத்திறன்

குழந்தைகளின் பேச்சு தொடர்ச்சியான மாற்றத்துக்குரியது. அது தொடர்ந்து திருத்தவும், மீளவடிவமைக்கவும்படுகிறது. இடை வினைகளும், கல்வியும், சமூகமயமாக்கலும் குழந்தைகளின் ஆளு மைப் பண்புகளை மேம்படுத்துகின்றன.

பேச்சு என்பது புலன்சார் இயக்க ஆற்றுகையுடன் (Perceptual Motor Performance) இணைந்தது. புலன்சார் உள்ளீடு, பேச்சு வெளியீடு என்ற இரண்டு விளைவுகளுக்கும் இடைப்பட்ட ஒன்றி ணைப்புச் செயற்பாடும் மூளையில் நிகழும் இயக்க நடவடிக்கை களும் கட்டுப்பாடுகளும் “பேச்சு” என்ற வெளியீட்டை ஏற்படுத்து கின்றன.

பேச்சுக்குரிய ஒலியை உண்டாக்கும் உடலியக்கச் செயற்பாடு நோய்களினாலும் பிறப்புரிமைக் காரணிகளினாலும் தாக்கப்படுதல் உண்டு. தங்களோடு சமமான வயதினரோடு கூடுதலாகப் பழகும் சிறுவர்களிலும் பார்க்க வயதுக்கு மூத்தோரிடம் பழகும் குழந்தைகள் கூடிய பேச்சு ஆற்றல் மிக்கோராய்க் காணப்படுகின்றனர். தமது வயதினரிடத்துக் குறைந்தளவு சொற்பிரயோகங்களையும், வயதிற் கூடியோரிடத்துக் கூடியளவு சொற்பிரயோகங்களையும் தம்மை அறியாமலே வெளிப்படுத்துகின்றனர்.

பாலர் பள்ளிக் குழந்தைகளின் பேச்சு மொழி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றது. வகுப்பறையினுள் இயங்குதல், திறந்த வெளியில் விளையாடுதல், உணவருந்துதல், காட்சிகளைப் பார்த்தல் போன்ற சந்தர்ப்பங்களில் சொற் கோலங்களிலும், உச்சரிக்கும் செறிவி லும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

குழந்தைகளின் குடும்பப் பின்புலம், சொற்களஞ்சிய விருத்திக் குரிய கவிநிலை முதலியவை பேச்சுமொழிக் கோலங்களிலே செல்

வாக்குகளை ஏற்படுத்துகின்றன. பருமட்டாக இரண்டு வயதிலிருந்து இயக்கம் சார்ந்த வெளிப் பாய்ச்சலுடன் இணைந்த வகையில் (Motoric Overflow) பேச்சு முனைப்படைந்து செல்லும். தமது செயற்பாடுகளுடனும், செயற்பாடுகளுக்கு முன்னரும் பின்னரும் குறித்த சில தொடர்களை மீள மீளச் சொல்லல் இங்கே குறிப்பிடத்தக்கது. அதீத ஒலி வெளிப்பாடு கொண்ட குழந்தைகள் அதிக பேச்சுத்திறன் கொண்டவர்களாகப் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

உரத்து வெளிப்படுத்திச் சிந்தித்தல், உள்ளார்ந்த முறையிலே சிந்தித் தல் என்றவாறு சிந்தனை இயக்கங்கள் இருவகைப்படும். பாலர் கல்விப் பருவத்தில் நிகழும் சிந்தித்தல் பேச்சு மொழி தழுவிய உரத்து வெளிப்படுத்தும் சிந்தனையாகப் பெருமளவில் இடம்பெறும், உரத்து வெளிப்படுத்தும் சிந்தனை சமூகத் தொடர்புச் சிந்தனையாக இடம் பெறும். பேசுவோர், கேட்போர், சந்தர்ப்பம் என்ற மூன்றும் கருத்திலே கொள்ளப்படும். குழந்தை வளர வளர உரத்து வெளிப்படுத்திச் சிந்தித்தல் குறைந்து உள்ளார்ந்த முறையிலே சிந்தித்தல் வளர்ச்சியடையும்.

குழந்தை கேட்கும் பேச்சுக்களும் குழந்தை பேசும் பேச்சுக்களும் சிந்தனையின் வெளிப்பாடாக இருத்தல் மட்டுமன்றி, பிறருடன் மேற்கொள்ளும் தொடர்புகளையும் பாதிக்கின்றன.

பேச்சு மேம்படுத்தல் தொடர்பான ஆய்வுமுடிவுகளைப் பாலர் பள்ளிக்கூடங்களிலே பயன்படுத்தல் வருமாறு.

1. காட்சிக் கவர்ச்சிகளுடன் சொற்களை அறிமுகப்படுத்தல்
2. சொற்களையும் பொருள்களையும் தொடர்புபடுத்தும் பன்முக அனுபவங்களைத் தருதல்
3. சொற்களையும் செயற்பாடுகளையும் ஒன்றிணைத்தல்
4. இசைக்கவர்ச்சியை ஊட்டுதல்
5. சுயவெளிப்பாடுகளை தூண்டுதல்
6. கேட்கும் திறன்களை வளர்த்தல்
7. செயல்களுக்குப் பிரதியீடாகப் பேச்சை வளர்த்தெடுத்தல்
8. உச்சரிப்புச் சோம்பலைத் தவிர்த்தல்
9. சொற்களையும், வசனங்களையும் முழுநிறைவாகப் பெற்றோ ரும் ஆசிரியரும் பேசுதல்.



## பாலர் கதைகள்

பாலர் கல்வியில் மிகவும் வலிமைமிக்க சாதனமாகக் கதைகள் விளங்குவதற்குக் காரணம், அவற்றின் வாயிலாகத் தூண்டப்பெறும் மனவெழுச்சிகளும் எதிர்பார்ப்பு இன்பமும் ஆகும். கதை அசைவுகளினூடாகக் குழந்தைகள் உள அசைவுகளை அனுபவிக்கின்றனர். பாத்திரங்களுடன் ஒன்றிணைத்துக் கற்பனை இன்பத்தையும் எளிமையான சீராக்கத்தையும் அனுபவிக்கின்றனர். சமூக மயமாக்கற் செயற்பாட்டிலும் அறிகைக் கோலங்களின் வளர்ச்சியிலும் கதைகள் நேர் விசைகளை ஏற்படுத்துகின்றன.

பாலர் கதைகளுக்குரிய பலமும், வலிமையும் கொண்ட தளம் நாட்டார் மரபுகளில் இருந்து கிடைக்கப்பெறுகின்றது. நாட்டார் கதைகளில் இடம்பெறும் எண்ணக்கருக்கள் காட்சி வடிவிலிருந்து கருத்துவடிவை நோக்கிப் பெயர்வதாக காணப்படும். பலம்மிக்க வாய்மொழி ஊடகப் பண்பு மேலோங்கி உள்ளமையால், கேட்டல் என்ற இலகு கவனத்தின் வழியாக கதைக் காட்சிகளை உள்ளத்திலே அமைத்துக்கொள்ள முடியும்.

இக்கதைகளிலே காணப்படும் மிகப் பலம்பொருந்திய பரிமாணம், விலங்குகளும், பறவைகளும், மரங்களும், செடிகளும் பேசுதலாகும். தமது இயல்புகளைக் கொண்டே குழந்தைகள் சூழலை மதிப்பிட முயலும் செயற்பாடுகளில் இவ்வகையான "பேச்சு" ஆழ்ந்த உள ஈடுபாட்டை ஏற்படுத்தும்.

கதைப் புலத்தில் நிகழும் ஒரு சிறிய நிகழ்ச்சி குழந்தைகளிடத்துப் பெரிய குதூகலத்தைத் தூண்டும் "சிறிய" உள்ளீடுடன் "பெரிய" துலங்கலை ஏற்படுத்தும் உளநடவடிக்கையாக இது அமையும். ஆனால் வளர்ந்தோரிடத்து பல்வேறு செறிவுள்ள தூண்டிகளை உள்ளீடாகப் பெய்தால் மட்டுமே பெரிய துலங்கலை ஏற்படுத்தலாம்.

பாலர் கதைகள் அதிக நெகிழ்ச்சிப் பாங்கானதாக இருக்கும். கதை கூறிக் கொண்டிருக்கும் பொழுது, சிறுவர்கள் எழுப்பும் வினாக் களுக்குரிய விடைகளும் விளக்கங்களும் சேர்க்கப்படவேண்டி யிருப்பதால் பாலர் கதைகளில் இரண்டு அடிப்படைப் பண்புகள் காணப்படும். அவையாவன:

1. கதைத்தளம்
2. நெகிழும் இணைப்புக்கள்.

வளர்ந்தோருக்குரிய கதைகளில் நெகிழா இணைப்புக்களே காணப் படும். அதாவது கதையின் வசனங்களிலோ, சொற்களிலோ எந்தவிதமான மாற்றங்களும் புகுத்தப்படாது "கறாராகப்" பின்பற்றப் படும் அமைப்பே நெகிழா இணைப்பாகும். ஆனால் பாலர் கதைகளி லும், நாட்டார் கதைகளிலும் வாய்மொழித் தொடர்பாடலின் அழுத்தங்கள் காரணமாக "நெகிழும் இணைப்புக்களே" கதைத் தளத்தைப் பற்றிப் பிடித்த வண்ணமிருக்கும்.

பின்வரும் குழந்தைக் கதையை அமைப்பியல் ஆய்வுக்காக எடுத் துக் கொள்ளலாம்.ஒரு கொக்கு இருந்தது. குளக்கரையில் அமைதி யாக இருந்தது. அதற்கு நல்ல பசி. காலையில் சாப்பிடவில்லை. பாவம் பசியோடு பேசாமல் இருந்தது. அப்போது குளத்தில் தண்ணீர் ஆடியது. ஒரு சிறிய மீன் குஞ்சு வந்தது. கொக்குப்பிள்ளை அதைக் கண்டுவிட்டார். "எனக்கு நல்ல பசியாக இருக்கிறது" என்று கொக்கு மீன் குஞ்சிடம் சொன்னது. "அப்படியா! எனக்கும் நல்ல பசியாக இருக்கிறது. நான் அம்மாவிடம் போகின்றேன்" என்று மீன்குஞ்சு ஓடிவிட்டது.

இக்கதையைக் குழந்தைகளுக்குச் சமர்ப்பிக்கும் பொழுது ஆசிரி யர் நடிப்புடன் உரையை இணைத்தல் வேண்டும். "பாவம் பசியுடன் பேசாமல் இருந்தது" என்ற வசனம் ஒன்றே குழந்தைகளின் ஆழ்ந்த மனவெழுச்சியைத் தூண்டப் போதுமானது. கொக்கு மீன் குஞ்சைப் பிடித்திருந்தால் கொக்கின் மீது குழந்தைகள் கொண்ட பரிவும் அனுதாபமும் உடைந்து போயிருக்கும். பசிக்கும்போது குழந்தைகள் என்ன செய்யலாம் என்ற பிரச்சினை இக்கதையின் நடுவிற் குழந்தை களுக்கு முன் வைக்கப்படுகின்றது. இந்த பிரச்சினைக்குரிய தீர்வு தாயாரை நாடுதல் என்பது கதையினூடாகக் குழந்தைகளுக்குத் தரப் படுகின்றது. அத்தோடு ஓர் எதிர் பார்ப்பு ஆவலும் குழந்தை



களிடத்தே தூண்டப்படுகின்றது. மீன் குஞ்சு போய்விட்டது. கொக்கு என்ன செய்தது என்பதுதான் எதிர்பார்ப்பு ஆவல்.

குழந்தைகளுக்குரிய கதைகள் சிறியனவாயும், எளிதானவையா யும், சிந்திக்கத் தூண்டுவனவாயும், ஒழுக்கம் உரைப்பதாயும் இருத்தல் வேண்டும்.

இன்னொரு பாலர் கதையையும் அமைப்பியல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு பெரிய நாவல்மரம் இருந்தது. அதில் பழங்கள் அதிகமாக இருந்தன. நன்றாகப் பழுத்த பழங்கள். மரத்தின் மீது ஓர் அணிற் பிள்ளை இருந்தது. கிளைகளில் தாவித்தாவிப் பாய்ந்தது. பழங் களைப் பிடுங்கிச் சாபபிடட்டது. அங்கே கண்ணன் வந்தான். அணிற் பிள்ளையைக் கண்டான். பழங்களையும் கண்டான். உயரமான மரம். பழங்களைப் பறிக்க முடியாது. "அணிலே எனக்குப் பழங்களைப் பறித்துத் தருகின்றாயா?" என்று கேட்டான். அணில் "ஆம்" என்றது. அதிகமான பழங்களைப் பறித்தது. மெதுவாகக் கீழே போட்டது. கண்ணன் பழங்களைப் பக்குவமாக எடுத்தான், கழுவினான். நண்பர்கள் வந்தார்கள் எல்லாரும் பகிர்ந்து பழங்களை உண்டனர்.

இந்தக் கதையில் பாலர்களுக்குச் சில அடிப்படை விழுமியங்கள் கற்பிக்கப்படுகின்றன. "அன்பு" என்ற விழுமியம் வளர்த்தெடுக்கப்படு கின்றது. அணிலின் மீது அன்பு, நண்பர்கள் மீது அன்பு கட்டியெழுப் பப்படுகின்றது. அணில் பிள்ளையின் தாவிய பாய்ச்சல் நடிப்பு முறையிலே பாலர்களுக்குக் குதூகலத்தை வருவிக்கும். இசைவாக்கச் செயல்முறையில் சாதுவான விலங்குகள் மனிதருக்கு ஒத்துழைப்புத் தரும் என்ற எண்ணக்கரு அணில் பழங்களைப் பறித்துத் தருவதன் வாயிலாக வலியுறுத்தப் படுகின்றது. பாலர்கள் பிறரிடம் உதவியைக் கோருதலும், அதற்குத் துலங்கல் கிடைத்தலும் அணிலின் செயல் களால் சுட்டிக்காட்டப்படுகின்றன. "பகுத்து உண்ணல்" , "கழுவி உண்ணல்" என்ற விழுமியங்கள் கதையின் நிறைவுப் பகுதியிலே உருவாக்கப்படுகின்றது.

பாட்டி கதைகள், நாடோடிக் கதைகள், புராணக் கதைகள் முதலியவற்றைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது, பல்வேறு மனித விழுமியங்கள் அவற்றினூடாகக் கையளிக்கப்பட்டு வருதலைக்

காணலாம். பாலர்கள் வளர வளர அவர்தம் வயதுத் தராதரங்களுக் கேற்றவாறு கற்பிக்கக்கூடிய பல்வேறு கதைகள் காணப்படுகின்றன. வகைமாதிரியாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். தென்னாலி இராமன் கதை, மரியாதை இராமன் கதை, சிறுவர்க்கான சாயி கதைகள், ஈசாப் கதைகள், அரபுக் கதைகள், விக்கிரமாதித்தன் கதை, கண்டர்பரிக் கதைகள், ரொபின்சன் குருசோ கதை, கலிவரது பிரயாணங்கள், தேவதைக் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், அவிவேக பூரண குருவின் கதைகள் முதலியவற்றை இவ்வகையிலே குறிப்பிடலாம்.

நவீன விஞ்ஞான, தொழில் நுட்பவியல் எண்ணக் கருக்களை அறிமுகம் செய்யக்கூடிய கதைகளும் குழந்தைகளின் உளமேம் பாட்டுக்கு அடிப்படையானவை. சில்லின் கதை, காற்றாடியின் கதை, கடதாசியின் கதை, புயலின் கதை போன்றவை தமிழ் மொழியில் ஆக்கப்பட்டு வருதல் நவீன கதை பயில்வில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.



# மீட்புக்குரிய சிறார்கல்விச் சிந்தனைகளும்

**ச**மகாலச் சிறார்கல்விச் சிந்தனைகளில் உளவியல் மயப்பாடும், சிறார் உரிமைகளின் வலியுறுத்தல்களும் மேலோங்கியிருந்தாலும் குறிப்பிட்டுக் கூறக் கூடிய பல பின்னடைவுகளும் காணப் படுகின்றன. பெரும்பாலான சிறார்கல்விச் சிந்தனைகளும் உளவியல் அணுகுமுறைகளும் சமூக நிரலமைப்பின் உயர்ந்த நிரல்களில் வாழ்வோரையும், மத்திய தர வகுப்பினரையும் குவியப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டி யுள்ளது. சமூக நிரலமைப்பின் தாழ்மட்டங்களில் வாழும் சிறுவர்கள் கல்வி அமைப்பு நிலையிலும், செயற்பாட்டு நிலையிலும் நிராகரிப் புக்கு உள்ளானவர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்நிலையின் அவர்களின் மீட்புக்குரிய சிறார் கல்விச் சிந்தனைகளை முன் மொழிய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மீட்புக்குரிய சிறார் கல்வி தெளிவான கருத்தியலை அடிப் படையாகக் கொண்டது. பொருளாதார நிலையிலும், பண்பாட்டு நிலையிலும், இனக்குழுமநிலையிலும் தொடர்ச்சியான சுரண்டல் வட்டங்களுக்கு உள்ளாகும் அரவர்களது குடும்பத்தினருக்கும் சுரண்டலின் அவலங்களையும், அவற்றிலிருந்து மீண்டெழுவதற் கான அறிகை வளத்தையும் ஏற்படுத்தல் வேண்டும். அறிகைத் தீவிரம் மிக்க வாழ்க்கைச் செயற்பாட்டினையும் அந்தச் செயற் பாட்டிலே சிறார்க்கான கல்வியின் முக்கியத்து வத்தையும் வலி யுறுத்த வேண்டியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் அடித்தளத்து மாந்தர்களை வினைப்படும் குழுக்களாக ஒன்றிணைத்தலின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. பாரம்பரியமான ஆற்றுகை நுட்பங்கள் அரங்கியல் நுட்பங்கள், முதலியவை வினைப்படும் குழுக்களை ஆக்குவதற்குப் பயன்படக் கூடியவை.

சமூக அடித்தளத்து மாணவர்கள் தமது வாழ்விடங்களிலே கற்றலை மேற்கொள்வதற்குப் பொருத்தமான நடவடிக்கையாக பாரம்பரிய அரங்கியல் உபாயங்களையும், மரபு வழியான சீர்மிய நுட்பங்களையும் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. மத்தியதர வகுப்பினருக்குரிய ஊக்கற் கட்டுமானங்களே இன்றைய நியமமான கல்விச் சூழலிலே பெருமளவில் வளர்ச்சியுற்றுள்ளன. மத்தியதர வர்க்களுக்குரிய ஊக்கல் விசைகள் மட்டுமே கல்வியைச் சிறைப் பிடித்துள்ளன. இந்நிலையில் சமூகத்தின் அடிதள மக்களைக் குவியப் படுத்தும் ஊக்கல் உபாயங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அல்லது வறியமாணவர்களிடத்து சிறிதளவு முன்னேற் றம் காணப் பட்டாலும், அவற்றை மேலும் விசைப்படுத்துவதற்குரிய ஊக்கல் நுட்பங்களை வழங்குதல் வேண்டும். இந்தச் செயற்பாடு "கிளர் ஊக்கல்" எனப்படும்.

எவ்வாறான இயற்கை அழிவுகள், பொருளாதாரத்தாக்கங்கள், கல்வி நிர்ப்பந்தங்கள் ஏற்படும் பொழுதும் சமூகத்தின் அடித்தள மக்களே தீவிர பாதிப்புக்கு உள்ளாகின்றனர். தாக்கங்களுக்குரிய மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது மத்திய தரத்தினரே கூடிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இது "தொங்கும் தோற்பாடு" எனப்படும்.

சிறார்க்குரிய கலைத்திட்ட உள்ளடக்கம் மொழி நடை, பாடப் பொருள், நிகழ்ச்சிச் சந்தர்ப்பங்கள், மதிப்பீட்டு நியமங்கள் முதலி யவை உயர் மத்தியதர வகுப்பினரைக் குவியப்படுத்தியே உருவாக்கப் பட்டுள்ளன. இவ்வாறான 'இறுகிய' நிலை சமூகத்தின் அடித்தளத்து மக்களை கல்விச் சுற்றுவட்டத்திலிருந்து இயல்பாகவே வெளியேற வைத்து விடுகின்றது. இந்தச் செயற்பாடு "மறைமண்டலம்" எனப் படும்.

கல்வி தொடர்பான தீர்மானங்களை உயர் மத்தியதரத்து மனோபாவம் கொண்டவர்களே பெருமளவில் மேற்கொள்வதால், அடிமட்டத்துமக்கள் நிராகரிப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் மேலும் விசைகொள்ளுகின்றன. சிறார்க்குரிய இலவசக்கல்வி என்ற முன்னெடுப்புக்களைச் சுற்றி நேர்முகமானதும், மறைமுகமானது மான கட்டணங்கள் எழுந்துள்ளமை மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.



மேலைத் தேயத்தில் உருவாக்கப்பட்ட உளவியற் கோட்பாடு கள் மற்றும் கற்பித்தல் அணுகுமுறைகள் முதலியவை எமது சமூகத்து அடித்தள மக்களின் எழுச்சிக்கு வளஞ் சேர்க்க முடியாத மட்டுப் பாடுகளைக் கொண்டுள்ளன. வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக் காட்டி னைக் குறிப்பிடலாம். நடத்தைக் கோட்பாட்டில் தூண்டி - துலங்க- மீளவலி யுறுத்தல் என்றவாறு தொடர்ச்சிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. எமது பண்பாட்டுப்பின் புலத்தில், எண்ணக்கருவை விளங்கிய நிலையிலும், துலங்கலை வெளிப்படுத்த முடியாத "மௌனநிலை" அடித்தளத்து மக்களிடையே உருவாக்கப்பட்டுள்ள நிலையில் மேற்குறித்த நடத்தைவாத அணுகுமுறை செயலிழந்து விடுகின்றது.

அறிகை உளவியலில் அனுபவங்கள் வழியாக எழும் 'திரளமை ப்பு' (சீமா) கற்றலிலே சிறப்பார்ந்த இடத்தைப் பெறுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ள வரன்முறைப்படுத்தப்பட்ட பாடத் தொகுதிகளுக்குரிய அனுபவத் திரளமைப்பை சமூகத்தின் அடிநிலைகளிலே வாழ்வோரால் உருவாக்கிக் கொள்ள முடியாத கட்டமைப்புக் காணப்படுகின்ற நிலையில் வறுமை, நிராகரிப்பு, சமூக அழுத்தங்கள் முதலியவற்றுக் குரிய கருத்தியல் மீட்பை அறிகை உளவியலால் வழங்க முடியா துள்ளது.

மேலைப்புல உளவியலை எதுவித திறனாய்வுமின்றி எமது சூழலுக்குப் பிரயோகிக்கும் செயற்பாடுகள் கடந்த ஐம்பது ஆண்டு களுக்கு மேலாக எமது கல்விச் சூழலில் மீள மீள வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. எமது பண்பாட்டு வேர்களில், உளவியலும், சீர்மியமும் இல்லை என்ற உணர்வுகள் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. குடியேற்றவாதக்கல்விக் கோட்பாடுகளில் மட்டுமன்றி நவீன உலகமயமாக்கற்கல்வியிலும் இந்த உளப்பாங்கின் ஆதிக்கம் மேலும் வலிதாக்கப்படுகின்றது.

சமூகத்து அடித்தள மக்களது பண்பாட்டு கோலங்களை மேலு யர்ந்த மக்களின், பண்பாட்டுக் கோலங்களால் 'மேற்கவித்துவிடும்' செயற்பாடுகளும், மேலுயர்ந்தோரால் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமிய அனுபவத் தொகுதிகள் அறிவுக்கையளிப்பு, கலையாக் கங்கள் சடங்குகள், வழிபாட்டுமுறைகள் முதலியவை அறிகை நிலை

யில் தாழ்ந்தவை என்றும், செம்மைப்படுத்தப்பட வேண்டியவை என்றும்இ கருத்தேற்றம் செய்யப்படுகின்றன. இந்தச் செயற்பாடு "அறிகை மேற்கவிப்பு" எனப்படும். வெளிநாட்டுப் பணவரவுகளும், உலக மயமாக்கலின் விளைவுகளும் அடித்தளத்து மக்களை மேலும் பின் தாங்க வைத்து விடுகின்றன.

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பரிகாரக்கற் பித்தல் முறைமை, இழப்பீடுகளை ஈடுசெய்வதற்கான கல்வி முதலிய வற்றின் அனுகூலங்களை மத்தியதரவகுப்பு மாணவர்களே பெரு மளவிலே பெற்றுக் கொள்ளுகின்றார்கள். சமூகத்தின் அடித்தள மாணவர்களைக் குவியப்படுத்தும் "எழுச்சிக் குவியக்" கற்பித்தல் முறையை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது மாற்று வகையான ஒரு கற்பித்தல் முறையாகும். சமூக நிராகரிப்புக்கும் வஞ்சித்தலுக்கும் உள்ளான சிறுவர்களைக் குவியப்படுத்தி இந்தக் கற்பித்தல் முறை எம்மால் உருவாக்கப்பட்டுள்ளது.

வறுமையின் இயல்பை இனங்காணுதல், மாணவரின் உடல், உள, மனவெழுச்சி, மொழி, இசைவாக்கம் முதலியவற்றுடன் தொடர்புடைய புதைந்துள்ள ஆற்றல்களை இனங்காணுதல், தமது ஆற்றல்களை அவர்களால் வெளிக்கொண்டுவர முடியாதிருப்பதற் குரிய தடைகளை இனங்காணுதல் முதலியவற்றுடன் எழுச்சிக் குவியக்கற்பித்தல் முறை ஆரம்பமாகும். இன்றைய பாடசாலை களிலே காணப்படும் பொதுவான கற்பித்தல் முறைகளில் ஆற்றல் இருப்பை இனங்காணுவதிலும், அடித்தள மாணவரின் வெளி யீட்டுத்திறன்களைத் தனியாள் ஒவ்வொருவரையும் முதன்மைப் படுத்தி அறிந்துகொள்வதிலும் உரிய கவனம் செலுத்தப்படுவ தில்லை.

கற்பிக்கும் பொழுது அவர்களின் பேச்சுமொழி, அவர்கள் பயன் படுத்தும் மரபுத் தொடர்கள், உவமைகள், உருவகங்கள் முதலிய வற்றுக்கு சிறப்பார்ந்த இடத்தை வழங்குதல் எழுச்சிக் குவியக் கற்பித்தலின் சிறப்பார்ந்த பரிமாணங்களாகும். அவர்களது சூழலிற் கிடைக்கப் பெறும் பொருட்களைக் கற்றலுக்குரிய பொருட்களாக மாற்றும் பயிற்சிகளை வழங்குதலும் இந்தக் கற்பித்தல் முறையின் பாற்பாடும்.



கற்றலுக்கான குறுக்கீடுகளையும் கவனக்கலைப்பான்களையும், இனங்கண்டு அவற்றின் செறிவைக் குறைத்தலும், இல்லாதொழித்த லும் ஆசிரியரால் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.

கற்றலிலே மாணவர்கள் சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டும் பொழுது, அவர்களை மேம்படச் செய்வதற்குரிய கிளர் ஊக்கல் உபாயங்களை முன்னெடுத்தல் வேண்டும். பரிகாரக்கற்பித்தலில் இருந்து எழுச்சிக்குவியக் கற்பித்தலை நோக்கி நகரவேண்டியுள்ளது.

# GLOSSARY OF CHILD PSYCHOLOGY

**ACTION PATTERN வினைக்கோலம்:**

புலன் இயக்க உளவமைப்புக்கேற்றவாறு நெறிப்படுத்தப்படும் செயல்கள் (பியாசே).

**ADAPTATION தழுவலாக்கம்:**

சூழலோடு பொருத்தப்பாடு கொள்ளும் உளம் சார்ந்த உடல் சார்ந்த இசைவு நிலை.

**AFFECT உணர்வாடல்:**

மனவெழுச்சி, உணர்ச்சி, மனநிலை முதலியவற்றை உள்ளடக்கி நிற்பது.

**ALIMENT புதிகை:**

உளவமைப்பானது உள்வாங்கிக் கொள்வதற்கு தரப்படும் புதிய பொருள் அல்லது புதிய கருத்து.

**ANAL STAGE குதப்படிகை:**

கழிவை வெளியேற்றுதல் அல்லது அடக்குதல் வழியாக குழந்தைகள் இன்பமடையும் உளப் பாலியல் வளர்ச்சி நிலை.

**ANIMISM உயிர்ப்பூட்டல் :**

உயிரற்ற பொருள்களுக்கு உயிர் உண்டு என்று கருதும் 2 வயதுக்கும் 6 வயதுக்கும் இடைப்பட்ட வளர்ச்சி நிலை (பியாசே)

**ASSOCIATION இணைப்பூட்டல் :**

சூழலில் உள்ள இரண்டு பண்புக் கூறுகளை ஒன்றிணைத்தல்.



**ATTACHMENT தாயணைப்பு :**

குழந்தைக்கும் தாய்க்குமிடையே நிகழும் ஆழ்ந்த அரவணைப்பு. இந்த அரவணைப்பில் நிகழும் குறுக்கீடுகள் உளவளர்ச்சியைப் பாதிக்கும்.

**BABBLING முன்மழலை :**

மழலைக்கு முன்னதாக குழந்தை எழுப்பும் ஒலிகள்.

**BEHAVIOUR THERAPY நடத்தை மாற்றியல் :**

நடத்தைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உளப் பிணிகளை மாற்றும் உபாயம்.

**CHRONOLIGICAL AGE கால வயது**

ஒருவர் பிறந்த திகதியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப் படும் வயது.

**CONCEPT எண்கரு:**

சிந்தனையின் ஓர் அடிப்படை வகைப்பாடு.

**CONCRETE OPERATIONS நியம இயக்குகை :**

உளவமைப்பின் தருக்க நிலைப்பட்ட செயற்பாடு (பியாசே).

**CONDITIONING நிபந்தனைப்பாடு:**

நிபந்தனைப்படுத்தப்படும் துலங்கலைக் கற்றுக் கொள்ளும் செயற்பாடு.

**CONSERVATION நிலைகாப்பு :**

உருவமைப்பு மாறினாலும் பொருள்களின் திணிவும் அளவும் மாறாதிருக்கும் நிலை (பியாசே)

**DETACHMENT விலக்கீடு :**

தாயிடமிருந்த ஒரு குழந்தை நீண்ட காலத்துக்குப் பிரித்து வைக்கப்படுவதால் ஏற்படும் உளவியற் பின்வாங்கல்.

**DEVELOPMENT மேம்பாடு :**

குழந்தையின் பல்வேறு பரிமாணங்களிலும் தோன்றும் சிக்கலான முன்னேற்றக் கோலங்கள்.

**EGOCENTRISM அகநடுவம் :**

குழந்தை தம்மை நடுநாயகப்படுத்தி அறிதலும், உணர்தலும் அனுபவித்தலும்.

**EQULIBRIATION சமவியலாக்கல் :**

புதிய அனுபவத்தை எதிர்கொள்ளும் பொழுது முரண்பாடு களை நீக்கி குழந்தை உளச் சமவியலை ஏற்படுத்தும் நிலை.

**ETHOLOGY இசைவாக்கலியல்**

சூழலுக்கு இசைவாக்கம் செய்யும் விலங்கு நடத்தைகள் பற்றிய ஆய்வு.

**EXTINCTION தெரிநீக்குகை :**

விளைவை உண்டாக்கும் துலங்கலின் அளவைக் குறைத்தல்.

**FORMAL OPERATIONS முறைசார் இயக்குகை :**

தருக்கம், கணிதம் முதலியவற்றை அடியொற்றிய சிந்தனைச் செயலாற்றுகை.

**FREE ASSOCIATION கட்டற்ற இணைப்பு :**

ஆழ்மன உணர்வுகளைத் தடையின்றி வெளிப்படுத்தும் உளவியல் உபாயம்.

**GENETIC INHERITANCE பிறப்பியத் தேட்டம் :**

பிறப்புரிமை வழியாக ஒருவர் பெற்றுக் கொள்ளும் பண்புக் கூறுகள்.



**IMPRINTING உட்பதிகை :**

பார்த்து உள்ளத்தே பதிக்கும் பின்னோக்கித் திருத்தியமைக்க முடியாத பதிவுகள்.

**IN NATE உள் வளம் :**

பிறப்புரிமை வழியாக ஒருவரிடத்தே உட்பொதிந்துள்ள தேட்டம்.

**INVARIANCE மாறாத் தொடர் :**

மனித வளர்ச்சியிலே தொடராக எழுகின்ற மாறாவளர்ச்சிக் கட்டங்கள் (பிராய்ட், பியாசே).

**LAJENCY STAGE மறைப்படிகை :**

உளப்பாலியல் விருத்தியில் ஒரு முக்கியமான கட்டம். பாலியல் உந்தல் மறைந்து ஆனால் வேகமுடன் தொழிற்படல் (பிராய்ட்).

**LIBIDO லிபிடோ :**

பாலியல் இயல்பூக்கத்தின் வலு (பிராய்ட்)

**LOGOCAL OPERATIONS அளவை இயக்குகை :**

விதிகளைத் தழுவிச் செல்லும் உளச்செயற்பாடு (பியாசே)

**MASTERY PLAY மீயாற்றுகை விளையாட்டு :**

பிறப்பிலிருந்து இரண்டு வயது வரை வெவ்வேறு இயக்க ஆற்றல்களைக் குழந்தை மீட்டெடுக்கும் விளையாட்டு (பியாசே)

**MENTAL AGE உளவயது :**

நுண்மதி அடைவைக் குறிக்கும் வயது. இது காலவயதிலும் வேறுபாட்டிருக்கலாம் (பீனே)

**MENTAL STRUCTURES உளவமைப்புக்கள்:**

ஒருவரது அனைத்துச் செயற்பாடுகளையும் நெறிப்படுத்தும் மூளையின் அறிவுத்திரள்.

**MORAL REALISM அறநடப்பியல் :**

நோக்கத்தைக் கருத்திற் கொள்ளாது விளைவைக் கொண்டு சரியையும் பிழையையும் தீர்மானித்தல் (பியாசே).

**OBJECT PERMANENCE பொருள் நிலைத்துவம் :**

ஒரு பொருள் காட்சிக்குத் தென்படாவிடிலும் அந்தப் பொருள் எங்கோ உள்ளது என்ற விளக்கம் (பியாசே).

**OPERATIONS இயக்குகை :**

உளத்தின் இயக்கத் தொழிற்பாடுகளைக் குறிக்கும் பியாசேயின் எண்ணக்கரு.

**ORAL STAGE வாய்ப்படிகை :**

உளப்பாலியல் வளர்ச்சியின் முதலாவது கட்டம் குழந்தை வாய் வழிதாகத் தனது இன்பங்களை நிறைவேற்றிக் கொள்ளல் (பிராய்ட்).

**PLAY THERAPY மிடிபயம் :**

யாதாயினும் பொருள் பற்றிய பகுத்தறிவற்ற பயம்.

**PLEASURE PRINCIPLE விளையாட்டு மாற்றியல் :**

நனவிலி மனச்சுமைகளை வெளியிட உதவும் விளையாட்டு (பிராய்ட்).

**PLEASURE PRINCIPLE மகிழ் கோட்பாடு :**

நடப்பு நிலவரங்களை விடுத்து தொடு கற்பனைகளால் இன்பம் காணும் இட் எனப்படும் ஆளுமைக் கூறின் தொழிற்பாடு (பிராய்ட்).



**PRE OPERATIONAL PERIOD முன் இயக்குகைப் பருவம் :**

தருக்க நிலைய விடுத்து மொழிக் குறியீடுகளால் குழந்தை தனது உளவாற்றலை இயக்கும் பருவம் 2 - 6வயது வரை (பியாசே).

**PSYCHO ANALYSIS உளப்பகுப்பியல் :**

உளத்தைப் பகுத்து ஆராயும் சிக்மன்ட் பிராய்ட்டின் கண்டு பிடிப்பு.

**PSYCHOLOGY உளவியல் :**

நடத்தை, சிந்தனை உணர்வுகள் முதலியவற்றை ஆராயும் கற்கை.

**PSYCHO SEXUAL உளப்பாலியல் :**

பாலியல் சார்ந்த நடத்தைகளை உளவியல் நோக்கியல் ஆய்வு செய்தல்.

**REALITY PRINCIPLE நடப்பியற் கோட்பாடு :**

ஈகோ எனப்படும் ஆளுமைக் கூறினுடைய தருக்க நிலைப் பட்ட தொழிற்பாடு (பிராய்ட்).

**REGRESSION பின்னழுத்தல் :**

வளர்ந்தோர் குழந்தைகளைப் போன்று நடத்தைகளை உருவாக்குதலும் உணர்வு கொள்ளுதலுமான செயல்முறை.

**RE INFORCEMENT மீளவலியுறுத்தல் :**

விரும்பத்தக்க துலங்கலை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கை.

**RE VERSIBILITY பின் திரும்புகை :**

ஒரு செயலின் ஆரம்ப நிலைக்கு மீண்டு செல்லக்கூடிய உளத்திறன் (பியாசே).

**REWARD வெகுமதி :**

துலங்கலைத் தொடர்ந்து வழங்கப்படும் மகிழ்ச்சி தரும் செயல் அல்லது பொருள்.

**SCHEMA திரள்கை :**

உள்ளத்தின் செயற்பாடுகளுக்குரிய கட்டமைப்பு

**SENSORY MOTOR PERIOD புலனியக்கப் பருவம் :**

புலன்கள் வழியாக உருவாக்கப்படும் செயல் வழி நுண்மதி இயக்கம் பிறப்பிலிருந்து இரண்டு வயது வரை (பியாசே).

**SEQUENCE தொடரியம் :**

விருத்திப் படிநிலைகளின் தொடர்ச்சியான அமைப்பு.

**SEX ROLE பாலியல் நடிபங்கு :**

சமூக சூழலுக்கேற்ப ஆண், பெண் வேறுபாடுகளைப் புலப்படுத்தும் பாத்திரங்களை மேற்கொள்ளல்.

**SYMBOL குறியீடு :**

நனவிலி உள்ளத்தைப் புலப்படுத்தும் சொற்கள், படிமங்கள், பொருள்கள், செயல்கள்.

**TRAUMA உளவடு :**

உளவியல் நிலைப்பட்ட மனப்புண்.

**UNCON SCIOUS நனவிலி :**

மனிதரால் சாதாரணமாக உணர்ந்துகொள்ளப் பட முடியாத அடக்கம் உணர்வுகளைக் கொண்ட ஆழ்மனச் செயல்முறை.



# சிறார் கல்விக் கலைச்சொற்றொகுதி

Adjustment Path Analysis : **இசைவாக்கற் பாதைப் பகுப்பாய்வு:**
இசைவாக்கம் செற்வதற்குரிய மாற்று வகையான பாதைகளை ஆய்ந்து அறிதல்.

Affective Psychoses: **எழுச்சிநிலை உளப்பிணி :**
மனவெழுச்சிகளைப் பெரிதாக்குவதாலும், விகாரப்படுத்துவதாலும் தோன்றும் உளப்பிணி.

Affectothymia : **எழுச்சி வினையம்:**
அதீத மனவெழுச்சிகளுடன் இணைந்த பங்குபற்றும் நடத்தைக் கோலம்.

Age Anxiety: **வயதுப் பதகளிப்பு:**
வயது மூத்தல் தொடர்பாக உள்ளத்திலே நிகழும் கொந்தளிப்பு.

Aids: **துணையம்:**
ஒருவரது ஆற்றலுடன் ஒன்றிணைந்து செல்லக்கூடிய செயலமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கை.

Altruism: **தனியுன்னதம்:**
அதிதீவிரப் பாங்கான கிளர்ச்சி கொண்ட நடத்தை.

Autism: **நற்கோடல்:**
எவை சாதகமானவையோ அவற்றில் நமபிக்கை வைக்கும் இயல்பு.

**Behaviour Therapy:** ***நடத்தை மாற்றியல் :***
வெகுமதி அல்லது நிபந்தனைப்பாட்டின்
வழியாக ஒருவரது நடத்தைகளை மாற்றி
யமைக்கும் உளவியற் சிகிச்சை முறைமை

**Behaviour Units:** ***நடத்தை அலுகுகள்:***
ஒருவரது தனியாள் நடத்தைகள் சமூகத்தி
லுள்ளவர்களது நடத்தைகளுடன் எவ்
வாறு ஒன்றித்தும் வேறுபட்டும் செல்கின்
றன என்பதைக் கண்டறியும் அலகுகள்.

**Bivariate Experiment:** ***இருமாறிப் பரிசோதனை:***
ஒரே நேரத்தில் இரண்டு மாறிகளை
அளவீடு செய்யும் வகையில் உருவாக்கப்
படும் பரிசோதனை வடிவம்.

**Chemotherapy:** ***வேதி மாற்றியல்:***
உளஒழுங்குக்குலைவினை மருந்துகளா
லும் உயிர்வேதிப் பொருள்களாலும் மாற்
றும் சிகிச்சை முறை.

**Chiasms:** ***தெரிவியங்கள்:***
இயங்கு நிலைச் சீராக்கலின் போது விருப்
பத்துக்குரிய தெரிவுகளை மேற்கொள்ளும்
செயற்பாடு.

**Comention:** ***இணங்கலியம்:***
குழுவின் நடத்தைகளுடன் இணங்கிச்
செல்லும் ஆளுமைப் பண்புக் கூறு.

**Common Trait:** ***பொதுப்பண்புக்கூறு:***
சமூகத்திலுள்ள அனைத்து உறுப்பினர்
களிடத்தும் காணப்படும் ஏற்றுக்கொள்ளப்
பட்ட பொதுவான பண்புகளின் கூறு.



**Confluence Learning:** ***இருதரக்கற்றல்:***
ஒரே நேரத்தில் இரண்டு வேறுபட்ட
இயங்கு இலக்குகளை நிறைவேற்றுகின்ற
கற்றல் செயல் முறை.

**Curiosity:** ***உசாவல் விருப்பு:***
எதையும் துருவி ஆராயவேண்டும் என்ற
ஆளுமைக்கூறு.

**Covert Anxiety:** ***மூடுநிலைப் பதகளிப்பு:***
தனது நடத்தை வெளிப்பாடுகள் பதகளிப்
பின் வெளிவீச்சு என்பதை அறியாதிருக்
கும் உளநிலை

**Dominance:** ***மேலாள்கை:***
தன்னம்பிக்கை, பிடிவாதம், அழுத்தம்
கொடுத்தல் முதலிய பண்புக்கூறுகளைக்
கொண்ட ஆளுமைப் பண்பு.

**Ego Strength:** ***அகவல்லமைபு:***
எத்தகைய மனவெழுச்சி இடர்களையும்
தாங்கிச் செல்லும் இயல்பு.

**Ergic Tension:** ***தெறிப்புந்தல் நெருக்கு வாரம்:***
உள்ளிருந்து கிளர்ந்தெழும் ஒரு வகை
அடிப்படை உந்தலால் எழும் நெருக்கு
வாரமும் அதீத நடத்தையும்.

**Extrovert:** ***புறமுகியர்:***
உணர்வுகளை அடக்காது வெளிப்படுத்
தும் ஆளுமை கொண்டோர்.

**Exuberance:** ***ஆற்றிலியம்:***
மீத்திறன் கொண்ட ஆற்றலை உள்ளடக்
கிய ஆளுமைப் பண்புக் கூறு.

**Function Fluctuation:** ***தொழிலித்தளம்பல்:*** நேரத்துக்கு நேரம் மாற்றமடைந்து கொண்டிருக்கும் ஆளுமைப் பண்புக்கூறு.

**Guilt Proneness:** ***குற்ற விதிர்ப்பம்:*** குற்றவுணர்வுகளையே தாமதிக்காது முன்கூட்டி வெளியிடும் ஆளுமைப் பண்புக்கூறு.

**Humour Test:** ***நகையறி தேர்வு:*** எத்தகைய நகைச்சுவையை ஒருவர் விரும்புகின்றார் என்பதைக் கண்டறியும் தேர்வு.

**Individual Test:** ***தனியாள் தேர்வு:*** ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவருக்கும் மட்டுமே செயற்படுத்தக்கூடிய ஆளுமைத் தெர்வு.

**Inducement:** ***புகுதூண்டி:*** ஒருவரது செயற்பாடுகளைத தூண்டும் வண்ணம் அவருக்குள் நுழைக்கப்படும் விசைகள்.

**Instrument Factor:** ***கருவிசார் காரணி:*** ஒருவரது ஆளுமையைப் புலப்படுத்தாது, அளவிடும் கருவிக்குரிய இயல்பை வெளிப்படுத்தும் நிலை.

**Introvert:** ***அகமுகியர்:*** உணர்வுகளைப் புறலைப்படுத்தாது அடக்கி வைக்கும் ஆளுமை கொண்டோர்.

**L – data:** ***வாழ்க்கைத் தரவு:*** இயற்கையான சூழலில் ஒருவரது நடத்தைகள் எவ்வாறு அமைந்தன என்பதை விளக்கும் தரவுகள்



**Leptosomatic:** ***மெலிகை:*** ஒல்லியான வளைந்த உடற்கட்டு

**Libido:** ***லிபிடோ:*** பாலியல் உந்தார் ஏற்படும் உள வலு வைக் குறித்து சிக்மன்ட் பிராய்ட் உரு வாக்கிய எண்ணக் கரு.

**Misperception:** ***பிறழ்புலக்காட்சி:*** நியமமான புலக்காட்சியிலிருந்து வில கலைக் கொண்ட காட்சி.

**Mobilisation:** ***செயற்சிந்தல்:*** ஒருவர் தமது ஆற்றல்களையும் திறன் களையும் விரைந்து பயன்படுத்தும் செயல்.

**Modality:** ***செய்முறைமை:*** ஆற்றல், மனோநிலை, ஊக்கல் முதலாம் செயல்முறைமைகள் ஆளுமையிலே விளக் கப்படுகின்றன.

**Module:** ***இதவடிவம்:*** ஒருவர் தாமாகவே கற்றுக்கொள்வதற் கென உருவாக்கப்பட்ட நெகிழ்ச்சி கொண்ட ஒரு கற்றல் கற்பித்தல் வடிவம்.

**Nature Ratio:** ***இயற்கை விகிதம்:*** ஒருவரது ஆளுமையில் பாரம்பரிய காரணி களின் அளவைச் சூழற் காரணிகளுடன் ஒப்பிட்டுக்கூறும் விகிதம்.

**Overt Anxiety:** ***வெளித் துலங்கு பதகளிப்பு:*** தனக்குரிய பதகளிப்பை ஒருவர் அறிந் திருப்பதும் வெளியில் தயார் நிலையில் இருப்பதும்.

Parmia: **பயப்பழக்கம்:** பயமுறுத்தலுக்குப் பழக்கப்பட்ட ஆளுமைப்பாளர்.

Personality: **ஆளுமை:** ஒருவரது பல்வேறு இயல்புகளினதும் சந்தர்ப்பங்களுக்குரிய துலங்கல்களினதும் கூட்டுமொத்த வடிவம்.

Praxernia: **தெளிநடை:** தெளிந்த, உற்சாகமான, நடை முறைப் பாங்கான, பாரம்பரிய நடத்தை.

Premsia: **தளிர்நடை:** குழந்தை உள்ளமும் பிறர்மீது தங்கியிருத்தலும், உணர்ச்சி பூர்வமானதுமான நடத்தை

Protension: **முற்கவி நெருக்கீடு:** தம்மைப்பற்றிய எண்ணம் மேலோங்கியிருத்தல், பொறாமை, ஐயுறவு நடத்தைகள் வெளிப்படுத்தலும் அவற்றோடிணைந்த உள்ளார்ந்த நெருக்குவாரம் நிலவுதலும்.

Psychometry: **உளக்கணிமை:** கணிதவியலடிப்படையில் உளவியல் அளவீடுகளைச் செய்யும் கலை.

Psychosis: **அம்மல்:** நடப்பியல் நிலவரங்களில் இருந்து உள்ளம் விடுபட்டு நிற்கும் உள ஒழுங்குக் குலைவு நிலை.



Schizophrenia: **உளநோய்ம்மை:** சகமனிதர்களில் இருந்து விடுபட்டு நிற்றலும், நடப்பியலோடு இணையாத சிந்தனைகள் மேலோங்கியிருப்பதுமான உளநலம் பாதிப்புற்றநிலை.

Somatype: **உடல்சார்வகை:** உடற்கூற்று அடிப்படையில் ஆளுமையை வகைப்படுத்தல்.

Superego: **மீயகம்:** சமூகத் தொடர்புகள் வாயிலாக மேம்பாடு கொண்ட ஒழுக்கங்களை முன்னெடுக்கும் சிந்தனை.

Surgency: **களிநடத்தை:** உற்சாகமும் மகிழ்ச்சியும் கொண்ட மகிழ்ச்சியான நடத்தை இயல்பு.

Threctia: **மிகையொதுங்கல்:** அதிக வெட்கமும் மிகுந்த பயமும் கொண்ட நடத்தை.

Transference Neuroses: **மாறுகை மீடியும்:** லிபிடோவின் உந்தல்கள் பதகளிப்பாக நிலைமாறி நரம்புப் பிணிகளை ஏற்படுத்தும் நிலை.



பேராசிரியர் சபா ஜெயராசா

தமிழ் மண்ணிற்கு சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்கித் தந்த கல்விமான்களுள் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களுக்குத் தனியிடம் உண்டு. ஆசிரியராகப் பணியைத் தொடங்கி பேராசிரியராக தன்னை உயர்த்திக் கொண்டவர். தனது நிலைக்கு மற்றவர்களையும் உயர்த்துவதற்கு அயராது உழைப்பவர். தன் மாணவர்கள் சிறந்த சிந்தனையாளர்களாக மிளிர வேண்டும் என்ற ஆவல் கொண்டவர். தன் வாழ்வை கல்விக்காகவே அர்ப்பணித்தவர். நவீன சிந்தனைகளை தன்னகத்தே உள்வாங்கிக் கொள்பவர். மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பவர். மண் மீது அளவுக்கதிகமான பற்றுறுதி கொண்டவர். தனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புபவர். கல்வியுலகிற்கு பெறுமதிமிக்க தமிழ் நூல்களைத் தந்துகொண்டிருப்பவர். குழந்தை இலக்கியத்தின் மீதும் குழந்தை உளவியல் மீதும் தனிக்கவனம் செலுத்துபவர். தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்கித் தந்து கொண்டிருப்பவர். சிறந்த ஆலோசகர். கல்வி உலகில் நடமாடும் பல்கலைக்கழகம் என்று கூறும் அளவிற்கு பல்துறைப் புலமை மிக்கவர்.

**வி.என்.எஸ். உதயசந்திரன்.**

ISBN 955-9396-09-9